www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

පක්කම් 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

எப்.19–25,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 253

## எதிரும் - புதிரும்

## போர் அரங்க மாற்றங்கள்



## மீண்டும் கப்டன்?

## மகாராணியின் முன்னாள் காதலர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## திருவிழாக் கடைகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'யாழ்ப்பாணத்துக்கான
கப்பல் சேவை கேட்டு
மக்கள் போராட்டம்!'

'முகாம் தடுத்துவைப்பை
கண்டித்து
மக்கள் உண்ணாவிரதம்!'

'விடுதலை கோரி
தமிழ்க் கைதிகள்
சிறையில் போராட்டம்!'

'அவசரகால சட்டத்தின்கீழ்
தமிழ் மக்கள்
அவமானப்படுத்தப்படுவதை
கண்டித்து
இந்து அமைப்புக்கள் எழுச்சி!'

மக்கள் போராடத் தயாரில்லை.
என்று தமிழ்க் கட்சிகள்
கூறி வருவது
அப்பட்டமான பொய் என்பதை
தாமாகவே போராடும்
மக்கள் நிரூபித்து வருகின்றனர்!

மக்கள் போராடத் தயாரில்லை,
என்றால்கூட
நீதி கேட்டுப் போராடுமாறு
மக்களைத் தயார்ப்படுத்துவது
கட்சிகளின் கடமை!

ஆனால், இங்கே
கட்சிகள் என்பது
திருவிழாக் கடைகளாக
மாறிவிட்டன!

மக்களின் அவலங்களையும்
அந்தரிப்புக்களையும்
தங்கள் போலி உரைகளின்
கருப்பொருளாகவும்,
தங்கள் போலி அறிக்கைகளின்
மூலப் பொருளாகவும்
தமிழ்க் கட்சிகள் கருதுகின்றன!

எனவேதான், மக்கள்
விழிப்புற்று விடக்கூடாது
என்பதில் அரசைவிட
தமிழ்க் கட்சிகளுக்கே
அதிக அக்கறை!

வெளிநாட்டு வானொலி
ஒன்றில் கூறினார்களாம்;
"இந்தத் தமிழ்க்கட்சிகளுக்கு
அன்று ஆயுதமும்
ஒழுங்காக ஏந்தத் தெரியவில்லை!
இன்று அரசியலும்
ஒழுங்காக நடத்தத் தெரியவில்லை!"

அக் கூற்று
சரி என்றே தோன்றுகிறது!

அன்று தங்கள்
இயலாமைகளுக்கு
புலிகளைக் குற்றம் சாட்டினர்!

இன்று- தங்கள்
சுயநல சமரசங்களுக்கு
மக்கள்மீது
பழியைப் போடுகின்றனர்!

"புலிகள் எங்களை
போராட அனுமதித்திருந்தால்
புகுந்து விளையாடியிருப்போம்!"
என்று முன்னர் உரைத்தனர்.

"மக்கள் போராடத் தயாரில்லை;
நாம் என்ன செய்வது?"
என்கின்றனர் இன்று!

எல்லாமே, தங்கள்
இயலாமைகளுக்கான
நியாயப்படுத்தல்கள்தான்!

மக்கள் ஏன்-
இக் கட்சிகளே தங்கள்
உறுப்பினர்களுடன் மட்டுமே
போராட்டங்கள் நடத்தலாமே?

நாடாளுமன்றத்தில் உள்ள
தமிழ் பா.உக்கள்
ஒன்று சேர்ந்து
நாடாளுமன்றத்தின் முன்னால்
ஆர்ப்பாட்டம் நடத்தட்டுமே!

நாடாளுமன்றத்தில் தாங்கள்
ஆற்றும் உரைகள்
ஆட்சியாளரின் செவிகளில்
ஏறுவதேயில்லை என்பதை
அகில உலகம் அறிய
எடுத்துச் சொல்லட்டுமே!

மக்கள் இன்றியே
இக்கட்சிகள் மட்டும்
நடத்தக்கூடிய போராட்டங்கள்
ஏராளமாக உள்ளபோது,
மக்கள் தயாரில்லை என்பது
நழுவல் தந்திரம்!

எனவே-தமிழ்க் கட்சிகள்
தமிழ் மக்களுக்கு
உதவிகள் செய்யாவிடினும்,
தமிழ் மக்களின் மீது
தங்கள் சரணடைவுகளுக்கான
பழியைப் போடாதிருக்கட்டும்!

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## நிம்மதிபெறும் வழி

தினசரி படுக்கப் போகும்முன் நீங்கள் அன்று முழுவதும் செய்தவற்றை எண்ணிப் பாருங்கள். ஆண்டவன் உங்களை எப்போதும் கவனித்துக் கொண்டிருப்பதை உணருங்கள். எல்லாவற்றையும் அவனிடம் ஒளிக்காமல் உரைத்து விட்டு மனப்பாத்திரத்தை காலியாக்கி விடுங்கள். அதில் நல்ல எண்ணங்களை நிரப்பிக் கொள்ளுங்கள். ஆண்டவனின் வேலை உங்கள் வேலை என்று நினையுங்கள். அவனின் சக்தியே உங்கள் மூலம் வேலை செய்வதாக நம்புங்கள். ஆண்டவன் துணை நிற்கையில் எதுவும் உங்களை என்னவும் செய்துவிடமுடியாது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். 'பசி, காமம், கோபம், பொறாமை எல்லாம் எனக்கு இல்லை' என்று எண்ணி, 'உண்மை, திறமை, அன்பு, சமத்துவப் பார்வை எல்லாமெனக்குண்டு' என்று எண்ணுங்கள். ஆண்டவனின் அருளால் பூரண நிம்மதி எனக்குச் சொந்தம் என்று ஆறுதலடைந்து அப்படியே அமைதியாக உறங்குங்கள்.

காலையில் புது மனிதராக விழிப்பீர்கள். இதனை- நிம்மதி தேவை என்பவர்கள் தினம் செய்து பாருங்கள். நிச்சயம் நிம்மதி கிடைக்கும்.

தொகுப்பு: அ. அரசரெத்தினம்-
சேனையூர்-06.

## ஆன்மீகம்



### நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ள அறிவுரைகள் சில

நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஸ்ரத் அபூதர் ரலியல்லாஹு அவர்கள் அறிவிப்பதாவது:

* அபூதர்ரே! அல்லாஹ்வைப் பயந்து வாழவேண்டுமென்று உமக்கு நான் உபதேசிக்கிறேன். நிச்சயமாக அதுதான் எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாக இருக்கிறது.
* குர்ஆன் ஓதுவதையும், அல்லாஹ்வை திக்ரு செய்வதையும் கடைப்பிடித்து வருவீராக! அது வானுலகில் உம்மைப் பற்றி நினைவு கூரப்படுவதற்கும், பூமியில் உமக்கு ஒளி கிடைப்பதற்கும் காரணமாகும்.
* அதிகமான நேரம் மௌனமாக இருப்பீராக! நன்மையானவற்றைத் தவிர வேறு எதையும் பேச வேண்டாம். இது ஷைத்தானை விரட்டி, தீனுடைய வேலைகள் செய்வதற்கு உதவியாக இருக்கும்.
* மிஸ்கீன்களிடம் அன்புகொண்டு அவர்களிடம் அதிகமாக உட்கார்ந்திருப்பீராக!
* கசப்பாக இருந்தாலும் சரி, சத்தியத்தைக் கூறப்பயப்படாதீர்.
* உம்முடைய குறைகளையே நீர் கவனிப்பீராக! மற்றவர்களுடைய குறைகளைக் கவனிக்க வேண்டாம்.
* நற்குணத்திற்குச் சமமான சிறப்பு வேறெதுவுமில்லை.
* தூரநோக்கோடு செயற்படுவதைவிட சிறந்த அறிவு எதுவுமில்லை.

தொகுப்பு: செல்வி பௌசியா மன்சூர், மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல. 250

### பரிசுக்குரிய கவிதை

#### சோற்றுக்காய்...

சோற்றுக்காய் நாங்களிங்கே
சேற்றினிலே மிதித்துவிட்டோம்!
மிதித்திட்ட இடத்திலெல்லாம்,
மிதிவெடிதான் உள்ளதய்யா!

அமானுல்லாஹ் மஜீத்- மக்காமடி வீதி,
மருதமுனை-03.



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

#### மிதி வெடியால்...

விதை விதைத்தவன்
பசளையாய் காலும்
கொடுப்பான்!

சி. சிவபரீஸ்வரன்-
சுழிபுரம், யாழ்ப்பாணம்.

#### இலவசம்—விதை...!

பாடுபட்டுப் பண்படுத்தி
பசளையிட்டு வையுங்கோ!
இலவசத்தில் குண்டு விதை
எம்மரசு தந்திடுமாம்!

பி. பிரபாஷினி- பிக்கரிங்ஸ் ரோட்,
கொழும்பு-13.

#### பொறுப்பேற்போம்!

காளையவன் காளைகளை
சாய்த்துச் செல்ல,
கைப்பெட்டி நெல்லெடுத்து
தம்பி வீச,
பாளைப் பூ பருவம் இது சுமைகள்
தூக்கும்;
பாவங்களை காணுகின்ற கால மாச்சு!

பா. கந்தசாமி- விபுலானந்த வீதி-
பொத்துவில்.

#### என்ன செய்யும்?

ஏர் உழுது எமைக்காக்க
என் அப்பா இருக்கையிலே,
போர் என்ன செய்யும்-
பொழுதுமா விடியாது?

மயின்- கொழும்பு-9.

#### வயிற்றுப் பிழைப்பு

ஏர் பூட்டி
வயல் உழுதாலும்
என்று தீருமோ
எங்கள் பசி?!

ஆர். ஜெயராஜ்-
யோகவந்தலாவ.

#### எதிர்பார்ப்பு

போர் முடித்து ஏர் எடுத்து
சீர் கொடுப்பது எக்காலம்...?
அக்காலம் எமது பொற்காலம்-
வருமா...?

வி.பிரேம சியாமளா- கொழும்பு-13.

#### விளை நிலத்தில்,,,

ஏர் நடக்கும் பாதையெல்லாம்
போர் நடக்குதே!
தண்ணீர் ஓடும் ஓடையில்
செந்நீர் ஓடுதே!

ஏ. ரஷான்- கிரான்குளம்,
மட்டக்களப்பு.

#### மழை

மாட்டோடு மல்லுக்கட்டிய நிலத்தில்
மாரி மழை பொழியுமென...
காத்திருந்தவனை- காலனிடம்
கையளித்தது குண்டு மழை!

ஏ. மதிவதனி- மட்டக்களப்பு.

#### இதுமேல்

ஏர் விளைந்த நெல்லை விட- நாட்டில்
போர் குவிந்த உயிர்கள் கோடி!

ச. மகாலிங்கம்- வெலிமடை குருப், வெலிமடை.

## கவிதைப் போட்டி இல.253



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 25.04.1998

(படப்பிடிப்பு:-கொட்டரமுல்லை ஃபாருக்)

**முகவரி:** கவிதைப் போட்டி இல.253,
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## சொன்னது நடந்தது

முரசே! இராஜதந்திரியின் மீது எங்களுக்கு கோபம். ஏன் தெரியுமா? அம்மையார்களது ஆட்சிக் காலங்களில்தான் பாதுப்பு இறுக்கங்கள் அதிகம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அரசியல் அலசல் வெளியான சில நாட்களுக்குள்ளேயே தலைநகரில் தமிழர்களை பந்தாடியது அரசாங்கம். அம்மையார்கள் பற்றி இராஜதந்திரி சொன்னது மெத்தச்சரி என்பதைப் புரிந்து கொண்டோம்! முரசின் கணிப்புக்கள் பொய்ப்பதில்லைத்தானே?

இ.விமலேஸ்வரி, கொழும்பு 11.

## புதிய பேரினவாதம்

முரசின் அரசியல் நுண்ணாய்வுகள் எத்தனை ஆழமானவை என்பதற்கு உடனுக்குடன் சான்றுகள் கிடைத்துவிடுகின்றன. கொழும்புக் கைதுகள், திருமலையில் தமிழர்கள் விரட்டப்பட்டமை போன்ற சம்பவங்கள் இன்றைய அரசு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் காரியத்தில் இறங்கியுள்ளதன் வெளிப்பாடுகளே! 'புதிய பேரினவாதம்' தொடர்பாக இராஜதந்திரி சுட்டிக் காட்டிய விடயங்கள் உண்மையே என்பதை மறுக்கவா முடியும்? நேரடியான இனப்படுகொலையைவிட சிறுகச் சிறுக அழிக்கும் நாசுக்கான பேரினவாதம் பொல்லாதது.

ஆ. அமிர்தநாயகம்,சாவகச்சேரி.

## பாலுக்கும் காவல் - பூனைக்கும் தோழன்!

அன்புள்ள முரசுக்கு,

அரசாங்கத்தை அரவணைத்தபடி தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது என்பது, 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற வஞ்சகத்தனமாகும். 'அவசரகால இரும்புச் சட்டம்' என்று 'முரசம்' விபரித்ததும், எடுத்துரைத்த கருத்துக்களும் தமிழ்க் கட்சிகளுக்கு ஏறாமல் போகலாம்: ஆனால் பதவி ஆசையில் அடுத்த முறை எம்மிடம் வாக்குப் பொறுக்க வரும்போது நாம் மறக்காமல் வைத்திருந்து, இவர்களை விரட்டுவோம்!

கே. பூரணி, யாழ்ப்பாணம்.

## அவசரகாலப் பூதம்



இந்தியாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. இங்கு தம் சுயரூபத்தைத் தாமே வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டனர் ஆளும் கட்சியினர். சொந்த மண்ணில் இருந்து தமிழர்கள் (திருமலையில்) ஆடுமாடுகள் போல விரட்டப் படுகிறார்கள். அவசரகாலச் சட்டம் என்ற பூதம் தமிழர்களை மிதித்து வருகிறது. இக்கட்டத்தில் இந்திய ஆட்சியாளர்களை இங்கு தரிசனம் கொள்ள வைக்கும் முயற்சிகளை தமிழ்க் கட்சிகள் செய்திருக்கலாம். ஆனால் செய்யமாட்டார்கள்! ஏனெனில் இவர்கள் யாருக்குத் தோள் கொடுக்கிறார்கள் என்பது நாமறியாத இரகசியம் அல்லவே!

பூ. நிரஞ்சன், மட்டக்களப்பு.

## எய்பவர்களும் ஏய்ப்பவர்களும்

மனித உரிமை ஆணைக் குழுவுக்கு விண்ணப்பம் போடுகிறார் திருவாளர் முருகேசு சிவசிதம்பரம். அரசை எதிர்த்து நின்றுகொண்டு அதன் நடவடிக்கைகளை அம்பலப்படுத்த அறிக்கைகள் விட்டால் அது நியாயம். மனித உரிமைக் குழுவிடம் நீதி விசாரணை கேட்டதும் பாராட்டப் பட்லாம். ஆனால், அத்துமீறல்களை தடுக்காத அரசுக்கு ஆலவட்டம் பிடித்துவரும் தமிழ்க் கட்சிகள் (கூட்டணி உட்பட) நீதிக்காகப் பேசுவது போலவும், நீதியான கோரிக்கைகள் விடுப்பது போலவும் நடந்து கொள்வது மகா அயோக்கியத்தனமாகும். எய்தவன் இருக்கையில் அம்பை நோகலாமா? படைகள் அம்பு; எய்பவர்கள் அரசாங்கத்தினர். எய்பவர்களுக்கு கூட்டாளிகளாக இருந்து எங்களை ஏய்ப்பவர்களே 'தமிழ்' அரசியல் கட்சிகள்!

ஆ. ராகுலன், கொழும்பு-09.

இனிய முரசே!

'இனப்பிரச்சனை இருக்கிறது' என்று முதன் முதலில் கூறியவர் சந்திரிக்கா அம்மையார்தானாம். முண்டு கொடுக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலரும் கூறிவருகிறார்கள். இனப்பிரச்சனை இருக்கிறது என்பதை முதலில் மறுத்தாலும், வீரமிக்க போராட்டத்தின் அடிகளைப் பணிந்த ஜே.ஆர். ஒப்பந்தம் செய்ய முன்வந்தார். இனப் பிரச்சனை உண்டு என்பதை ஏற்றுத்தானே அவரும் ஒப்பந்தம் செய்தார்? பிரேமதாசாவும் இனப்பிரச்சனை இருப்பதை ஒப்புக்கொண்டுதான் இருந்தார். எனவே ஒப்புக்கொள்வது மட்டும் பிரச்சனைக்குத் தீர்வாகாது என்பது சரியே.

கே. தனபாலசிங்கம், திருக்கோணமலை.

அன்பின் முரசே!

வாரா வாரம் உலா வந்து எம் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்று விட்டாய். நீ சுமந்து வரும் ஆக்கங்களோ எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. அரசியல் தொடர் எங்களை சிந்திக்க வைக்கிறது. மேக்கப் புன்னகை, சிந்தியா பதில், தகவல் பெட்டி, பாப்பா முரசு ஆகியன சிறப்பாய் உள்ளன. காதிலை பூ கந்தசாமியின் கற்பனையோ பிரமாதம். கந்தசாமியாருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

செல்வி கே. பாயிஸா, சவனவெளி.

எனது அன்பின் முரசே!

நீ சுமந்து வந்த பூலான் தேவி தொடர் கதை குன்றாத நடை போட்டது. அதே வேகத்தில் அறிமுகப்படுத்தியுள்ளீரே- 'இடி அமீன்'தொடர் கதையும் விறுவிறுப்புடன் வெற்றிநடை போடுகின்றது. உண்மைக் கதைகளைத் திரட்டித்தரும் ரசிகனுக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள். அத்தோடு பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதும் 'மேக்கப் புன்னகை'யும் சூப்பரோ சூப்பர். இவற்றைச் சுமந்துவரும் அன்பு முரசுக்கு எனது இதயம் நிறைந்த பாராட்டுக்கள்.

செல்வன் அ. சுரேஷ், கண்ணகிபுரம்,
களுவாஞ்சிக்குடி.

முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்துவிட்டன. புதிய உண்மைத் தொடர் இடி அமீனின் முதலாவது அங்கமே அசத்தல்! தொடரை அள்ளி வழங்கும் ரசிகனுக்கு நன்றி.

எஸ்.எஸ். வேணுகரன், பெரியநீலாவணை-01.

## இடி அமீன்....

இனிய முரசுக்கு...

உனது பக்கங்கள் அத்தனையும் இனியவையே... முரசு மூலம் கார்லோஸ் என்றால் யார்; அவன் எப்படிப்பட்டவன்; 'பூலான் யார்?' அவளது நடவடிக்கைகள் எப்படிப்பட்டவை என்பதை எல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் ரசிகர்கள் ரசிகன் மூலம் அறியக் கிடைத்தமைக்கு முரசுக்கு நன்றி.

சிறு வயதில் ஒருவருக்கு குத்துவது என்றால்கூட இது 'இடி அமீன் குத்து' என்று குத்துவதுண்டு. அந்த இடி அமீன் பற்றி இப்போது பல விஷயங்கள் அறியலாம் என்று எண்ணும்போது முரசுக்கு கோடி வாழ்த்துக்கள்!

என்.எல். முஸம்மில், புதிய காத்தான்குடி-6.

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அதில் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' சூப்பரிலும் சூப்பர். உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்!

ஏ.ஆர். ஹக்கீமா, பதுரியா ரோட், புதிய காத்தான்குடி-2.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்— உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772,கொழும்பு.**



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய ஆட்சி மாற்றத்தால் கலக்கம்

# அமெரிக்கப் பிரதிநிதியின் அவசர விஜயம்

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை அடுத்து அமெரிக்காவின் வெளி விவகாரத்துறை சில தந்திரமான நகர்வு களை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக் காவின் நிரந்தரத் தூதரும், அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் நம்பிக்கைக்கு பாத்திரமானவருமான பில் ரிச்சாட்சன் தென்னாசிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் ஆரம்பித்திருக்கிறார்.

இந்தியாவுக்குச் சென்று பிரதமர் வாஜ் பேயி மற்றும் சோனியா காந்தி போன் றோரை சந்தித்திருந்தார்.

## தந்திரம்

இந்தியாவையும் நேரடியாகப் பகைத்துக் கொள்ளாமல், தென்னாசியாவில் இந்தியா வின் ஆதிக்கம் ஏற்படாதவாறும் பார்த்துக் கொள்வதே அமெரிக்காவின் தற்போதைய வெளியுறவுக் கொள்கைத் தந்திரமாகும்.

தென்னாசியாவில் இலங்கை இனப் பிரச் சனையிலும், போரிலும் மறைமுகமாக தலையிட்டுள்ளது அமெரிக்க அரசு. இது வரை இருந்த இந்திய அரசாங்கங்கள் இலங்கை விவகாரத்தில் முழுக்க முழுக்க இலங்கை அரசு சொல்வதைக் கேட்கும் நிலையிலேயே இருந்தன.

இந்திய நலன் குறித்தோ, தென்னாசியா வில் அமெரிக்கத் தலையீடுகள் தொடர் பாகவோ பிரதான கவனம் செலுத்த முன் னைய அரசாங்கங்கள் தவறியிருந்தன. உள்நாட்டு அரசியலில் நிலவிய நெருக்கடி களே அதற்கு முக்கிய காரணமாகும்.

இப்போது பதவியில் உள்ள பாரதிய ஜனதா அரசும் தனிக்கட்சி பெரும்பான்மை கொண்ட அரசல்ல. ஆயினும் இந்திய நல னைப் பேணும் வெளியுறவுக் கொள்கை விடயத்தில் உறுதியாக உள்ளது. எனவே பாரதிய ஜனதா அரசாங்கம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை விழிப்படைந் துள்ளது.

இதன் பின்னணியில்தான் ஐநாவுக்கான அமெரிக்க தூதர் அவசரமாக தென்னாசிய நாடுகளுக்கு விஜயம் செய்கிறார். இந்தியா வுக்கு சந்தேகம் வராமல் இருக்க அங்கும் விஜயம் செய்திருந்தார்.

## உண்மை என்ன?

பில் கிளின்ரன் அடுத்த வருடம் மேற்கொள்ளவுள்ள தென்னாசியச் சுற்றுப் பயணத்தின் முன்னோடியாக அமெரிக்கத் தூதரின் விஜயம் விபரிக்கப்படுகிறது. ஆனால், தென்னாசியாவில் தனது பிடியை வலுப் படுத்த அமெரிக்கா காட்டும் அவசரமும், இந்திய ஆட்சி மாற்றமுமே அவரது விஜயத் தின் உண்மையான காரணங்களாகும்.

இலங்கை இனப்பிரச்சனை விவகாரத் தில் இந்தியாவையே கடந்த காலத்தில் தமிழ்க் கட்சிகள் நாடின. அதனால் அக் கட்சிகளை அமெரிக்காவின் நண்பர்களாக வைத்திருக்கவும் இங்குள்ள அமெரிக்க தூதரகம் அடிக்கடி விருந்துகள் நடத்து வதுண்டு. அமெரிக்க தூதரும் அரசுக்கு சார்பான தமிழ்க் கட்சிகளை சந்திக்கக்கூடும் என்று தெரிகிறது. எனினும் திரு. சிவசிதம் பரம் உட்பட பல தமிழ்க் கட்சித் தலைவர் கள் நாட்டில் இல்லையென்பது குறிப்பிடத் தக்கது.

"இலங்கை இனப்பிரச்சனையில் அமெரிக்காவின் கொள்கை-பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவிப்ப தேயாகும். அமெரிக்கா தன்னை சமாதான விரும்பி என்று உதட்டளவில் கூறிக்கொள் வதைவிட, இலங்கை அரசுக்கு போரில் உத வும் செயற்பாட்டை நிறுத்திக் கொள்ளவேண் டும். இல்லையெனில் அதன் கூற்றுக்கள் நம்பகமானவையல்ல. போரில் பங்காளியான ஒருவர் நடுநிலை வகிக்க முனைவது ஏமாற்று நாடகமே," என்று பிரபல அரசியல் விமர்ச கர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

# யாழில் வேலை வாய்ப்பு!

## படையினர் அனுமதி தேவை

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படுவது மக்களின் பிரதிநிதிகளிடம் சிவில் நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கே என்று கூறப்பட்டது.

ஆனால், யாழ் குடாநாட்டின் சகல நிர்வாக நடவடிக்கைகளிலும் படையின ரின் கட்டுப்பாடு மேலும் இறுக்கமாகி வருகிறது.

யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்களால் சமுர்த்தி ஊழியர்களாக சிபாரிசு செய்யப்பட்ட 149 பேர் தொடர்பாக படையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். அவர்கள் புலிகளாக இருக்கலாம் என்று சந்தேகித்தே விசாரணைகள் நடைபெறு கிறது என படை வட்டாரங்கள் கூறியதாக ரி.என்.எல். தொலைக்காட்சி செய்தி வெளி யிட்டிருந்தது.

அதேசமயம் பருத்தித்துறையில் படையினரின் சிபாரிசுப்படி நியமிக்கப்பட்ட சமுர்த்தி ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டு ஊதியமும் பெற்றுவருகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு ஒருவருக்கு வழங்கப்படவேண்டுமானால், அவர் புலியல்ல என்று தம்மால் 'கிளிய ரன்ஸ்' வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரே வேலை வழங்கப்படலாம் என்று படைத்தரப்பு கூறுகிறதாம்.

யாழ் மருத்துவமனை ஊழியர்களாக வேலைவாய்ப்புப் பெற்றவர்களும் பல மாதகாலமாக வேலைக்கு அழைக்கப்பட வில்லை. இன்னமும் அவர்களுக்கு 'கிளியரன்ஸ்' கிடைக்கவில்லை. அவர்கள் வீடுகளுக்கு சென்று புலியா இல்லையா? என்று நிதானமாக ஆராய்ந்து கொண்டி ருக்கிறார்களாம்.

தமிழ்க் கட்சிகள் வேலை வாய்ப்புப் பெற்று நல்ல பெயர் தேடிக் கொண்டால் எதிர்காலத்தில் இக் கட்சிகளை கட்டுப் படுத்த முடியாமல் போய்விடும் என்று படையினர் நினைக்கிறார்களோ தெரிய வில்லை. அதற்காக எங்கள் பிழைப்பை கெடுப்பானேன்? என்று பாதிக்கப் பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமிழ்க் கட்சிகள் என்னதான் முண்டு கொடுத்தாலும், அவை விடயத்தில் படைத் தரப்பினர் சந்தேகப் பார்வையையே கொண்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

# புத்தாண்டு தாக்குதல்

கிளிநொச்சி நகரில் புலிகளின் நிலைகளுக்கு சமீபமாகவே படையினரின் நிலைகளும் இருக்கின்றன.

படையினரின் நடமாட்டங்கள் அதிகம் இருப்பது தெரிந்தால் புலிகள் தமது நிலைகளில் இருந்து தாக்கத் தொடங்குவர்.

ஏப்ரல் 14ம் திகதி அன்று வன்னியில் பல முனைகளில் புலிகள் மோட்டார் தாக்குதல் தொடுத்தனர். கிளிநொச்சி நகர படை நிலைகள் மீது புலிகள் தொடுத்த சரமாரியான ஷெல்வீச்சில் ஓர் அதிகாரி உட்பட இரண்டு படையினர் காயமடைந் தனர் என்று படையினர் தெரிவித்துள்ள னர்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு படையினர் ஓய்வு கொள்வதை தடுத்து பதற்றத்தை ஏற்படுத்தும் விதமாகவே புலிகள் பரவலான சிறு சிறு தாக்குதல் களை நடத்தியதாகத் தெரிகிறது.

# கடற்படைக்கும் துணைப்படை

கடற்படையினருக்கு ஆள் திரட்டும் முயற்சிகள் சமீபத்தில் நடந்தன. பத்திரிகை களிலும் விளம்பரங்கள் செய்யப் பட்டிருந்தன. ஆயினும் போதியளவு ஆட்கள் கடற் படையில் சேர முன்வரவில்லை என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து மீனவர் குடும்பங்களில் இருந்து ஆட்களைத் திரட்டி 'சமுத்திர பாதுகாப்பு பிரிகேட்' என்ற பெயரில் துணைப்படை ஒன்றை உருவாக்கும் முயற்சி நடப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய நிலையில் சிங்கள மீனவக் குடும்பங்களில் இருந்தே ஆட்கள் திரட்ட வேண்டி இருக்கும். அவ்வாறு செய்தால் தமிழ் மீனவர்கள் மேலும் பாதிக்கப்படும் நிலை தோன்றக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

தரையில் தேசிய துணைப்படையாக செயற்படுவோராலும் ஊர்க்காவல் படை களாலும் ஏற்கனவே மக்கள் பெரும் தொல்லை களை அனுபவித்து வருவது தெரிந்ததே.

# காதலும் கர்ப்பமும்

பாடசாலை மாணவி ஒருத்தியை பொலிஸ்காரர் ஒருவர் காதலித்தார். மாண விக்கு 17 வயது. காதல் வரம்பு கடந்தமை யால் மாணவி கர்ப்பமானார். ஆனால் குறிப்பிட்ட பொலிஸ்காரர் அந்த மாணவி யைக் கைவிட்டு புதிய காதலி ஒருவரைத் தேடிக்கொண்டார். இச்சம்பவம் யாழ் குடா நாட்டில் இடம்பெற்றுள்ளது.

தற்போது மாணவியின் பெற்றோர் மருத்துவ அத்தாட்சியுடன் குறிப்பிட்ட பொலிஸ்காரர்மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருகின்றனர். மாணவியின் பெயர்: எஸ். அஜந்தினி. அவரைக் கர்ப்ப மாக்கி ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட் டுள்ள பொலிஸ்காரரின் பெயர் முகமட் அலி.

# புலிகள் சுவரொட்டி

## படையினர் கிழிப்பு

பூபதி நினைவு நாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் புலிகள் சுவரொட்டி ஒட்டியிருந்தனர்.

இரவோடு இரவாக ஒட்டப்பட்ட இச் சுவரொட்டிகள் மக்கள் பார்வையில் படாத வாறு அதிகாலையிலேயே படையினரால் கிழித்து வீசப்பட்டன.

"மதுரையிலே நீதி கேட்டு கண்ணகி காற்சிலம்புடன் நடந்தாள். மட்டக்களப்பில் நிதி கேட்டு பூபதி பசி வயிற்றுடன் கிடந்தார். தலைகள் குனியும் நிலையில் இங்கே புலிகள் இல்லையடா, யாரும் விலைகள் பேசும் நிலையில் எங்கள் தலைவன் இல்லையடா, உலகமே திரண்டு எதிர்த்தாலும் உரிமைக் காக போராடுவோம்" போன்ற வாசகங்கள் சுவரொட்டியில் காணப்பட்டன.

# யார் எறிந்த குண்டு?

## மக்களிடம் பலத்த சந்தேகம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியில் 12.04.98 அன்று கைக்குண்டு ஒன்று வீசப் பட்டது. பெண் ஒருவர் பலியானார். 19 பேர்வரை காயமடைந்தனர்.

பொதுமக்களை குறிவைத்தே இக் கைக் குண்டு வீசப்பட்டுள்ளது. புடவைக் கடை யொன்றின் முன்பாக கூடியிருந்தோரே பாதிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு மட்டக்களப்பு சந்தைப் பகுதியில் மர்மக் குண்டு வெடிப்பு ஒன்றில் பொதுமக்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. மட்டக்களப்பு நகரில் புலிகளது நடமாட்டம் அதிகமுள்ளதாக தகவல்கள் வெளியான பின்னரே அக் குண்டு வெடிப்பு இடம்பெற் றிருந்தது.

பொதுமக்கள் மத்தியில் புலிகள்மீது அதிருப்தியை ஏற்படுத்தி, மட்டக்களப்பு நகரில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் நோக்கத்துடன் அக் குண்டுவெடிப்பு இடம் பெற்றதாக சந்தேகிக்கப்பட்டது. தமிழ்க் குழு ஒன்றின்மீதே சந்தேகம் திரும்பியிருந்தது.

தற்போதும் புலிகளது நடமாட்டம் யாழ் நகரிலும் அதிகமாகி உள்ளது என்று தகவல் கள் வெளியான சூட்டோடு சூடாகவே பொதுமக்கள்மீது கைக்குண்டு வீச்சு நடை பெற்றுள்ளது.

இக் கைக்குண்டு வீச்சை புலிகள்மீது அதிருப்தி ஏற்படுத்த முனையும் சக்திகள் தான் நடத்தியிருக்கக்கூடும் என்று பொது மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஏனெனில் மக்களின் ஆதரவு இருந்தால் தான் புலிகள் நடமாட முடியும். மக்களிடம் அதிருப்தி ஏற்படுத்தினால் புலிகளுக்கே அது இடையூறாகிவிடும். எனவே புலிகள் இத்தகைய நடவடிக்கையில் இறங்கமாட் டார்கள் என்று கருதப்படுகிறது.

இன்னொரு கேள்வியும் சந்தேகத்தை வலுப்படுத்தி உள்ளது. யாழ்நகரில் சித் திரைப் புத்தாண்டுக்காக படையினர் இசை நிகழ்ச்சி நடத்தினர். புலிகள் கைக்குண்டு வீசுவதானால் அங்கு வீசியிருப்பார்கள். ஏன் புடவைக் கடை முன்பாக வீசவேண்டும்? என்றே கேள்வி எழுப்பப்படுகிறது.

யாழில் உள்ள தமிழ்க் கட்சிகள் சில குண்டு வீச்சைப் பற்றி ஆராய்வதைவிட, அதனை வைத்து அரசியல் ஆதாயம் தேட காட்டிய ஆர்வமும் மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

# திருமலையில் புலிகள் நடமாட்டம் தீவிரம்

## பரவலான தாக்குதலுக்கு திட்டம்?

(சஞ்சீவன்)

திருமலை மாவட்டம் எங்கும் புலிகளது நடவடிக்கைகள் தீவிரமாகி வருகின்றன. படையினரது ரோந்துகள், மற்றும் செயற் பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் புலிகள் தமது தாக்குதல்களை மேலும் முடுக்கிவிட உள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

சம்பவாரங்களில் திருமலை மாவட்டத் தில் பல தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன.

14.04.98 அன்று மூதூர் 64ம் கட்டையில் இருந்த பொலிஸ் காவலரண் ஒன்று தாக்கப் பட்டது.

இராணுவ சீருடைகளுடன் புலிகள் வெகு இயல்பாக வீதியால் சென்றனராம். இராணுவத்தினர்தான் செல்கின்றனர் என்று அவர்களைப் பார்த்தவர்கள் நினைத்தனர். "சீருடையுடன் செருப்பணிந்தும் சிலர் சென்றதை கண்டபோது சந்தேகம் வந்தது. ஆனாலும் பயத்தில் பேசாமல் இருந்து விட்டோம்" என்று மூதூர் வாசியொருவர் கூறினார்.

காவல் நிலைய தாக்குதலில் மூன்று பொலிஸார் பலியாகினர். மூவர் காய மடைந்தனர். மதியம் 1.30 மணியளவில்தான் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காவலரண் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த அதேநேரம் கட்டைபறிச்சான் இராணுவ முகாம் மீதும் புலிகள் ஏவிய நான்கு ஷெல்கள் விழுந்து வெடித்தன. சேத விபரங்கள் தெரியவில்லை.

### ஷெல்லடி

கட்டைபறிச்சான் இராணுவ முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்துவதை இதுவரை தவிர்த்தே வந்தனர். தற்போது தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளமையானது பாரிய பரவலான தாக்குதல்களுக்கான முன்னோட் டம் என்றே கருதப்படுகிறது.

முகாம் மீதான ஷெல் தாக்குதலை அடுத்து கட்டை பறிச்சான் இராணுவத்தினர் அப்பகுதி தமிழ் மக்களை நடமாடவோ, வேறு பகுதிகளுக்கு போக்குவரத்து நடத்தவோ அனுமதிக்கவில்லை. பச்சனூர், தோப்பூர் ஆகிய பகுதிகள் ஊடாக வெளி யூர்களுக்கு செல்ல முற்பட்ட மக்கள் படை யினரால் தாக்கப்பட்டதாக தெரியவருகிறது.

### கண்டனம்

இதேவேளை திருமலை மாவட்டத்தை அபகரிக்கும் பொறுப்பை பொலிசார் கையேற்றுள்ளனர் என்றும், தம்பலகாமப் படுகொலைகளும், தமிழ்க் கிராமங்களில் இருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டதும் அதன் வெளிப்பாடுகளே என்றும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். திட்டமிட்ட குடியேற் றங்களை புலிகள் அனுமதிக்கமாட்டார்கள் என்றும் கூறியுள்ளனர்.

தம்பலகாமப் பகுதியில் பொலிசாரால் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்ப வத்தை அடுத்தே திருமலையில் பொலி சார்மீது புலிகளது தாக்குதல்கள் அதிகரித் துள்ளதை அவதானிக்க முடிகிறது.

# சங்கிலியன் படை எச்சரிக்கை

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் பதவி விலகுக!

யாழ் குடாநாட்டில் 'சங்கிலியன் படை' என்ற பெயரில் பிரசுரம் ஒன்று வெளியாகி உள்ளது. இந்தியப்படை காலத்தில் புலிகள் இயக்கத்தினர் வெளியிட்ட பாணியில் அப் பிரசுரம் அமைந்துள்ளது.

"யாழ் குடாநாட்டில் உள்ள படை முகாம் களுக்கோ, தமிழ்க் கட்சிகளது அலுவலகங் களுக்கோ செல்ல வேண்டாம்" என்று மக்க ளுக்கு அப் பிரசுரத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

படையினருடன் நட்பு கொள்வோர், படையினரின் நிறுவனங்களில் பணி புரிவோர் போன்றோருக்கும் எச்சரிக்கை தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ் குடாநட்டில் உள்ளூராட்சி தேர்த லில் தெரிவான சகல உறுப்பினர்களும் பதவி விலக வேண்டும் எனவும் அப் பிரசுரத்தில் கோரப்பட்டுள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் நீங்கள் செய்யப்போவது என்ன? கைதுகள், காணா மல் போதல்கள், பாலியல் வல்லுறவுகள் போன்றவை தொடருகின்றன. உங்களால் நிறுத்த முடிந்ததா?" என்றும் பிரசுரத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# பெருநாட்கள் சிறப்படைந்தன!

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டி ருந்த போதிலும் இம்முறை சித்திரைப் புத்தாண்டு, ஹஜ்ஜுப் பெருநாள் என்பன சுமாரான சிறப்புடன் கழிந்தன.

மக்களின் மனதில் பலவகையான பாதிப் புக்கள் தடம் பதித்துள்ள போதிலும் குறித்த தினங்களில் மக்கள் வழிபாடுகளிலும், சிறப்பு வைபவங்களிலும் கவலை மறந்து ஈடுபடு வதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

கிழக்கில் இம்முறை அமோக நெல் விளைச்சல் கிடைத்தது மக்கள் சிறப்பாகக் கொண்டாடியதற்கு ஒரு காரணமாக இருந் தது. இருந்த போதிலும் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள நிருவாகத் தரத்திலான ஊழியர்கள் மேற் கொண்டு வரும் போராட்டத்தினால் கிழக் குப் பகுதிக்கான வெளியூர்த் தபால் விநி யோகம் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகச் சீர்குலைந்துள்ளன. இதனால் வெளிநாட்டுக் காசுக் கட்டளை, காசோலை, தபால், உண்டி யல்கள், தந்தி என்பன அதனை நம்பி யிருக்கும் மக்களின் கரம் கிடைக்கவில்லை இவற்றை நம்பியிருந்த மக்களுக்கு இம்முறை சித்திரைப் புத்தாண்டும், ஹஜ்ஜுப் பெருநாள் என்பன சோபிக்கவில்லை.

உடுதுணி வியாபாரமும், மற்றும் ஏனைய வியாபாரங்களும் களைகட்டியிருந்த தாக வர்த்தகர்கள் தெரிவிக்கிறார்கள்.

# புலிகள் வளர்க்கும் யானைகள்!

புலி இயக்கத்தினர் மட்டக்களப்பின் காட்டுப்பகுதியில் வளர்த்து வந்த யானை களில் ஒன்றை கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு சமீபத்தில் அன்பளிப்புச் செய்துள்ளனர். இந்த யானைக் குத் தினமும் நாற்பது இறாத்தல் பாண் மற்றும் சோறு கொடுத்துப் புலி இயக்கத் தினர் வளர்த்து வந்தனராம்.

இதேவேளை புலி இயக்கத்தினர் வாக ரைப் பகுதியில் மேலும் யானைகளை வளர்க் கின்றனர் என்று தெரியவருகிறது. படையினர் மீதான தாக்குதல்களுக்கு முன்னர் தங்களிட முள்ள பழக்கப்பட்ட யானையின் தும்பிக்கை அசைவையும், பிளிறல் ஒலியையும் தாக்குதல் வெற்றிக்கான நற்சகுனமாக எடுத்துக் கொண்டு செல்வதுண்டாம். அவ்வாறு யானை யின் ஆசீர்வாதத்துடன் சென்ற தாக்குதல்கள் வெற்றியளித்துள்ளதாகக் கருதப்படுகிறதாம்.

# மூதூரில் சூடு

திருமலை மாவட்ட மூதூர் பகுதியிலும் இராணுவ உளவுப் பிரிவுடன் தொடர்புடைய முகமட் ஹுசேன் என்பவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறக்கக்கண்டியில் கடற்புலிகள் கைதான சம்பவத்துடன் இவருக்கு தொடர்பு இருப்பதாக உறுதியான பின்னரே புலிகள் அவரைத் தேடிச் சென்று சுட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தனக்கும் இறக்கக்கண்டி விவகாரத்திற்கும் இடையே ஒரு தொடர்பும் இல்லையென்றும், இராணுவ புலனாய்வு பிரிவுடனும் தற்போது தொடர்பு இல்லையெனவும் இவர் முன்னர் புலிகளுக்கு தெரிவித்திருந்தாராம்.

ஆனால் தமது விசாரணை மூலம் இவர் பற்றிய தகவல்களை அறிந்த பின்னர் தம்மை சந்திக்குமாறு புலிகள் தகவல் அனுப்பி இருந்தனர். ஆனால் அவர் சந்திக்கச் செல்லவில்லை. இந்நிலையிலேயே கடந்த 7.02.98 என்று புலிகளது பிஸ்டல் குழுவினரால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

# துணிகள் துணிகரக் கொள்ளை!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு- செங்கலடியில் உள்ள தையற் கடையொன்றில் 06.04.98 அன்றிரவு 7.20 மணிக்கு அங்கிருந்த தைக்கப்பட்ட மற்றும் தைக்கப்படாத உடுதுணிகள் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்காகத் தைப் பதற்கு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுதுணி களே ஆறுபேர் கொண்ட கோஷ்டியொன்றி னால் ஆயுத முனையில் களவாடப்பட்டது என்றும் இவற்றில் ஓரிரு உடுதுணிகளே படையினருடையது ஏனையவை அனைத்தும் பொதுமக்களுடையது என்றும் மேற்படி தையற்கடையின் உரிமையாளரான எம். புவனராஜா முறையிட்டுள்ளார்.

இரவு பகலாக எந்நேரமும் படையினர், பொலிஸார், மற்றும் தமிழ் இயக்கங்கள் ஆகியோரின் அதிதீவிர கண்காணிப்பின்கீழ் உள்ள அப்பகுதியில் நடந்த இக்கொள்ளைச் சம்பவம் சகலரையும் ஆச்சரியப்பட வைத் துள்ளது.

தமது உடைகள் போனது பற்றிக் கவலையில்லை. ஆனால் சித்திரைப் புத் தாண்டுக்கான பொதுமக்களின் உடைகளை பெற்றுக்கொடுக்க புலிகளிடம் சென்று கதைக்குமாறு படையினர் ஆலோசனை கூறியுள்ளனராம்.

# தமிழ் மாவட்டங்களில் எரிபொருள் சீர்குலைப்பு!

## திருமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் பாதிப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

சென்ற இருவாரங்களாக மட்டக் களப்பு, அம்பாறை, திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் குறிப்பாக தமிழ், முஸ்லிம் பகுதிகளில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது.

குறிப்பாகப் போக்குவரத்தும், விவசாயச் செய்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தால் பொதுமக்கள் வீண் சிரமத்தை அனுப விக்கிறார்கள்.

கடந்த பல நாட்களாக எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் நின்று மக்கள் முண்டியடித்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளைப் பெற்றுவந்தார்கள். இப்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவான எரிபொருள் விநியோகமும் தீர்ந்து விட்டதால் மக்கள் வெறுங்கையுடன் திரும்புகிறார்கள்.

சமீப காலங்களில் கிழக்குக்கான போக்கு வரத்தில் பல்வேறு தடைகள் எதிர்நோக்கப் பட்டாலும் எரிபொருள் விநியோகம் சீரான முறையில் இருந்து வந்தது. ஆனால் இப் பொழுது கிழக்கிலுள்ள மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் நோக்கத்துடன் கிழக்குத் தமிழ் முஸ்லிம் பகுதிகளில் எரிபொருள் விநியோகம் வேண்டுமென்றே தடைப்படுத்தப்பட்டுள்ளது என்று பரவலான கண்டனங்கள் எழுந் துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# சேவை இடை நிறுத்தம்
## விசாரணை மட்டும் இழுத்தடிப்பு

திருக்கோணமலை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தயாரிப்பு ஊழியராகப் பணிபுரிந்த ஒருவர் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டு பதினைந்து மாதங்களாகியும் விசாரணைகள் எதுவுமின்றிக் காத்துக்கிடக்கிறார்.

அ.இ.இளஞ்சிங்கம் என்ற இந்த ஊழியர் 29.01.97ல் இடை நிறுத்தம் செய்யப்பட்டார். குற்றப் பத்திரிகையோ விசாரணையோ அற்ற நிலையில், தொடர்ந்து வேலையின்றி இருந்த இவர் தனக்கு அரைச் சம்பளமாவது வழங்கும்படி திணைக்களத் தலைவரைக் கேட்டபோதும் திணைக்களம் மறுத்துவிட்டது.

ஒரு வருடம் கழிந்த நிலையில் இவரது நிலையைக் கண்டு இரங்கிய மாகாணப் பொதுநிர்வாகப் பிரதிச் செயலாளர் திரு. க. பரமலிங்கம் 13.02.1998ல் உடனடி விசாரணை மேற் கொள்ளுமாறும், தாமதிப்பின் வேலையிற் சேர்த்துச் சம்பளம் வழங்கி விசாரணையைத் தொடருமாறும் கடிதமூலம் உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கிறார்.

இடை நிறுத்தத்துக்குள்ளாகியிருக்கும் இளஞ்சிங்கத்தின் விடுதி மின்சாரத்தைத் துண்டிக்குமாறு திணைக்களம் இலங்கை மின்சாரச் சபையைக் கேட்டபோது அது மறுத்துவிட்டது. நீர் வழங்கற் சபை நீர் வசதியைத் துண்டித்த போதும் பின்னர் இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

"ஒரு இடைநிறுத்தக்காரரை மூன்று மாதங்களுக்கு முன் விசாரணைக்குட்படுத்தி முடிவெடுக்க வேண்டும். அவ்வாறு செய்யவியலாதவிடத்து மூன்று மாதங்களில் அவரை வேலையிற் சேர்த்துக் கொண்டு விசாரணையைத் தொடர வேண்டும், என்று விதிகள் கூறுகின்றன. அதுவுமல்லாமல் இளஞ்சிங்கத்தின் விடயத்தில், 'இன்டடிக்ஷன்' என்ற பதம் பயன்படுத்தவில்லை. 'சஸ்பென்ஷன்' என்ற சொல்லே காணப்படுகிறது. சஸ்பென்ஷன் செய்த ஒருவரை இவ்வளவு காலம் விசாரணையின்றி காத்திருக்க வைத்திருப்பது பெரிய குற்றம்!" என்று பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் கூறினார்.

# 'ஜயசிக்குறுய்'யும் புலிகளும்



மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் ஒலுமடுப் பகுதியில் நடைபெற்ற மோதலில் படையணி ஒன்று புலிகளின் முற்றுகையில் சிக்கியது. மோதலின் முடிவில் கைப்பற்றிய ஆயுதங்கள் புலிகளால் வாகனத்தில் ஏற்றப்படும் காட்சி இது. படையினரின் உடல்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் புலிகளால் ஒப்படைக்கப்பட்டன. ஒலுமடுவின் அடர்காட்டுப் பகுதி பின்னணியில் தெரிகிறது.

# வைப்புத் திட்டம்-வாடிக்கையாளர்கள் வாட்டம்

(திருமலை நிருபர்)

பராயமடையாதோருக்கான ஒரே தடவை வைப்புத் திட்டத்தை ஆரம்பித்த மக்கள் வங்கி, வாக்குறுதி அளித்தபடி நடந்து கொள்ளவில்லையென்று மேற்படி திட்டத்தில் இணைந்த பலர் மனம் நொந்து போயுள்ளனர்.

1980ம் ஆண்டளவில் இத் திட்டம் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின் பிரகாரம் ஒரே தடவையில் பிள்ளையொன்றின் பெயரில் பெற்றோரால் வைப்பிலிடப்படும் சிறிய தொகை இருபது அல்லது இருபத்திரண்டு ஆண்டுகளின் பின் பெரும் தொகையாக-வளர்ந்த பிள்ளையிடம் ஒப்படைக்கப்படும் என வங்கி வாக்குறுதி அளித்திருந்தது.

இதன்படி 500 ரூபா வைப்புச் செய்யுமொருவர் இருபத்திரண்டு ஆண்டுகளின் பின் ரூ. 38426/52 சதத்தைப் பெற முடியும். இவ்வாறே 1000 ரூபாவுக்கு ரூ. 76873/04 சதமும், ரூ.5000க்கு 384365/20 சதமும் வழங்கப்படும் என்று அட்டவணை போட்டுக் காட்டப்பட்டிருந்தது.

ஆனால் 16.03.81ல் 1000 ரூபா வைப்புச் செய்த ஒருவருக்கு 1996ம் ஆண்டு இறுதியில் ரூ. 7931/67 சதமே கொடுக்கப்பட்டிருக்கிறது. வங்கியின் அட்டவணைப் பிரகாரம் பதினான்கு ஆண்டுகள் முடிந்ததும் ரூ. 15850/34 சதம் பெற இவர் உரித்துடையவராகின்றார்.

சம்பந்தப்பட்ட வைப்பாளர் வங்கி அதிகாரிகளிடம் இதுபற்றிக் கேட்டபோது, "எதிர்காலத்தில் வட்டி விகிதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கமைய மீதி குறையவோ கூடவோ முடியும்" என்று கூறப்பட்டிருக்கும் வாசகமொன்றைக் காட்டி "நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை!" என்று கையை விரித்து விட்டார்களாம்.

"எவ்வளவு நாசூக்கான வித்தை" என்று முரசு நிருபரிடம் வந்து தலையிலடித்துக் கொண்டார் அந்த வைப்பாளர்.

"மக்கள் வங்கியே நம் தோழன்!"

# மூடிக் கிடக்கும் அலுவலகம்

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறை எந்த நேரமும் பூட்டிய நிலையிலேயே காணப்படுவதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

அலுவலக அறையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் காணப்படாததால் அவரால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் மாதக் கணக்கில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிய வருகிறது.

அங்கு பணிபுரியும் அலுவலகப் பையனே பணிப்பாளர் போன்று நடந்து கொள்வதாக வெளியூரிலிருந்து அலுவல்கள் நிமித்தம் வருவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

கோட்டக் கல்வி அதிகாரிகள் செய்ய வேண்டிய 'இன்ஸ்பெக்ஷன்' வேலையை மாகாணக் கல்விப் பணிப்பாளர் செய்வதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அறியப்படுகிறது.

"'இன்ஸ்பெக்ஷன்' செய்வதன் மூலம் பிரயாணப்படி, மாலை, மரியாதை, விருந்து என்று பல நன்மைகள் இவருக்குக் கிடைக்கின்றன. ஆனால் கல்வித் திணைக்கள ஊழியர்களோ வாடிப்போய் இருக்கிறார்கள்.

இவர் பேசாமல் கோட்டக் கல்வி அதிகாரியாகப் போய் விட்டால் திணைக்களத்துக்காவது நன்மை கிடைக்கும்!" என்று கூறினார் கல்வித் திணைக்கள அதிகாரியொருவர்.


ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான
BRIGHT வெளியீடுகள்
வெற்றிக்கனிக் களஞ்சியம் - 02

பொதுவிவேகம் பாடநூல்

பொதுவிவேகம் செயல் நூல்

வெற்றிக்கனி (ஏற்கனவே வெளிவந்தவை)

வெற்றிக்கனி - 98
இதழ் 1 முதல் 6 வரை

P. அம்பிகைபாகனின் அனைத்து வெளியீடுகளும்

மேலதிக விபரங்களுக்கு:
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27, First Floor, P.o. Box : 162
Central Super Market Complex
Colombo-11 T.P. 434770, 074 - 718592



வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குதில்
கண்டியிலே முன்னணியில்...
சாஜி இன்டர்நெஷனல் ஏஜன்சி
சவூதி அரேபியா, குவைத், டுபாய் சிங்கப்பூர்
நாடுகளில் உடன் வேலைவாய்ப்பு
மாலைதீவில் மேசன், தச்சன் அவசர வெற்றிடங்கள்
SAAJI International Agency
483 Peradeniya Road, Kandy.
அங்கீகார இல : 1361
074 - 470944
Royal - 071-35132



காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218



BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
கல்வி நெறிகள்
★ 30 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)
மேற்படி பாடநெறிகள் நேரிலும்/தபால் மூலமும் நடைபெறுகின்றன வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமே அறிந்து கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.
விரும்பும் பாடநெறி:..........
பெயர்:..........
முகவரி..........
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11 .Tel: 434770, 074-718592



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)
விசேட கவனத்திற்கு
கொழும்பு விலாசம் மட்டும் மாற்றப்பட்டுள்ளது.
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்/டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண் மகனாகிவிட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு
வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாதுபெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்) மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்.
மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்
மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.
கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் ஏப்ரல் 19 முதல் 26 வரை
DR.P.ARUMUGAM
BEAUTY LODGE, 65/3, Wolfendhal Street, Colombo-13.
T.P.-338165, 338166 (உம்புச்சி பிளேஸ் பள்ளிவாசலுக்கு முன்னால்)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் மே 2, 3ம் தினங்களில்
Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி. T.P.065-57345

கல்முனையில் மே 9.10.11ம் தினங்களில்
T.M.M. பாமசியிலும் T.P.065-29329

வவுனியாவில் மே 16.17.18ம் தினங்களில்
வவுனியாவில் (2ம் குறுக்குத்தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, VANNI INN இல் சந்திக்கலாம். T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
மற்றைய நாட்களில் Dr.P.Arumugam
No.33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டி தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாமோதரன் ஜெயகாந்தன்
(ஈஸ்வரன் வீடியோ மட்டக்களப்பு)
தோற்றம்: 07.12.1971
மறைவு: 15.04.1995
திதி: 17.04.1998

பாசத்தோடு வளர்த்த எமது அன்பு தம்பியே, வாடித்துடிக்கிறோம் உன் அன்பு முகம் காணாது, சோக வலைக்குள் சிக்கி ஆண்டுகள் மூன்று ஆனாலும், உன் அன்பு முகமும் ஆசை வார்த்தையும் காணாது அல்லற் படுகின்றோம். ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உனது அன்பின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரிகள், அம்மப்பா, மாமாமார்.

தகவல்:- செ. தாமோதரம்
பிருந்தாவனம், ஆரையம்பதி.01

## 90ம் நாள் நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்
27.12.1971
ஆண்டவன் அடியில்
09.01.1998

மணமாலை வாடுமுன்னர் எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளும் எமது அன்புத் தெய்வமே! நீ இறைவனடியில் சாந்தி அடைந்துவிட்டாய், எங்கள் மனங்களோ சாந்தி அடையவில்லை. உன் இனிய நினைவுகள் எம் நெஞ்சங்களில் நீங்காது என்றும் நிலைத்து இருக்கும். உன் பிரிவால் துயருடன் கலங்கித் தவிக்கும்.

அன்பு அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை, உறவினர், நண்பர்கள்.

தகவல்: அன்புத் தம்பிமார், விமல், சுரேஸ், டோகா-கட்டார்.



அமரர் சோதிமலர்
(சிவசுப்பிரமணியம் சோதிமலர்)


படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# களத்துக்கு வெளியே சமைக்கப்படும் போர்க்கள செய்திகள்!

## வன்னிக் களத்தில் எதிரும்–புதிருமாக மிகக் கிட்டத்தில் படை நிலைகளும் புலி நிலைகளும்

மா

காணசபைத் தேர்தலுக்கு முன்பாக வன்னிக் களத்தில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை எப்படியாவது ஒப்பேற்றிவிட நினைக்கிறது அரசு.

**ஏற்கனவே நாம் திட்டவட்டமாக கூறியதுபோன்றே, அரசின் சித்திரைப் புத்தாண்டு காலவரையறை கைக்கு எட்டவில்லை.**

மாங்குளம் நகரைக்கூட 'ஜயசிக்குறுய்' படையினர் கைப்பற்ற இயலவில்லை.

இந்நிலையில் வன்னிக் களத்தில் தினமும் புலிகள் கொல்லப்படுவதாக அரச ஊடகங்கள் 'ஸ்கோர்' கூறிக் கொண்டிருக்கின்றன.

பதுங்கியிருந்து படையினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் புலிகள் கொல்லப்படுவதாக செய்திகள் சொல்லப்படுகின்றன.

எப்போதாவது ஒரு தடவை கிளைமோர் தாக்குதல் நடந்திருக்கக் கூடும். தொடர்ந்து நடத்த முடியாது.

ஒருமுறை கிளைமோர் தாக்குதல் நடந்த உடனேயே புலிகள் உஷாராகி விடுவர். மிகுந்த கவனமுடன் தமது நகர்வுகளை மேற்கொள்வர்.

அதுதவிர, புலிகள் படையினர் போன்று ஒரே பாதையில் தொடர்ந்து நடமாடுவதில்லை. புலிகள் சுதந்திரமாக நடமாடுகின்ற, வாகனங்களில் திரிகின்ற பகுதிகளுக்குள் படையினர் ஊடுருவுவதும் சாத்தியமில்லை.

**எனவே, புலிகளுக்கு எதிராக படையினர் தொடர்ந்து கிளைமோர் அல்லது சினைப்பர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுவது களநிலவரத்துக்கு மாறான தகவல்களேயாகும்.**

விதம் விதமாக, பற்பல உத்திகளை பாவித்து புலிகளை தாக்கிக் கொண்டிருப்பதுபோன்ற எண்ணத்தை ஏற்படுத்தும் பிரசார தந்திரங்களே இவையாகும்.

படையினரின் பிடியில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் ஊடுருவி கிளைமோர் தாக்குதல்கள், கண்ணிவெடித் தாக்குதல்கள் நடத்துவதால், தாமும் அதேபோல பதிலடி நடத்துவதாக காண்பிக்கவும் படைத்தரப்பின் பிரசாரகர்கள் ஆர்வப்படுகிறார்கள் என்று தோன்றுகிறது.

**புலிகள்மீது கிளைமோர் தாக்குதல் நடத்த வேண்டுமானால் புலிகளின் பகுதிகளுக்குள் ஊடுருவ வேண்டும். அப்படி ஊடுருவ முடிந்தால் கிளைமோர் தாக்குதல் எதற்கு? பாரிய தாக்குதலை நடத்தி அப்பகுதியை கைப்பற்றி விடத்தான் படையினர் முயல்வர்.**

ஏனெனில் வன்னிக் களத்தில் ஒவ்வோர் அங்குல நிலத்தையும் கைப்பற்றி முடிப்பதுதான் படையினரின் இன்றைய நோக்கமே தவிர, புலிகளை தேடி அழிப்பதல்ல.

**ஆனால், படைத்தரப்பின் வல்லுநர்களது கணிப்புக்கள், காலவரையறைகள் என்பவற்றைப் பொய்யாக்கிவிட்டு 'ஜயசிக்குறுய்' ஒருவருட பூர்த்தியை நெருங்கி வருகிறது.**

இந்த ஒரு வருட காலத்தில் கிட்டத்தட்ட ஆறாயிரம் படையினருக்கு மேற்பட்ட பாரிய வெற்றிடம் படைத்தரப்பில் ஏற்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாகியும் இச் சமரை தாம் திட்டமிட்டபடி முன்னெடுக்க முடியாமல் படைத் தளபதிகள் முதல், களமுனைத் தளபதிகள் வரை திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

பெரும் ஆரவாரத்துடன் காலவரையறை குறித்துக்கொண்டு படை நகர்வுகள் ஆரம்பமாவதும், பின்னர் ஒய்வதும் கடந்த ஒருவருட காலத்தில் பல தடவைகள் நிகழ்ந்த காட்சிகள்தான்.

**முன்னேறும் முயற்சிகள் நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலும்கூட, 'ஜயசிக்குறுய்' தொடர்கிறது. பயங்கரவாதிகளை தேடி அழிக்கும் பணி தொடர்கிறது" என்று வாய்ப்பாடு மாதிரி அரச ஊடகங்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பதும் வழக்கம்தான்.**

வன்னிக் களத்தில் புலிகளை தேடி அழிக்க வேண்டிய அவசியம் என்ன? அழிப்பதாக இருந்தால் படையினரின் நிலைகளுக்கு சமீபமாகவுள்ள புலிகளது நிலைகளை நோக்கி முன்னேற வேண்டியதுதானே.

வன்னிக் களத்தில் படை நிலைகளும், புலிகளது முன்னரங்க நிலைகளும் மிகக் கிட்டத்தில் எதிரும் புதிருமாக உள்ளன.



புலிகளை அழிக்க வேண்டுமானால் **எங்கும் தேடிச் செல்ல வேண்டியதில்லை. தமக்கு எதிரே உள்ள புலிகளது நிலைகளை நாடிச் சென்றால் போதும். அவ்வாறு நாடிச் செல்லும் முயற்சியில் படையினர் தரப்பின் இழப்பு அதிகமாவதால்தான், அடிக்கடி சண்டைகளை நிறுத்தி படைத் தரப்பு மூச்சுவிட்டுக் கொள்கிறது.**

எனவே, வன்னியில் புலிகளை தேடி அழிப்பது என்ற கூற்று கள நிலவரத்திற்கு நேர்மாறானது. படையினரை திடீர் திடீர் என்று தாக்கிவிட்டு ஒடி மறையும் கெரில்லாக்களாக மட்டும் புலிகள் இருந்தால், அவர்களை தேடி அழிப்பது என்ற கூற்று சரியாக இருக்கும்.

**ஆனால், வன்னியில் பாரிய படை ஒன்றை ஓராண்டு காலமாக தடுத்து நிறுத்தி, பாரிய சேதங்களை உண்டாக்கி போர் அரங்கில் நிலைத்து நிற்கின்றன புலிகளது படையணிகள்.**

ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்தையும் கடப்பதற்கு படைத்தரப்பு பாரிய விலை கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

கெரில்லாப் போரும், மரபுப் போரும் கலந்த புதிய போர் முறையில் 'ஜயசிக்குறுய்' படைகளை எதிர்கொண்டு புலிகள் பல சண்டைகளை நிகழ்த்தி உள்ளனர்.

**எனவே, 'ஜயசிக்குறுய்' மேலும் காலத்தை இழுக்கும்போதும், தொடர்ந்து முன்னேற முடியாமல், ஒய்வு பெற்றுக் கொள்ளும்போதும் பிரசார ஊடகங்களுக்கு தீனிபோட போர்க்கள செய்திகள் சமைக்கப்பட்டே ஆகவேண்டும். அந்தச் சமையலை ஆக்கும் பொறுப்பை இராணுவப் பேச்சாளரே கவனித்துக்கொள்ள வேண்டியதுதான்.**

ஆனாலும், போர்க்களத்துக்கு வெளியில் இருந்து சமைத்துத் தரப்படும் இந்த 'போர்க்கள செய்திகள்' ஒரு உண்மையை தம்மை அறியாமல் ஒப்புக் கொள்கின்றன.

**புலிகள் தமக்கு சமபலமான இன்னொரு படையினர் என்பதை தவிர்க்க முடியாமல் அரச படையினரும், அதன் பிரசாரகர்களும் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.**

ஏனெனில், அதனை அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால், படையினர் பற்றிய குறைவான மதிப்பிடுதல்தான் சிங்கள மக்களிடம் ஏற்படும்.

**அதனால், 'பலமான படை ஒன்றுடன் தான் நாம் போரிட வேண்டி இருக்கிறது' என்பதை சிங்கள மக்களிடம் படைத்தரப்பு தெரிவித்தாக வேண்டும். இல்லையென்றால் ஒருவருட காலமாக 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை இடை நடுவே நிற்பதை எப்படி நியாயப்படுத்துவது?**

தம்மைவிட பலமான, ஆட்பலம் அதிகமான படைகள்மீதே மறுதரப்பு கிளைமோர் தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல் என்பவற்றை நடத்துவது வழக்கம்.

பாரிய தாக்குதல்களை ஒரு பகுதியில் நடத்தமுடியாத நிலையிலும் கிளைமோர் தாக்குதல்கள் போன்ற ஒரு நபர் அல்லது சிலர் பங்குகொள்ளும் நடவடிக்கைகளில் கெரில்லாக்கள் ஈடுபடுவதுண்டு.

**எனவே, புலிகளுக்கு எதிராக தம்மால் கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக படையினர் கூறும்போது, புலிகள் வன்னியில் தம்மைவிட பலமாக உள்ளனர் என்பதை மறைமுக ஒப்புக் கொள்வது போன்றும், புலிகளை எதிர்க்க படையினரும் கெரில்லா உத்திகளை கையாளும் அளவுக்கு புலிகளை தமக்கு சமபலம் கொண்ட படையினராக அரச துருப்புக்கள் எண்ணுகின்றனர் என்பதுமே வெளிப்படுகிறது.**

அதுமட்டுமன்றி கடற்புலிகள்மீது தாக்குதல்கள் நடத்தியதாக வெளியாகும் செய்திகளில் ராடர் பொருத்தப்பட்ட படகுகள் தாக்கப்பட்டதாகவே செய்தி வெளியிடப்படுகிறது.

படகு ஒன்றை கைப்பற்றினால் மட்டுமே அதில் 'ராடர்' பொருத்தப்பட்டுள்ளதா இல்லையா என்பது தெரியவரும்.

எட்ட நின்று தாக்கி அழிக்கப்படும் படகுகளில் ராடர் இருந்ததா என்பது எப்படித் தெரியும்?

**ஆனால், புலிகளின் படகுகள் என்றால் 'ராடர்'கள் பொருத்தப்பட்டிருக்கும். பயங்கரமாக இருக்கும். அவற்றை தாக்கி அழிப்பது சுலபம் அல்ல என்ற தோற்றத்தையே படைத்தரப்பு செய்திகள் தென்னிலங்கை மக்களிடம் ஏற்படுத்துகின்றன.**

புலிகளிடம் தமக்கு சம பலமான கடற்படையொன்று இருப்பதாக தென்னிலங்கை மக்களுக்கு தெரிந்தால்தான், கடற்சமர்களில் கடற்படைக்கு ஏற்படும் இழப்புக்களை பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

ஆனால், கடற்புலிகளின் படகுகள் தாக்கப்பட்டதாக கூறப்படும் விபரிப்புக்களின் அடிப்படையிலேயே கோளாறு இருக்கிறது.

படகில் ராடர் பொருத்தியிருப்பது வேறு கடற்கலங்களின் நடமாட்டங்களை கண்டறியத்தான்.

**எனவே, புலிகளது படகுகளில் 'ராடர்' பொருத்தப்பட்டிருந்தால், கடற்படையினரது படகுகள் தம்மை நெருங்கும் வரை எதற்காக நின்று கொண்டிருக்கப் போகிறார்கள்? கடற்படைப் படகுகளது நடமாட்டம் ராடரில் தெரிந்ததும் கடற்புலிப் படகுகள் விரைவாக பாய்ந்து மறைந்திருக்கும். தாக்குதலுக்குள் சிக்கி இருக்காது.**

உண்மையில் கடற்பரப்பைப் பொறுத்தவரை கடற்படையின் படைக்கல, கடற்கல வசதிகளை புலிகளோடு ஒப்பிட்டால் கடற்படைப் பலம் மலைக்குச் சமன்.

ஆழ் கடற்பகுதியில் சண்டை நடத்த தேவையான விசேஷ கடற்கலங்களை பல கோடி ரூபாய்கள் கொடுத்து கொள்வனவு செய்து வைத்துள்ளனர் கடற் படையினர்.

கடற்படையினரை கடற் புலிகள் நெருங்கவே முடியாதளவுக்கு தாக்கும் திறன் படைத்த கடற்கலங்களும் உள்ளன.

**அவ்வாறு இருந்தும் கடற் புலிகள் தாக்குதல் நடத்துவது என்பது கடற் சமர் ஆச்சரியம். கடற் கரும்புலித் தாக்குதல் என்பதுகூட சுலபமான ஒன்றல்ல. கடற் படையின் கடற்கலங்களுடன் மோதுவது லேசுப்பட்ட காரியம் அல்ல.**

அசுரவேகத்தில் சுழன்று சுழன்று படகை இலாவகமாக செலுத்தி, கடற் கலத்தில் இருந்து வரும் தாக்குதலில் சிக்காமல் சென்று மோதியாக வேண்டும்.

பரந்த கடற்பரப்பு. எதிரே பாரிய கடற்கலங்கள். அவற்றில் இருந்து வரும் தாக்குதல்கள். அத்தனையையும் எதிர் கொண்டு பாய்ந்து செல்லும் விதமாக படகு செலுத்த நீண்ட பயிற்சி மட்டுமன்றி மன உறுதியும் தேவைப்படுகிறது.

**ஆக, கடற்படையின் பாரிய பலத்தை சாதாரண படகுகளில் வரும் கடற்புலிகள் தமது மனோதைரியம், படகோட்டும் இலாவகம், உயிராயுதமான கடற் கரும்புலித் தாக்குதல் ஆகியவை மூலமே எதிர்கொள்கின்றனர்.**

இன்றுவரை கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையேயான மோதல்களில் மொத்தம் 15 ஆயிரம் தொன் எடையுடைய கடற்படை கடற்கலங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது கடற்படைப் படகுகள், கப்பல்கள் ஆகிய கடற்கலங்கள் கரையை ஒட்டியதாக பயணிப்பதில்லை. ஆழ் கடல் சார்ந்த கடற்பரப்பிலேயே பயணிக்கின்றன.

ஆழ்கடல் சண்டைக்கான தமது விசேஷ கடற்கலங்களை நம்பியே அவ்வாறு பயணிக்கின்றனர். அவ்வாறு இருந்தும் கடற்புலிகள் ஆழ் கடலிலேயே கடற்சண்டைகளை நடத்த தொடங்கினர். 22.02.98 அன்று யாழ் குடாநாட்டு கடற் பரப்பில் கடற்படையினருக்கும், கடற்

நாரதர்

புலிகளுக்கும் இடையே நடந்த சண்டை ஆழ் கடல் சண்டையே ஆகும்.

**அச் சண்டையில் ஒருதரையிறக்க கப்பல் உட்பட மூன்று கடற் கலங்களையும், 50ற்கு மேற்பட்ட படையினரையும் கடற் படையினர் இழந்தனர்.**

அச் சமரில் கடற்கல, படைக்கல பலத்தில் தம்முடன் மோதிய கடற்புலிகளைவிட பன்மடங்கு பாரிய பலத்துடனேயே கடற்படையினர் இருந்தனர்.

ஆனால், அதனை ஒப்புக் கொண்டால், புலிகள் இலட்சிய தாகம் கொண்டவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டதாகிவிடும். அதுமட்டுமன்றி படைத் தரப்பின் திறன் பற்றியும் குறைவான மதிப்பிடல்கள் தோன்றும்.

**எனவே, கடற்புலிகளையும் கடற்கல பலத்தில் தமக்கு சமமான வசதி உள்ளவர்களாக சித்தரித்தாக வேண்டியது கட்டாயம்.**

இத்தகைய போர்க்கள சித்தரிப்புக்கள் இலங்கை இருநாடு, இரு படைகள் என்ற மனோபாவத்தையே வளர்த்து வருகின்றன. ஆனால் இது தவிர்க்க முடியாததும்தான்.

**எதிரும் புதிருமாக களத்தில் நின்று மோதும் இரு படைகள் மத்தியிலும்கூட இயல்பாகவே அந்த மனோநிலை ஆழமாகப் பதிவதும் தவிர்க்க முடியாதது.**

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை முடித்துவிட அரசு முனைப்பு காட்டுமானால், வன்னியில் அழிவுகள் அதிகமாகும் அபாயம் உள்ளது.

அத்தகைய நிலையானது மேலும் நெருக்கடி தீவிரமாகச் செய்யுமே தவிர, 'ஜயசிக்குறுய்' படையினரின் இலக்கை எட்ட உதவப்போவதில்லை. ◘

## அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாணத்துக்கு*** வெளிநாட்டுத் தூதர்கள் படையெடுக்கினம். கோடி கோடியாக கொடுக்கப் போகினமாம். அந்தக் கோடிகளை வாங்கி எங்கே கொட்டப்போகினமோ? இதுவரை அதுக்கு இத்தனை கோடி, இதுக்கு இத்தனை கோடி என்று ஒதுக்கப்பட்ட கோடிகள் எங்கே போனது என்று சனத்துக்கு தெரியேல்லை. இனி ஒதுக்கும் கோடிகளை யார் யாருக்காக ஒதுக்கப்போகினமோ: யார் கண்டது?

***அயல் நாட்டில்*** புதிய மாற்றம் வந்ததும் எதிரணித் தலைவர் ஒரு ரவுண்ட் போயிருக்கிறார். இப்படி ஒரு ரவுண்ட் போவார் என்றும், போய்விட்டுவந்து மர்மப் புன்னகை புரிவார் எண்டதும் மாற்றம் வந்ததும் "யாம் சொன்னதல்லோ! உண்மையாகிப்போட்டுது பார்த்தியளோ?" எங்கட அரசியல் தலைவர்களை இன்னமும் புரிஞ்சு கொள்ள முடியவில்லை எண்டால்.... ஹி.ஹி.ஹி. எல்லாம் சரி. ஆனாலும் எங்கட தமிழ்க் கட்சிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திப்பதைவிட எதிரணித் தலைவர் சந்திப்பது தமிழ் பேசும் தரப்புக்கு சாதகம்தான். ஏன் தெரியுமோ? தமிழ்க் கட்சிகள் சந்தித்தால் அரசுக்காகத்தானே துடுப்புத்தூக்கி ஆடுவினம்?

***மனித உரிமை*** குழுவுக்கு பொறுப்பான தமிழருக்கு டமில் தெரியாது. கூட்டான கட்சி நீலமானவர்தான் இவரை சிபாரிசு செய்தாராம். "பாதிக்கப்படுபவர்கள் அம்மாவிடம் முறையிடாததுதான் பாதிப்புக்களுக்குக காரணம்" என்று வானொலி நிகழ்ச்சி ஒன்றில் பகன்றார் அந்த டமிலர். எந்தளவுக்கு நாட்டு நிலவரம் தெரிந்திருக்குது பார்த்தியளோ? எங்கள் தமிழ்க் கட்சிகள் செய்யும் ஒரே ஒரு அரசியல் திருப்பணியே அம்மாவுக்கு முறையிடுதல்தானே? அதுகூட அவருக்கு தெரியாமல் போச்சுப் பார்த்தியளோ?!

***யாழ்ப்பாணத்தில்*** பச்சை உடையினர் நடத்திய இசை நிகழ்ச்சிக்குத் தலைநகரில் இருந்து ஆட்டப் பாட்டக்காரர் சென்றவையாம். சனம் மட்டும் எதிர்பார்த்தளவு இல்லையாம். அதைப் பார்த்துப்போட்டு ஒருத்தர் சொன்னாராம் "ரெண்டு எழுத்தார் காலத்தில் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி-கால்வைக்கக்கூட இடமில்லை. இங்கே கால் நீட்டிப் படுத்துக்கொண்டு இரசிக்கலாம்." இன்னொருத்தர் சொன்னது இது: "நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் காணாமல் போனோருக்காக ஒரு பாடல் பாடியிருந்தால் இன்னமும் சோக்காக இருந்திருக்கும்."

***தலைநகரில்*** கைதுகள் கொஞ்சம் தணிந்திருக்குதாம். பின்னே என்ன? இனி ரவுண்டப் பண்ண ஏரியா வேணுமல்லோ? இன்னும் ஒரு மூன்று நாலு மாசம்போன பிறகு மறுபடி நாலு ஐந்துநாள் தொடர்ச்சியாக மறுபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும். அது புரியாமல் முறையிடல்களால் தணிந்திருப்பதாக நினைக்கலாமோ? அதிகாரத் தரப்பார் நினைத்திருந்தால் ரவுண்டப் தொடங்கிய முதல் நாள் நடந்த சம்பவங்களை அறிந்த உடன் தடுத்திருக்கலாமல்லோ? தொடர்ந்து நாலு ஐந்துநாள் நடக்கும்வரை எங்கே போனவையாம்?!

***மனித உரிமை*** மற்றும் அபிவிருத்தி என்ற லேபிள்களுடன் அமைப்புக்கள் ஆரம்பிப்பது நம் நாட்டு நிலவரப்படி நல்ல இலாபகரமான தொழிலாகிப்போட்டுது. பத்திரிகையாளர்கள் சிலரை கைக்குள் போட்டுக் கொண்டு, தங்களைப் பற்றிய சுயதம்பட்ட செய்திகள் வரவைத்து, அதைக் காட்டியே வெளிநாட்டு நிதி உதவி நிறுவனங்களிடம் நிதி உதவிகள் பெறும் கில்லாடிகளும் இருக்கினம். எப்படியோ பிழைத்துப் போகட்டும். நாலுபேருக்கு நன்மை கிடைத்தால் சரி. ஆனால், அவை தகுதிக்கும், உண்மைக்கும் மாறாக சுயதம்பட்டம் அடிப்பதுதான் மெத்தப்பிழை. சமீபத்தில் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் தமிழ் சட்டத்தரணி பெண்மணி ஒருவர் அடித்த சுயதம்பட்ட அறிமுகமும், மக்களுக்கு நடத்திய போதனையும் கொஞ்சம் ஓவர். 'இலவச சட்ட உதவி' செய்கிறாராம். என்ன சொந்தப் பணத்திலோ? வெளிநாட்டில் இருந்து இலட்சம் இலட்சமாய் பணம் வருகிறதல்லோ?! வவுனியாவில் பாஸ் முறை வந்ததும் தானே முன்னின்று குரல் கொடுத்தாராம். ஹி.ஹி.ஹி... அந்தக் காலத்தில் அம்மணி இந்த நாட்டிலேயே இருக்கவில்லை. சுயதம்பட்டத்துக்கும் ஒரு அளவு கணக்கு வேண்டாமோ? என்ரை வேலாயுதா?

***ஆரியக் கூத்தாடினாலும்*** திட்டமிட்ட குடியேற்ற காரியத்தில் கண்ணாக இருப்பவரை யாழ்ப்பாணம் அனுப்புகினம். திருவானமலை, மணல் ஆறு போன்ற பல பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு அள்ளி கொடுக்கும் வள்ளல் அவர். ஊழல்களும், சுருட்டல்களும் அதிகம் எண்டும் அவருக்கு எதிராக பிரச்சனைகள் கிளப்பப்பட்டது. இதையெல்லாம் தமிழ்க் கட்சிகள் கவனிக்கப் போறதில்லை. அவை சேர்ந்து கூத்தாடினாலும் ஆச்சரியமில்லை. யார் கவனிக்கிறது?!

**இவ்வாரப் பொன்மொழி:**

**"நீ இல்லாத இடத்தில்
உன்னைப் பற்றி
என்ன பேசப்படுகிறதோ,
அதுதான்
உண்மையான விமர்சனம்!"** ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது



177

## புலி எதிர்ப்பும் நிதிப் பெருக்கும்

பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பது கட்டுக்கதை என்று வரதராஜப் பெருமாள் தொடர்ந்து கூறிவந்தார்.

வீடியோவில் மாத்தையாவுடன் பிரபாகரன் கதைத்துக் கொண்டிருக்கும் காட்சியை கொண்ட வீடியோப் படத்தை புலிகள் காண்பித்து வந்தனர் என்று முன்னர் கூறியிருந்தேன் அல்லவா.

அந்த வீடியோப் படம் போலியானது. பிரபாகரன் போன்ற ஒருவரை வைத்து படம் எடுத்துள்ளனர் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட அவர்களது ஆதரவாளர்களும் கூறி வந்தனர்.

தமிழ் நாட்டிலும் புலிகளுக்கு எதிரான சக்திகள் அப்பிரசாரத்தை மேற்கொண்டன. அந்தப் பிரசாரம் முழுமையாக எடுபடாவிட்டாலும் ஓரளவு குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவரான மாத்தையாவின் பெயர் மட்டுமே அடிபட்டுக் கொண்டிருந்தது. கூட்டங்களிலும் மாத்தையாவே கலந்து கொண்டு உரையாற்றினார். பிரபாகரன் வெளியே மக்கள் முன் தோன்றவில்லை.

இவையெல்லாம் இலங்கையில்கூட தமிழ் மக்களிடம் சிறு சந்தேகங்களை தோற்றுவித்திருந்தன.

தமிழ் நாட்டில் திராவிடக்கழக முக்கியஸ்தர் டி.எஸ்.மணி. அவர் பிரபாகரனை சந்திக்க விரும்பினார்.

பிரபாகரனை நேரில் கண்டுவிட்டு சென்று தமிழக மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்வதே அவரது நோக்கம்.

டி.எஸ்.மணியை படகு மூலம் புலிகள் அழைத்து சென்றனர். வன்னிக் காட்டுக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்தார் டி.எஸ்.மணி.

### மறக்கவில்லை

தமிழகம் திரும்பிய பின்னர் தன் அனுபவத்தை விபரித்தார்:

பிரபாகரன் சுறு சுறுப்பாக இருக்கிறார். மிகப் பாரிய முகாம் காட்டுக்குள் இயங்கி வருகிறது.

என்னுடன் அங்கு தற்போதுள்ள சூழ்நிலை பற்றி மனம் விட்டுப் பேசினார். இறுதியாக விடைபெறும்போது பிரபாகரன் கூறினார்: "தமிழ் ஈழம் பெறுவது குறித்து உறுதியாக இருப்பேன். பலம் பொருந்திய நிலையில்தான் சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்தி வருகிறோம். முன்பு ஏமாற்றப்பட்டதை மறந்துவிடவில்லை."

டி.எஸ். மணி தமிழகம் திரும்பி தனது அனுபவங்களைக் கூறியதும், இன்னொரு திராவிடர் கழகப் பிரமுகரான ராமகிருஷ்ணன் என்பவருக்கும் பிரபாகரனை சந்திக்கும் எண்ணம் வந்துவிட்டது.

தமிழ் நாட்டில் புலிகளுக்காக நிதி திரட்டல் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட்டவர் ராமகிருஷ்ணன்.இவரது மேற்பார்வையின்கீழ் ஆயுத தயாரிப்பு பட்டறை ஒன்றும் கோயம்புத்தூரில் இயங்கியதாக தகவல் உண்டு.

ராமகிருஷ்ணனும் வன்னிக் காட்டில் பிரபாகரனை சந்தித்துவிட்டு தமிழகம் சென்று கதை கதையாகக் கூறினார்.

ராமகிருஷ்ணன் பதினாறு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார். அச் சமயத்தில் தமிழக அரசியல் தலைவரான பழ. நெடுமாறனும் வன்னியில்தான் இருந்தார்.

ராமகிருஷ்ணன் தன் அனுபவத்தைக் கூறுகிறார்: "பிரபாகரன் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து விடுகிறார். புலிகளும் அப்படியே. காட்டுக்குள் இருக்கும் தனது அலுவலகத்திற்கு சென்று பத்திரிகைகள் படிக்கிறார். வானொலி கேட்கிறார்.

பல முனைகளில் இருந்துவரும் தகவல்களைக் கேட்டு கட்டளைகள் பிறப்பிக்கிறார். தளபதிகள் வருவதும், ஆலோசனைகள் பெறுவதும் சாதாரணமாக இருக்கிறது.

துப்பாக்கி சுடும் பயிற்சியை பார்வையிடுகிறார். விளக்கங்கள் கொடுக்கிறார்.

நான் அவருடன் இருந்தபோது கலைஞர் கருணாநிதியுடன் சென்னையில் நடந்த பேச்சுவார்த்தைகள் பற்றிய விவரத்தை அவ்வப்போது அறிந்துகொண்டு பதில் அனுப்பினார்.

### வகுப்புக்கள்

முகாமில் தம்பி பிரபாகரனுக்கு இருந்த கலை ஆர்வத்தைப் பார்க்க முடிந்தது. தமிழ்நாட்டில் முதன் முதலாக சுதந்திரப் போராட்டம் நடத்திய புலித்தேவனைப் பற்றிய நாடகம் அங்கு நடத்தப்பட்டது.

இப்போது கலைஞரின் 'பாயும் புலி பண்டாரவன்னியன்' கதையை நாடகமாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் படையில் 11 வயதில் இருந்தே நிறைய உறுப்பினர்கள் சேர்ந்து வருவதால், அவர்களது கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக முகாமில் பள்ளிக்கூடம் திறந்திருக் கிறார்கள்.

தமிழ், விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. வீடியோ, ஓடியோ கசட்டுக்கள் மூலமும் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது.

மாலையில் இசை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், புரட்சிக்கவி பாரதிதாசன் எழுதிய பாடல்களை தேனிசை செல்லப்பா பாடியிருக்கிறார்.

இந்தப் பாசறை பாடங்களை, பாடல்களை புலிகள் விரும்பிக் கேட்கிறார்கள்.

புலிகள் ஆயுதங்களை கைவிடுவார்களா?



கலைஞர் கருணாநிதியுடன் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்–யோகி.

ஜனநாயகப் பாதைக்கு திரும்புவார்களா? என்று பிரபாகரனிடம் கேட்டேன்.

"கேள்வியே தவறானது" என்றார் பிரபாகரன். "ஜனநாயக உரிமைகளை ஆயுத பலத்தால் சாகடிக்கப் பார்த்தார்கள். ஜனநாயக உரிமைகளைக் காக்கவே நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்" என்றார் பிரபாகரன்.

"இப்போது சிறீலங்கா அரசுடன் பேச்சு நடத்துகிறீர்களே, முன்னர்போல ஏமாற்ற மாட்டீர்களா?" என்று கேட்டேன்.

"மக்களின் முழு ஆதரவு எங்களுக்கு இருக்கிறது. கடந்தகால பாடத்தை மறந்து சிறிலங்கா நடந்து கொள்ளுமானால் அதன் விளைவுகளுக்கும் அவர்களே பொறுப்பேற்க வேண்டி இருக்கும்." என்று கூறினார் பிரபாகரன்.

### வல்வெட்டித்துறையில்

வல்வெட்டித்துறை சென்று பிரபாகரனின் வீட்டைப் பார்த்தேன். நாசமாகிக் கிடந்தது. கிட்டுவின் வீட்டுக்குச் சென்று அவரது அம்மாவைப் பார்த்தேன்.

அழுக்கான உடைகளுடன் வரும் பையன்களை உட்கார வைத்து, அவர்கள் உடைகளை வாங்கி அந்த அம்மா துவைத்துக் கொடுக்கிறார்.

"இந்தப் பாக்கியமாவது கிடைத்ததே!" என்று அவர் சொன்னபோது உண்மையிலேயே எனக்கு மெய்சிலிர்த்தது.

"கிட்டு கடிதம் எழுதினாரா அம்மா?" என்று நான் கேட்டதும், "என்றைக்கப்பா அவன் எழுதியிருக்கிறான். கேட்டால், 'நீ மட்டுமா எனக்கு அம்மா? எத்தனை பெடியன் களின் அம்மாக்கள் இருக்கிறார்கள்' என்று கூறுவான் எனச் சிரித்தார் கிட்டுவின் தாய்."

மேற்கண்டவாறு தன் அனுபவங்களை விபரித்திருந் தார் ராமகிருஷ்ணன்.

## ஓடும்போதும் சுருட்டல்

### சுருட்டிய பொறுப்பாளர்

விடுதலைப் புலிகளிடம் இருந்து தப்பியோடியபோது வாகனங்கள் மற்றும் பெறுமதியான உடமைகளையும் கைவிட்டே ஏனைய இயக்கங்கள் தப்பிச் சென்றன.

பொதுமக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட வாகனங்களை புலிகள் திருப்பி ஒப்படைத்தனர். ஏனையவற்றை தங்களுடன் வைத்துக் கொண்டனர்.

தப்பியோடும்போது இயக்கப் பொறுப்பாளர்கள் சிலர் நடந்து கொண்ட முறைகள் சுவாரசியமானவை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மட்டக்களப்பு பிரமுகர்களில் ஒருவராக இருந்தவரின் கையில் ஒரு இலட்சம் ரூபா இருந்தது. அவருடன் சேர்ந்து ஓடிக்கொண்டிருந்த உறுப்பினருக்கும் அது தெரியும்.

அந்தப் பணத்தை சுருட்டியாக வேண்டும். என்ன செய்யலாம்? என்று யோசித்தார் பொறுப்பாளர். ஓடிக்கொண்டிருக்கும் போதே பணக் கட்டை உள்ளாடைக்குள் மறைத்துவிட்டு, திடீரென்று "ஐயோ தோழர் பணத்தைக் காணவில்லை" என்று புலம்பத் தொடங்கிவிட்டார்.

கூட ஓடிச் சென்றவருக்கு அது பொய் என்பது தெரியும். ஆனால் நம்பியது போல நடித்தார். ஏன் தெரியுமா, அந்த உறுப்பினர் பொறுப்பாளருக்கு தெரியாமல் ஒரு ஐம்பதினாயிரம் ரூபாயை ஏற்கனவே உள்ளாடைக்குள் வைத்திருந்தார்.

இவ்வாறு ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல், வஞ்சித்தல், புறம்கூறுதல் போன்ற கேடு கெட்ட பழக்கங்கள் மேலோங்கியிருந்தன.

இயக்கத் தலைமைகள் இதனைக் கண்டு கொள்ளவில்லை. ஏனெனில் அவையும் இயக்க உறுப்பினர்களுக்கு என்று இந்திய அரசிடம் பெற்ற பணத்தை தங்கள் பெயரில் சேமித்துக்கொண்டிருந்தன.

இந்தியப் படை காலத்தில் அதனுடன் இணைந்திருந்த இயக்கங்களுக்கு பெரும் தொகையான நிதி கிடைத்தது. கோடி கோடியாக கிடைத்தன.

உண்மையில் புலி எதிர்ப்பு என்ற நிலைப்பாடு புலிகளுக்கு எதிரான இயக்கத் தலைவர்களை தரையில் இருந்து ஆகாயத்திற்கு தூக்கியது. பெரும் செல்வந்தர்களாகினர்.

புலிகள் எங்களை தடுத்துவிட்டார்கள் எங்கள் தோழர்களை கொன்றுவிட்டார்கள் என்று இவர்கள் ஒப்பாரி வைத்தனரே தவிர புலிகளை எதிர்த்து உருப்படியாக எதனையும் செய்ததும் இல்லை. செய்த ஒரே ஒரு காரியம் புலி எதிர்ப்பு பேசிப்பேசி நிதி சேகரிப்பு நடத்தியதுதான்.

புலிகள் மட்டும் இந்திய அரசுடன் சமரசமாக சென்றிருப்பார்களேயானால், ஏனைய இயக்கத் தலைவர்களை இந்தியா திரும்பியும் பார்த்திருக்காது.

எனவே, புலிகளும் இந்தியாவும் சண்டையிட்டதால் உண்மையில் பயன் அடைந்தவர்கள் இயக்கத் தலைவர்கள்தான்.

இவ்வாறான பின்னணியில் இயக்கங்கள் சீர்குலைந்ததும், தவறான சக்திகள் இயக்கங்களுக்குள் தலைவர்களால் முன்னிறுத்தப்படுவதும் தவிர்க்க முடியாததாக இருந்தது.

போதிய நிதி கொடுத்தும், ஆயுதங்கள் கொடுத்தும்கூட தாங்கள் வெளியேற முன்னரே, விழுந்தடித்து தப்பியோடும் இயக்கங்களைக் கண்டு இந்தியப் படையினர் வெறுத்துப் போனார்கள்.

தங்கள் தலைவர்களதும், பொறுப்பாளர்களதும் புலி எதிர்ப்பு வீரம் எத்தகையது? என்பதை உறுப்பினர்கள் நேரில் கண்டபோது அவர்களுக்கு வாழ்க்கையே வெறுத்துப்போனது.



### தாக்குதல்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் திருமலை மாவட்ட பொறுப்பாளர் ஜோச் தம்பிராஜா. இவர் சிலகாலம் நிக்கிரகுவாவில் இருந்து கல்வி கற்றவர்.

திருமலையில் மாகாணசபை செயலகம் இருந்தது. ஜோச் வைத்ததுதான் அங்கு சட்டம். வரதராஜப் பெருமாளுக்கும் ஜோச்மீது பிரியம்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஜோச் முன்னின்றவர். சந்தர்ப்பம் கிடைத்தால் ஜோச்சை தீர்த்துக் கட்டுவது என்று புலிகள் காத்திருந்தனர்.

ஜோச்சை தீர்த்துக்கட்ட சில முயற்சிகள் செய்யப்பட்டபோதும் அவர் தப்பிக் கொண்டிருந்தார்.

11.01.1990 அன்று தனது பஜிரோ வாகனத்தில், மெய்க்காவலர்கள் சகிதம் நிலாவெளிக்கு புறப்பட்டார் ஜோச்.

திருமலையில் அவரது அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு நிலாவெளி நோக்கி சென்று கொண்டிருந்தார்.

நிலாவெளியில் ஆறாம் கட்டையில் ஒரு திருப்பம் ஒன்று வரும். அந்தத் திருப்பத்தில் மறைந்திருப்பவர்களை திருமலையில் இருந்து நிலாவெளி நோக்கிச் செல்பவர்கள் கண்டு கொள்ள முடியாது.

அத் திருப்பத்தில் ஆர்.பி.ஜி. மற்றும் வைத்துத்தான் புலிகள் பல தாக்குதல்களை நடத்தியும் இருந்தனர்.

அன்றும் அத் திருப்பத்தில் ஆயுதங்களுடன் புலிகள் காத்திருந்தனர்.

மாகாணசபை உறுப்பினர்களோ அல்லது முக்கியமானவர்களோதான் அப்போது பஜிரோக்களில் திரிவது வழக்கம்.

ஜோச்சினுடைய பஜிரோவும் புலிகளுக்கு நன்கு பரிச்சயமானது.

எனவே, திருப்பத்தில் பஜிரோவைக் கண்டதும் ஆர்.பி.ஜியால் தாக்கிச் சரமாரியாகச் சுடத் தொடங்கி விட்டனர். ஜோச்சை எதிர்பார்த்து இருந்து நடத்திய தாக்குதல் அல்ல அது.


ஆனாலும் புலிகள் தேடிய இலக்கு, எதிர்பாராமல் அவர்கள் வலையில் விழுந்தது.

எதிர்த்து சண்டையிடவே முடியாத நிலையில் ஜோச் மற்றும் அவரது மெய்க்காவலர்கள் உட்பட 6பேர் கொல்லப்பட்டனர்.

ஜோச்சுடன் இருந்த ஒருவர்தான் புலிளுக்கு தகவல் கொடுத்தார் என்றும் ஒரு கருத்து நிலவியது.

எனினும், தற்செயலாக ஜோச் மாட்டிக்கொண்டார் என்பதே பெரும்பாலும் உண்மையாக இருக்கவேண்டும்.

ஜோச் கொல்லப்பட்ட திருப்பத்தை ஜோச் வளைவு என்று பின்னர் ஈ.பி.ஆர்.



ஜோச் தாக்கப்பட்ட இடம் அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ளது.

வார்கள்.

அந்த வளைவில்தான் 1997ல் திருமலை எம்.பி. மகரூப் சென்ற வாகனமும் புலிகளால் தாக்கப்பட்டு மகரூப்பும் பலியானார்.

ஜோச் தம்பிராஜா கொல்லப்பட்ட பின்னர் திருமலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க நடவடிக்கைகள் மந்த கதிக்கு உள்ளாகின.

வரதராஜப்பெருமாள் தனது வலது கரம் வீழ்ந்துவிட்டது என்று வருந்தினார்.

வடக்கு-கிழக்கு மாகாணசபையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. கிட்டத்தட்ட 20 நிமிட நேரம் அழுதபடியே உரையாற்றினார் பெருமாள்.

'திருமலையை சிங்கப்பூராக்க கனவு கண்டாயே, போய்விட்டாயே' என்று கூறித் தேம்பினார்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வளர்ந்து வரும் எதிர்ப்பலை கூட்டணியின் எதிர்நீச்சல்!

## அலசுவது– இராஜதந்திரி

பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை கொண்டுவர உள்ளதாகவும், அது பயனளிக்காவிட்டால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர உள்ளதாகவும் கூட்டணியினர் கூறியுள்ளனர்.

சமீபகாலத்தில் தமிழ் மக்களுக்கெதிராக இன்றைய ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் இன ஒடுக்குமுறைகள், அரசுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளை தர்ம சங்கடத்திற்கு உள்ளாகியுள்ளதையே கூட்டணியின் முடிவு புலப்படுத்துகிறது.

இன்றைய ஆட்சியாளர்களின் அரசியல், இராணுவ வியூகங்கள் தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் திசையில் அடியெடுத்து வைத்தபோதெல்லாம் தமிழ்க் கட்சிகள் மௌனமாகவே இருந்து வந்தன.

**தமது இராணுவத் தீர்வு முயற்சிகள் வெளியுலகின் கண்களுக்கு தெரியாதிருக்க, அரசியல் தீர்வுப் பொதி என்ற மாயமானை காண்பிக்கும் ஆட்சியாளரது தந்திரங்களுக்கும் இன்றுவரை சகல தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைத்தே வருகின்றன.**

சில மாதங்களுக்கு முன்பு இலங்கை அரசின் ரூபவாஹினியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் அவர்களிடம், பாதுகாப்பு கெடுபிடிகள் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

**அக் கேள்விக்கு பதிலளித்த சிவசிதம்பரம் அவர்கள், "சென்ற கால ஆட்சியில் இன்றுள்ளதைவிட பாதகமான நிலை நிலவியது" என்று நியாயப்படுத்த முயன்றிருந்தார். அரச சார்பு பேச்சாளர் ஒருவர் போன்றே திரு.சிவசிதம்பரம் அவர்களது கருத்துக்கள் அன்று அமைந்திருந்தன.**

இன்றைய ஜனாதிபதிமீதும், ஆட்சியாளர்மீதும் தமிழ் பேசும் மக்களும் ஆரம்பத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். தமிழ் பேசும் மக்களாலும் சமாதானப் புறா என்றே ஜனாதிபதி சந்திரிக்கா வர்ணிக்கப்பட்டிருந்தார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டும் தாமாக முன்வந்து தங்கள் உரிமைகளைத் தரப்போவதில்லை என்பதை தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிந்தே இருக்கின்றனர்.

உதட்டளவில் எத்தகைய இனிப்பான வார்த்தைகளை கூறினாலும், கரிசனையாக பேசினாலும் இரண்டு கட்சிகளுமே பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைகளே என்பது அனுபவ பூர்வமாக அறிந்த உண்மையாகும்.

**ஜனாதிபதி சந்திரிக்காவை சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த ஒருவராக அல்லாமல், விஜயகுமார துங்காவின் வழி வந்த ஒருவராகவும், இன வாதத்துக்கு எதிராக குரல் கொடுக்கக்கூடிய சிங்கள முற்போக்கு சக்திகளின் பின்னணியைக் கொண்ட ஒருவராகவுமே தமிழ் பேசும் மக்கள் அன்று கருதியிருந்தனர்.**

முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கா, மற்றும் சிறிமாவோ அம்மையார் ஆகியோரின் அரசியல் வாரிசாக சந்திரிக்கா அம்மையாரை தமிழ் மக்கள் அன்று நோக்கியிருக்கவில்லை.

டி.எஸ்.சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, பண்டாரநாயக்கா போன்றோரை பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகவே தமிழ்பேசும் மக்களுக்கு வரலாறு இனம் காட்டி நிற்கிறது.

எனவே, முன்னைய பேரினவாத அரசியலின் தொடர்ச்சியற்ற ஒருவராக ஜனாதிபதி சந்திரிக்காவை கருதியதாலேயே தமிழ் பேசும் மக்கள் அவரை சமாதான தேவதையாக கருதத் தலைப்பட்டனர்.

ஆனால், தீர்வுப் பொதி பற்றிய இழுத்தடிப்புக்கள், பௌத்த மத குருமாரின் எதிர்ப்புக்கு பயந்து பொதியில் செய்த குறைப்புக்கள் போன்றவையும், இராணுவத் தீர்வில் காட்டிய அக்கறையும் தமிழ் பேசும் மக்களிடம் ஜனாதிபதி சந்திரிக்கா பற்றிய நம்பிக்கையீனங்களை தோற்றுவித்தன.

யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் 'யாப்பா பட்டுன' என்று அழைத்ததுடன், தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமான வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இத்தகைய நிகழ்வுகள் யாவும் தனக்கு முந்தைய சிங்கள அரசியல் தலைமைகளின் அடியொற்றியே ஜனாதிபதி சந்திரிக்காவும் காலடி எடுத்து வைத்துள்ளார் என்பதை அழுத்தம் திருத்தமாக புலப்படுத்தியிருந்தன.

யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னரும் அரசியல் தீர்வை இழுத்தடித்த ஜனாதிபதி சந்திரிக்கா, வன்னியில் பாரிய படையெடுப்பை ஆரம்பித்தபோது, தமக்கு முன்பிருந்த ஆட்சித் தலைவர்களைவிட இராணுவத் தீர்வில் ஆர்வமும், நம்பிக்கையும் உடைய ஒருவராகவே தமிழ் மக்களால் கருதப்படலானார்.

**புலிகளை ஒழித்துக் கட்டல் என்பது தமிழர் தரப்பின் பலத்தை உடைத்துப் போட்டுவிட்டு, சிங்களப் பேரினவாத பூதத்தின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற தீர்வொன்றை தமிழ் தரப்பிடம் திணிப்பதற்கான தந்திரமே என்பதை தமிழ் மக்கள் அறிந்து கொண்டனர்.**

தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட முன்னாள் போராளிகள் என்று தம்மை கூறிக்கொள்ளும் தமிழ்க் கட்சிகளும் ஆட்சியாளரின் அபாயகரமான தந்திரத்தை தமிழ் மக்களிடம் சுட்டிக்காட்டி விழிப்பூட்ட முன்வந்திருக்கவில்லை.

**மிகப் பாரியதும், பல்லாயிரம் தமிழ் மக்களை அகதிகளாக்கியும், பல பிரதேசங்களை மக்கள் நடமாட்டமில்லாத சூனியப் பிரதேசங்களாக மாற்றும் விதமாகவும் முன்னெடுக்கப்படுவதுமான 'ஜயசிக்குறுய்'யின் உள்ளார்ந்த நோக்கத்தை எந்தவொரு தமிழ்க் கட்சியும் அம்பலப்படுத்த துணியவில்லை.**

இன்று கொழும்பு நகரின் பாதுகாப்புக் குறித்தும், குண்டு வெடிப்புக்களை தடுக்கவேண்டி இருப்பதால் கைதுகள், வாகனத் தடைகள், பாஸ் முறைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டி இருப்பதாகவும் ஆட்சியாளர்கள் நியாயம் கூறுகின்றனர்.

ஆனால், அதே ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கில் தமது இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்தியுள்ள அனர்த்தங்கள் ஏராளமானவையாகும்.

**கிளிநொச்சி நகர் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையால் தரைமட்டமாக காட்சியளிக்கிறது. குடிமக்கள் இல்லங்கள்மீது குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தே வருகின்றன. எத்தனையோ தேவாலயங்கள் சேதமாகி உள்ளன.**

யாழ் நகரில் மக்களின் குடியிருப்புக்கள் உட்பட கட்டடங்கள் ஏராளமானவை சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையினால் தரைமட்டமாகியுள்ளன.

தென்னிலங்கையை பாதுகாப்பதற்காக தமிழ் மக்களை அன்றாட அவலங்களுக்கு உள்ளாக்க தயங்காத ஆட்சியாளர்கள், வடக்கு-கிழக்கை சுடுகாடாக மாற்றியேனும் இராணுவரீதியில் வெற்றி பெறவும், அதனை தமது அரசியல் மூலதனமாக மாற்றிக் கொள்வதிலுமே கண்ணும் கருத்துமாய் உள்ளனர்.

ஆயினும், தமிழ்க் கட்சிகள் ஆட்சியாளரின் மூர்க்கமான போர் முகத்தை கண்டும் காணாததுபோலவே பாசாங்கு செய்து வந்தன. கைதுகள் தவிர்க்க முடியாதவைதான், ஆனால் முரட்டுத்தனத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம் என்பது போன்றே தமிழ்க் கட்சிகளது கருத்துக்களும், குரல் கொடுப்புக்களும் அமைந்து வருகின்றன.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதுதான் ஒரே ஒரு நீதியான பரிகாரமாக இருக்கும்போது, இராணுவத் தீர்வை முதன்மைப்படுத்தி முன்னெடுக்கும்



ஆட்சியாளர்கள்தான் தலைநகர குண்டு வெடிப்புக்கள் உட்பட வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் அனைத்துக்கும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் ஆகின்றனர்.

**இராணுவத் தீர்வை கைவிட்டு நீதியான அரசியல் தீர்வு ஒன்றுக்கு ஆட்சியாளர்கள் தயாராக இருப்பார்களேயானால் சகல அனர்த்தங்களும் நின்றுவிடும்.**

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை மிக திட்டவட்டமாக மறுத்தலித்திருப்பது ஒன்றே, ஆட்சியாளர்கள் எத்தகைய தீர்வை நாடுகின்றனர் என்பதற்கு தகுந்த

# அவசியம் அற்றுப்போகும் கட்சிகள்

உதாரணமாக விளங்குகின்றது.

எனவே, இன்றைய ஆட்சியாளர்களும், ஜனாதிபதி சந்திரிக்காவும் தமக்கு முன்னைய ஆட்சியாளரது அடிச்சுவட்டை சற்றும் பிசகாமல் பின்தொடர்கின்றனர் என்ற கருத்து வலுப்பட்டு வருகிறது.

ஆட்சியாளரது குணத்தையும், அவர்களது உள்ளார்ந்த நோக்கத்தையும் விரைவாக இனம் கண்டு அதனை தமது மக்களின் முன் தெரிவிப்பதும், விழிப்பூட்டி வைத்திருப்பதுமே தமிழ் அரசியல் கட்சிகளின் கடமைகளாகும்.

**ஏனையோரைவிட சம கால நிகழ்ச்சிப் போக்குகளை சரியாக விளங்கிக் கொள்வதிலும், அதற்கேற்ப மக்களை தயார்படுத்துவதிலுமே தலைமைகளது சிறப்பும், தேவையும் அடங்கியிருக்கிறது.**

ஆனால், இன்றுள்ள தமிழ்க் கட்சிகள் தாமும் தூங்குவது போன்று நடிப்பதுடன், தமிழ் மக்களை தூக்கத்தில் ஆழ்த்தவும், போராட்டம் மீதான நம்பிக்கைகளை குலைக்கவும் ஏற்ற கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றன.

இன்றைய ஆட்சியாளரின் உள்ளார்ந்த நோக்கங்களை உள்நாட்டில் மட்டுமன்றி, வெளியுலகிலும் மூடிமறைக்கும் முக்கிய பாத்திரத்தையே தமிழ்க் கட்சிகளே வகித்துவருகின்றன.

**தமிழ்த் தரப்பை பலவீனமாக்குவதை இலக்காகக் கொண்ட இராணுவ நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிரானவை மட்டுமே என்பது போன்றும், இன ஒடுக்குமுறைக்கான அழுத்தங்களாக மாறிவரும் அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவற்றை வெறுமனே பாதுகாப்புடன் தொடர்புடையவை மட்டுமே என்பதுபோலவுமே இக் கட்சிகள் தொடர்ந்து சித்தரிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.**

தமது சுயநல நலன்களுக்காக அரசை ஏதோ வகையில் சார்ந்து நிற்கவேண்டிய தேவை இருப்பதால், அரசின் உண்மையான முகத்தையும், உள்ளார்ந்த நோக்கங்களையும் மூடி மறைப்பதில் இக் கட்சிகள் முனைப்புக் காட்டுகின்றன.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் தங்கள் சொந்த அனுபவங்களின் துணையுடன்தான் இன்றைய ஆட்சியாளர் பற்றிய முடிவுகளுக்கு வந்துள்ளனர்.

**கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பொதுஜன முன்னணி சார்ந்த வேட்பாளர்களுக்கு ஆர்வத்துடன் வாக்களிக்க முன்வந்திருக்கவில்லை. அதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் பொதுஜன முன்னணிக்கே பெருவாரியாக வாக்களித்திருந்தனர்.**

பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்திருந்தது. இ.தொ.கா. பொதுஜன முன்னணியுடன் இணைந்து நின்றது. அவ்வாறு இருந்தும் பொதுஜன முன்னணி சார்பான சுயேட்சைக் குழுவுக்கு தமிழ் மக்களிடம் பேராதரவு ஏற்பட்டிருக்கவில்லை.

வடக்கே 'ஒப்பரேஷன் எடிபல' வை ஆரம்பித்து அதனை தேர்தல் வெற்றிக்கான மூலதனமாகக் கொண்ட பொதுஜன முன்னணிக்கு தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும் என்பதுதான் தமிழ்க் கட்சிகளான கூட்டணி, இ.தொ.கா. போன்றவை தமிழ் மக்களுக்கு வழங்கிய வழிநடத்தலாகும்.

**ஆனால், மக்களின் உணர்வுகள், கருத்துக்கள் என்பவற்றுக்கு எதிராக கட்சிகள் நிற்குமானால், அவற்றின் முடிவுகளும் மக்களால் தூக்கி எறியப்படும் என்பதற்கு உதாரணமாக கொழும்பு மாநகரம் உட்பட மலையகத்திலும் தமிழ் மக்களது வாக்களிப்பு அமைந்திருந்தது.**

அதேபோல, அவசரகால சட்டத்தின்கீழ் தமிழ் மக்களை தாம் நினைத்தபடி, ஆட்டுவிக்கும் ஆட்சியாளரது அணுகுமுறைகளும் மிகப் பாரிய எதிர்ப்பலையை தமிழ் மக்களிடம் தற்போது தோற்றுவித்துள்ளன.

இவற்றை பாதுகாப்பு தரப்பாரது தன்னிச்சையான அணுகு முறையாக காண்பித்து, அரசுக்கு எதிரான அதிருப்தியை தணிக்க தமிழ்க் கட்சிகள் பல மேற்கொண்ட முயற்சிகளும் படு தோல்வியை சந்தித்திருக்கின்றன.

ஆட்சியாளருக்கு எதிரான எதிர்ப்பலையானது தமிழ்க் கட்சிகளையும் அரசியல் அரங்கில் இருந்து அடித்துச் சென்று காணாமல் செய்யுமளவுக்கு மாறிவருகிறது.

**மக்கள் தாங்களாகவே போராட ஆரம்பித்துள்ள காட்சிகளும், இந்து அமைப்புக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் தமிழ்க் கட்சிகள் எதற்காக இருக்கின்றன? என்ற கேள்வியை எழுப்பியுள்ளதுடன், இக் கட்சிகள் அவசியமற்ற அமைப்புக்களாக கருதப்படும் நிலையையும் தோற்றுவித்துவிட்டன.**

ஏனைய தமிழ்க் கட்சிகளைவிட கூட்டணியினர்தான் தமிழ் மக்களின் மனநிலையை விரைவாக புரிந்து கொண்டுள்ளனர். அதனால்தான் மக்களின் அதிருப்திகளில் இருந்து தப்புவதற்காக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறையீடு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர உள்ளதாக பத்திரிகைக்கு செய்தி கொடுப்பது போன்ற அரசியல் சாணக்கியங்களால் தங்களை பாதுகாக்க முயன்று வருகின்றனர். மக்களின் எதிர்ப்பலைக்குள், அரசை நோகாமல் சாடும் தந்திரத்தோடு எதிர்நீச்சல் போட முற்பட்டுள்ளனர்.

சென்ற ஆட்சியைவிட இன்றைய ஆட்சி மேலானது என்று வாதிட்ட கூட்டணித் தலைவர், நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முடிவு செய்துள்ளதாக கூறியிருப்பது, சென்ற ஆட்சிக் காலத்தைவிட இன்று நிலைமை மோசமடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளமையைத்தான் குறிக்கிறது. ஏனெனில் கடந்த ஐ.தே.கட்சி ஆட்சியில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக கூட்டணியினர் நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கவில்லை.

ஆக, தங்கள் சொந்த அனுபவங்கள் மூலம் இன்றைய ஆட்சியாளர்கள் பற்றி தமிழ் மக்கள் எப்போதோ செய்த முடிவுக்கு, இப்போது தமிழ்க் கட்சிகள் தவிர்க்க முடியாமல் வந்தடைகின்றன. எனவே, இப்போது மக்கள்தான் இக் கட்சிகளையும் வழிநடத்திச் செல்ல வேண்டியவர்களாக உள்ளனர்.

**ஆனாலும், பாதுகாப்பு அமைச்சரும் முப்படைத் தளபதியுமான ஜனாதிபதியை பற்றி ஒரு விமர்சனம் கூட முன்வைக்காமல், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பற்றி மட்டும் கூறுவதுகூட, இந்த ஆட்சியின் அச்சாணியை பாதுகாப்பதில் கூட்டணியினருக்கு உள்ள உள்ளார்ந்த அக்கறையைப் புலப்படுத்த தவறவில்லை.** ■

---

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

# தடையும்-அனுமதியும்

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, அதன் உள்நோக்கத்தை புட்டு புட்டு வைத்தது முரசு.

'யாழ் குடாநாட்டு இராணுவ ஆட்சிக்கு வெள்ளையடிக்கும் முயற்சி' என்று அதனை முரசத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றினால், இராணுவ நிர்வாகத்துக்கு முடிவு கட்டலாம் என்று புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டும் கூறின.

உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றினால் அபிவிருத்திகளை செய்யலாம் என்று ஈ.பி.டி.பி கூறியது.

உண்மையான நிலவரத்துக்கு புறம்பான கற்பனை உலகில் தமிழ்க் கட்சிகள் குறட்டை விட்டு தூங்குகின்றனவா? அல்லது தூங்குவது போல நடிக்கின்றனவா?

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் யாழ் குடாநாட்டு நிலவரம் என்ன? பாதுகாப்பு கெடுபிடிகள் முன்னரைவிட இறுக்கமாகி உள்ளன.

யாழ் குடாநாட்டில் தேர்தலை நடத்தி முடித்துவிட்டு, அங்கு மக்களின் பிரதிநிதிகளிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டதாக அரசாங்கம் உலகுக்கு அறிவித்தது.

தங்கள் விரலால் தங்கள் கண்ணுக்குள் குத்துவதுபோல, சில தமிழ்க் கட்சிகளும் மக்கள் துள்ளித்துள்ளி வாக்களித்ததாகக் கூறி, அரசுக்கு தோதான பிரசாரத்துக்கு தேவையான கருத்துக்களை அள்ளி அள்ளிப் போட்டன.

எல்லாம் முடிந்தது. எதிர்பார்த்தது நடக்கிறது. வலிகாமத்தில் பல பகுதிகளில் மக்கள் குடியேற படையினர் தடை விதித்துள்ளனர். சோதனைகள், சுற்றி வளைப்புக்கள் அதிகமாகியுள்ளன. ஊமைப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான கொடுமைக்கு காரணமான படையினர்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படியே பட்டியலிடலாம்.

சரி, அபிவிருத்திக்கு என்ன நடந்தது? யாழ் குடாநாட்டுக்கு பல நூறு கோடிகள் ஒதுக்க இருப்பது போலவும், அதற்கு முதற்கட்டமாக சில கோடிகளை ஒதுக்குவது போலவும் அரசாங்கம் அறிவித்தது.

ஏதோ தமிழ்க் கட்சிகள் மற்றும் யாழ் எம்.பிகள் கேட்க கேட்க அரசு ஒதுக்கித் தள்ளுகிறது என்பது போல உள்ளூர் முதல் உலகம்வரை நம்ப வைத்தாகி விட்டது.

தமிழ்க் கட்சிகளும் அலரி மாளிகையில் போய் தாம் ஆராய்ச்சி மணியை அடிக்கும்போதெல்லாம் நீதியும், நிதியும் தாராளமாகக் கிடைப்பதுபோல தம் பங்குக்கு செய்திகள் கொடுத்து வந்தன.

இதெல்லாம் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கும் தந்திரம். யாழ் குடாநாட்டுக்கு நிதி ஒதுக்கல் என்ற பெயரில் பெறும் நிதி அங்குதான் பயன்படும் என்று என்ன உத்தரவாதம் இருக்கிறது? என்று முரசு எச்சரித்தது. யார் கேட்டார்கள்.

இப்போது உண்மை வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. யாழ் குடாநாட்டுக்கு இத்தனை கோடி, இத்தனை இலட்சம் என்று தமிழ்க் கட்சிகளின் விளம்பர அனுசரணையுடன் ஆரவாரமாக ஒதுக்கப்பட்ட நிதியில் 40 சதவீதமான நிதி திரும்பப் பெறப்பட்டுள்ளது.

ஊரறிய உலகறிய நிதி ஒதுக்கீடுபற்றி ஆரவாரம் செய்துவிட்டு, காதும் காதும் வைத்ததுமாதிரி திருப்பி எடுத்துவிட்டனர். இடது கையால் உலகறிய கொடுப்பதை, வலது கையால் யாரும் அறியாமல் எடுத்தாகிவிட்டது.

அது மட்டுமல்ல, யாழ் குடாநாட்டுக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இனிமேல் சுதந்திரமாக சென்றுவரவும் முடியாது. அரச பிரதிநிதி ஒருவர் தொங்கிக் கொண்டு போவாராம்.

முழுக்க முழுக்க படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் பகுதிக்கு தொண்டர் நிறுவனங்கள் செல்ல தடை விதிப்பது ஏன்?

"புலிகளுக்கு உதவிகள் போகின்றன அதுதான் தடுக்கிறோம்" என்று வழக்கம் போல நியாயம் கூற குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி அல்ல.

மடியிலே கனம். மனதிலே பயம், காரணம் அதுதான். யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்வதல்ல, அபிவிருத்தி செய்வதாக ஆரவாரம் செய்வதுதான் அரசின் நோக்கமா?

இதற்கிடையே இன்னொரு தகவல் ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டியது.



ஆரியரத்னா

பத்திரிகை ஒன்றில், வடக்கு-கிழக்கில் துயர் அடையும் மக்களுக்கு உதவ ஜனாதிபதி ஆவலுற்று, சர்வோதயத் தலைவருடன் நீண்ட ஆலோசனை நடத்தியதாக செய்தி வெளியாகி இருந்தது.

அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு யாழ் செல்ல கட்டுப்பாடு. சர்வோதய ஆரியரத்னாவுக்கு யாழ் செல்ல கட்டளை.

சர்வோதய பற்றியும், ஆரியரத்னா பற்றியும் முன்னர் புலிகள் கடும் குற்றம் சாட்டியிருந்தனர். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சர்வோதயவின் நடவடிக்கைகளுக்கு தடையும் விதித்தனர்.

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு என்று வெளிநாடுகளில் இருந்து சர்வோதய பெற்ற பாரிய நிதி உதவிகள், வடக்கு கிழக்கு எல்லைப்பகுதி சிங்களக் கிராமங்களுக்கும், தென்பகுதிக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அந்த மோசடியை கண்டு பிடித்ததாலேயே தடை விதிப்பதாக புலிகள் தெரிவித்திருந்தனர்.

அதே ஆரியரத்னாவுடன்தான் ஜனாதிபதி பேசியிருக்கிறார், நீண்ட நேரம் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி பற்றி உரையாடியிருக்கிறார். இதற்கு என்ன அர்த்தம் என்பது யாருக்குத் தெரியும்?

தமது அரசுக்கு முண்டுகொடுத்து வரும் தமிழ்க் கட்சிகளைக்கூட நம்பாமல் ஆரியரத்னாவை துன்பப்படும் வடக்கு-கிழக்கு மக்களின் துயர் துடைக்கும் பிரதிநிதியாக்க அம்மையார் விரும்புவது ஏன்?

ஒன்றும், ஒன்றும் இரண்டு, இரண்டும் ஒன்றும் மூன்று என்பதுகூட தமிழ்க் கட்சிகளுக்கு தெரியாதா?

தெரியும். இவை ஒன்றும் அலட்சியம் செய்யப்படக்கூடிய விடயங்கள் அல்ல என்பதும் தெரியும். சுழியோட்டம் நடக்கிறது என்பதும் தெரியும்.

இவை பற்றி பெரிதாகப் பேசினால், 'இன்னும் ஏன் அரசை ஆதரிக்கிறீர்கள்' என்ற கேள்வி வலுவாகும். அதுதான் மூச்சுக்காட்டாமல் இருக்கிறார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 4

# இடி அமீன்

இதுவரை

**குத்துச்சண்டை வீரனான இடி அமீன் உகண்டா படையில் சேருகிறான். என்றாவது ஒருநாள் உகண்டாவை கட்டியாள்வது அமீனின் கனவு. உகண்டா ஜனாதிபதி கபேகாவுக்கும் பிரதமர் ஒபேடேவுக்கும் இடையே அதிகாரப்போட்டி. ஒபேடே இடி அமீனை தன் விசுவாசியாக வளர்க்கிறார். உகண்டாவின் அயல்நாடான ஸயார் கிளர்ச்சியாளருடன் தொடர்பு கொள்ளும் அமீன் பெரும் பணம் சேர்க்கிறான்.**

இனி...

"ஒரு சாதாரண இராணுவ அதிகாரியின் வங்கிக் கணக்கில் இத்தனை பணம் எப்படி வந்தது?" என்று உகண்டா பாராளுமன்றத்தில் ஒலித்த குரலுக்கு சொந்தக்காரர் ஒச்சேங் எம்.பி.

பிரதமர் ஒபேடேவுக்கும், இடி அமீனுக்கும் அக் குரல் இடியாக செவியில் விழுந்தது.

உகண்டா இராணுவத் தளபதிக்கு பிரதமர் ஒபேடேவை பிடிக்கவே பிடிக்காது.

இராணுவத் தளபதிக்கே தெரியாமல்தான் ஸயார் கிளர்ச்சியாளர்களுடன் அமீன் மூலம் பிரதமர் ஒபேடே தொடர்பு வைத்திருந்தார்.

தளபதி நேரடியாக அமீனை தொடர்பு கொண்டார்.

"ஸயார் கிளர்ச்சியாளர்களுக்கும் உமக்கும் என்ன தொடர்பு?" என்று கேட்டார்.

"சொல்ல உத்தரவில்லை" என்றான் இடி அமீன் திடமான குரலில்.

"யார் உத்தரவிடவேண்டும்?" என்று கேட்ட தளபதியின் குரலில் சினம் துளிர்த்தது.

"பிரதமர்" என்றான் அமீன் சற்றும் அசராத தொனியில்.

"நான்தான் இங்கு இராணுவத் தளபதி. நீ எனக்கு கீழ்ப்பட்ட அதிகாரி. அதாவது உனக்கு நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது, இல்லாவிட்டால் பதில் சொல்லிக் கொண்டிருப் பேனா?" என்று விட்டு அமீன் சிரித்த சிரிப்பு மரியாதைக் குறைவானது.

உயர் அதிகாரிகள் முன்பாக உரத்துப் பேசவே ஏனைய அதிகாரிகளும், படை வீரர்களும் துணிய மாட்டார்கள்.

இடி அமீன் இராணுவத் தளபதியைக்கூட துச்சமாக மதித்து பதிலளித்ததும், சிரித்ததும் அவன் பின்னால் வலுவான கரம் ஒன்று இருக்கும் துணிச்சலில்தான் என்பதை தளபதியும் புரிந்து கொண்டார்.

"முதலில் மரியாதையைக் கற்றுக் கொள். இப்போதே உன்னை வேலையில் இருந்து தூக்கிப்போட என்னால் முடியும்"

சொல்லிவிட்டு, அமீனின் பதிலுக்குக் காத்திருக்காமல் விருட்டென்று சென்று விட்டார் தளபதி.

மேலும் தாமதித்தால் தான் பொறுமை இழக்க நேரும் என்பதால் தான், தளபதி விரைவாக அமீனைவிட்டு விலகினார்.

தளபதியின் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த இடி அமீன், 'ஒருநாள் இவனும் என் முன்னால் மண்டியிடத்தான் போகிறான்' என்று நினைத்துக் கொண்டான்.

அப்படி நினைத்துப் பார்ப்பதுகூட அவனுக்கு ஒருவித சந்தோசமாகவும், குரூர திருப்தியாகவும் இருந்தது.

அமீனிடம் இருந்து சென்ற தளபதி ஜனாதிபதி கபேகாவைச் சந்தித்தார். அமீனின் வங்கிக் கணக்கை இரகசியமாக மோப்பம் பிடித்தார்கள்.

ஏகப்பட்ட பணம் கணக்கில் இருந்தது. "இனியும் தாமதித்தால் பாம்புக்கு பால் வார்ப்பதுடன், விஷப் பல்லும் வளர இடமளிப்பதாகிவிடும்" என்றார் தளபதி.

பாராளுமன்ற உறுப்பினரான ஒச்சேங்கிடம் வங்கிக் கணக்குப் பட்டியலையும் கொடுத்து, பாராளுமன்றத்தில் பூகம்பத்தை கிளப்பவும் தூண்டி விட்டனர்.

"விசாரணைக் கமிஷன் வையுங்கள்" என்றார் ஒச்சேங்.

பாராளுமன்றம் அதற்கு இணங்கியது. பிரதமர் ஒபேடே கதி கலங்கிப் போனார்.

விசாரணைக் கமிஷன் வைத்தால் இடி அமீனுக்கு மட்டுமல்ல, தன் தலைக்கும் ஆபத்து என்பதை உணர்ந்த பிரதமர் உஷாரானார்.

உடனடியாக அமீனை தன் இல்லத்துக்கு அழைத்தார். "படைக்குள் எமக்கு விசுவாசமான ஆட்களை உடனே திரட்டு" என்று உத்தரவிட்டார்.

அந்த உத்தரவு அமீனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருந்தது.

உகண்டா படைகளுக்கும் அமீன் போன்ற கவர்ச்சிகரமான, தடாலடியான ஒருவர் தங்கள் தளபதியாவதில் விருப்பம் இருந்தது.

அதனால் அமீனின் முயற்சிகளுக்கு படைக்குள் ஆதரவு கிடைத்தது.

இடி அமீனிடம் இருந்து நம்பிக்கையூட்டும் தகவல்கள் கிடைத்ததும் பிரதமர் ஒபேடே அதிரடியான நடவடிக்கைகளில் இறங்கினார்.

முதல் காரியமாக நாட்டின் அரசியல் யாப்பை நீக்கினார். இரண்டாவது காரியமாக அமைச்சரவையில் இருந்து ஐந்துபேரை தூக்கி எறிந்தார்.

ஐந்துபேரும் அமீனுக்கு எதிரான விவாதத்தில் பங்கு கொணடவர்கள்.



அந்த ஐந்துபேரையும் தூக்கி எறியுமாறு பிரதமருக்கு ஆலோசனை கூறியவள் அவரது மகள்.

ஆலோசனை கூறும்போது அவளது மடியில் புரண்டுகொண்டிருந்தவன் இடி அமீன்.

பிரதமரின் மகளை வைத்து தன் விருப்பப்படி காய்களை நகர்த்த இடி அமீன் ஆரம்பித்தது அப்போதுதான்.

பிரமரின் மகளது உடைகளை ஒவ்வொன்றாக களைந்துகொண்டிருந்த அமீன், "உடனடியாக உன் தந்தை ஜனாதிபதியாக வேண்டும்.' என்றான்.

அவனை இழுத்து தன்மேல் படர விட்டபடி அவள் சொன்னாள்: "என் தந்தை ஜனாதிபதியானால் இராணுவத் தளபதி நீதான்!" இடி அமீன் பேய்த்தனமான சிரிப்புடன் அவளை ஆக்கிரமித்தான்.

ஜனாதிபதி கபேகாவை ஜனாதிபதி பதவியில் இருந்து தூக்கிவீசிவிட்டு, தன்னை நாட்டின் ஜனாதிபதியாக பிரகடனப்படுத்திக் கொண்டார் ஒபேடே.

ஜனாதிபதி கபேகாவும் அவரது ஆதரவாளர்களும் கொதித்து எழுந்தனர்.

கபேகாவின் ஆதரவாளர்கள் கிளர்ந்தெழுவார்கள் என்பதை ஒபேடேவும் அமீனும் முன்கூட்டியே எதிர்பார்த்தனர்.



தருவது
ரசிகன்

அதனால் கபேகாவை ஜனாபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு முன்பாக, அவருக்கு நெருக்கமான உயர் அதிகாரிகளை இரவோடு இரவாக கைதுசெய்து முடித்தனர்.

நீதிபதி ஒருவரை சிறைப்பிடிக்க அமீனே நேரில் சென்றிருந்தான். "என்னைச் சிறைப் பிடிக்க நீ யார்?" என்றார் நீதிபதி.

"இங்கே பார்! நீதிமன்றத்தில் உனது கத்தலை வைத்துக்கொள். இங்கு நான்தான் உனக்கு நீதிபதி. உனக்கு சிறைத் தண்டனை தருவதா?. மரண தண்டனை தரலாமா? என்பதை தீர்மானிக்க எனக்கு ஒரு நொடி போதும்" என்று அமீன் போட்ட போட்டில் நீதிபதியே நடுங்கிப்போனார்.

"நீதிபதி நடுங்கினால், நீதி நடுங்கியதற்கு சமன். நீதி நடுங்கலாமா? கூடாது"

டுமீல்!

அமீனின் துப்பாக்கி வெடித்தது. நீதிபதி பிணமாகச் சரிந்தார்.

ஜனாதிபதி கபேகாவின் உறவினரான அந்த நீதிபதியைத்தான் விசாரணைக் கமிஷன் தலைவராக நியமிக்க எண்ணியிருந்தார்கள்.

உடலை அன்றிரவே புதைத்து மறைத்து விட்டான் அமீன். நீதிபதியின் மனைவி இளமையாக இருந்தாள். அமீனுக்கு அவள் மேல் ஆசை வந்துவிட்டது.

அதனால்தான் அவளை மட்டும் உயிரோடுவிட்டு வைத்தான். தனக்கு நம்பகமான இடம் ஒன்றில் அவளை சிறையில் வைக்க உத்தரவிட்டான் அமீன்.

"இளமையாக இருக்கிறாய்! எனக்கு இனிமையாக இருப்பாய்! துக்கம் அனுஷ்டிக்க மூன்றுநாள் அவகாசம் தருகிறேன். நாலாவது நாள்.." அமீனின் சிரிப்பு அவன் நினைப்பை உரைத்தது.

மூன்றாவது நாளே சிறைக்குள் தற்கொலை செய்துகொண்டு செத்துப் போனாள் நீதிபதியின் மனைவி.

அதற்கு தண்டனையாக சிறைக்கு காவலாக இருந்த இரண்டுபேரை சுட்டுக் கொன்றான் அமீன்.

"கடமையில் இருந்து தவறினால் இந்த உலகில் இருந்தும் தவறிவிடுவீர்கள். ஏன் தெரியுமா? கடமையில் இருந்து தவறுகிறவர்களை இந்த அமீனுக்கு பிடிக்காது!"

ஜனாபதி கபேகாவின் மாளிகை உகண்டாவின் சர்வதேச விமான நிலையமான என்ர பேக்கு அப்பால் இருந்தது.

கபேகாவின் மாளிகையில் இருந்து தலைநகரான கம்பாலா செல்லும் பிரதான பாதைகள் எங்கும் கபேகாவின் ஆதரவாளர்கள் வீதித் தடைகளைப் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கபேகாவுக்கு ஆதரவான படைகளும் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

ஒபேடே இந்த எதிர்ப்பைக் கண்டு சிறிது பயந்தபோது, அமீன்தான் தைரியம் கொடுத்தான்.

"ஒரே அடியில் அவர்கள் முகங்களை காணாமல் போகச் செய்துவிடலாம். அதிகாரத்தை என்னிடம் தாருங்கள். அல்லது வேறு நல்ல அதிகாரியிடம் கொடுத்து அனுப்புங்கள்" என்றான்.

தன்னைவிட்டால் ஒபேடேவுக்கு நம்பகமான வேறு ஆள் கிடையாது என்பது அமீனுக்கு தெரியும்.

"வேறு ஆள் எதற்கு. நீயே படையுடன் புறப்பட்டுச் செல். கபேகாவின் ஆதரவாளர்களை பூச்சிகளை நசுக்குவது மாதிரி நசுக்கு!" என்றார் ஒபேடே.

"நாளை பொழுது மலரும்போது கபேகாவின் மாளிகை காணாமல் போய் இருக்கும்" என்றான் இடி அமீன்.

அதைச் சொன்னபோதே காட்டுமிராண்டித்தனமான வேட்டை ஒன்றுக்கு அவன் மனதில் திட்டம் தயாராகி இருந்தது.

சம்பிரதாயமாக பாதுகாப்பு ஆலோசனை மாநாடு நடத்தினார் ஒபேடே. "கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்கும் பொறுப்பு இடி அமீனுக்கு வழங்கப்படுகிறது" என்று அறிவித்தார்.

பூரண இராணுவ உடையுடன் அந்த மாநாட்டில் தோன்றினான் இடி அமீன்.

அவனது தோற்றமே பயங்கரமாக இருந்தது. அவனது கையில் அதிகாரமும் இருந்தால் இன்னமும் பயங்கரமாக இருக்கும் என்பது மறுநாள் தெரிந்தது.

(இடி தொடரும்)

## கோடீஸ்வர ஆட்டக்காரர்



"கப்டன் பொறுப்பு என்ற மகுடம் தலையில் இருந்து இறங்கியதும் ரிலாக்ஸாக ஆடத் தொடங்கிவிட்டார் டெண்டுல்கர்" இது பொதுவான அபிப்பிராயம்.

ஆனால் டெண்டுல்கர் அந்த அபிப்பிராயத்தோடு முரண்படுகிறார். "கப்டனாக இருந்தபோதும் நன்றாகத்தான் ஆடினேன்" என்கிறார்.

ஆனாலும் 'அசாருதீனுக்கு பின்னர் மீண்டும் டெண்டுல்கர்தான் கப்டன்' என்று யாராவது சொன்னால், டெண்டுல்கரின் இரசிகர்கள் அடிக்க வருகிறார்கள்.

"மறுபடியும் எங்கள் சச்சினை முடக்கிப்போட ஆசைப்படுகிறீர்களா? கப்டனாக இருப்பதைவிட அசத்தலான ஆட்டக்காரராக இருப்பதே போதும்" என்கிறார்கள்.

கப்டன் பதவி கைவிட்டுப் போன பின்னர் டெண்டுல்கரின் ஆட்டம் கலக்கல் என்பது முற்றிலும் மெய். அதனால் அவரது இரசிகர் களுக்கு மகிழ்ச்சி ஒருபுறம் இருக்க, தனிப்பட்ட ரீதியில் டெண்டுல்கருக்கும் ஏராளமான இலாபம்.

கப்டனாக இருந்தபோது அவரது ஆட்டம் சோபிக்காமையால் விளம்பர நிறுவனங்கள் அவரை நெருங்கவில்லை. முன்னர் ஒப்பந்தம் செய்த நிறுவனங்கள் கூட கையைப் பிசைந்தன.

இப்போது மறுபடி டெண்டுல்கர் தூள் கிளப்ப தொடங்கியதால் விளம்பர நிறுவனங்கள் கோடி கோடியான பணத்துடன் அவரைத் துரத்துகின்றன.

சமீபத்தில் அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று டெண்டுல்கரை விளம்பரத்திற்காக பயன்படுத்த ஒப்பந்தம் செய்திருக்கிறது. அதற்காக டெண்டுல்கருக்கு கிடைத்துள்ள பணம் எவ்வளவு என்கிறீர்கள்? இந்திய மதிப்பில் 40 கோடி ரூபாய்.

அடிடாஸ் சப்பாத்து நிறுவனமும் டெண்டுல்கரை ஒப்பந்தம் செய்துள்ளது. நாங்கள் விலைகொடுத்து வாங்கித்தான் சப்பாத்து போடவேண்டும். டெண்டுல்கர் சப்பாத்துப் போட பணம் வாங்குகிறார். அடிடாஸ் சப்பாத்துக்களுடன் டெண்டுல்கர் போஸ் கொடுக்க வாங்கியுள்ள தொகை அதிகமில்லை, ஆக, ஆறுகோடி ரூபாய்.

இந்தியாவின் ஆங்கில நாளிதழான 'இந்து' டெண்டுல்கரை கோடீஸ்வர துடுப்பாட்ட வீரர் (மில்லியனர் பேட்ஸ்மேன்) என்று வர்ணித்துள்ளது.

25 வயதான டெண்டுல்கர் இன்று உலகின் கிரிக்கெட் வீரர்களில் முதலிடத்தில் இருக்கிறார். கவாஸ்கர், அசாருதீன், மற்றும் லாராகூட இத்தனை இளவயதில் டெண்டுல்கர் போல் ரன் குவித்ததில்லை. அவர் துடுப்பாட்டவீரர் மட்டுமல்ல பல துறைகளிலும் பிரகாசிக்கும் நட்சத்திரம்.

பதினொரு வயதில் ஆட ஆரம்பித்தார். பதினாறாவது வயதில் டெஸ்ட் போட்டியில் புகுந்து அதிரடி காட்டினார். இன்று 25 வயதில் கிரிக்கெட் உலகைக் கலக்கி வருகிறார்.

## டயானாவின் பாதையில்



இளவரசி டயானா இறந்தபின்னர்தான் பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு ஞானோதயம் பிறந்திருக்கிறது.

டயானா சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகியதை முகச்சுளிப்போடு, நாகரிகக் குறைச்சலாக பார்த்தது அரச குடும்பம்.

டயானா இறந்தபின்னர் உலகெங்கும் திரண்ட அனுதாபமும், இங்கிலாந்தில் ஏற்பட்ட சோகமும் அரச குடும்பத்தை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது.

அதுமட்டுமல்ல, அரச குடும்பத்துக்கு மாதா மாதம் பணம் கொட்ட வேண்டுமா, இது தேவைதானா? என்ற விவாதமும் இங்கிலாந்தில் எழுந்துள்ளது. அதனால் மக்களைக் கவர டயானா வழியில் நடைபோட ஆரம்பித்துள்ளது அரச குடும்பம்.

இளவரசர் சாள்ஸ் மக்களைப் பார்த்து சிரிக்கிறார். குழந்தைகளை கொஞ்சுகிறார். எலிசபெத் மகாராணி கடைத்தெருவுக்கு சென்று பொருட்கள் வாங்குகிறார்.

அதுமட்டுமல்ல, இலண்டனில் இருக்கும் பியர் கடை ஒன்றுக்கு சென்று பியர் வாங்கி அருந்தியிருக்கிறார் மகாராணி. பதவியைக் காப்பாற்றத்தான் இந்த நாடகம்.

ஆண்டுதோறும் கோடி கோடியாக பராமரிப்பு பணம் கொடுக்கிறது பிரிட்டிஷ் அரசாங்கம். அதனை இழக்க அரச குடும்பத்திற்கு மனம் வருமோ?

## பூங்காவில் கைது



டயானாவின் இறுதிச் சடங்கில் சோகப் பாடல் பாடியவர்களில் ஒருவர் ஜோர்ஜ் மைக்கல். டயானாவுக்கு பிடித்த பொப் பாடகர்களில் ஒருவர். ஆனால் இறுதிச் சடங்கில் பிரபலமான தனிப் பாடல் பாடியவர் எல்டன் ஜோன்.

சமீபத்தில் கலிபோர்னியாவில் ஜோர்ஜ் மைக்கல் கைது செய்யப்பட்டார். ரிவர்லி ஹில்ஸ் என்ற இடத்தில் உள்ள பூங்காவில்தான் ஜோர்ஜ மைக்கல் கைதானார்.

முதலில் இவர் பிரபல பொப் பாடகர் என்பது கலிபோர்னியா பொலிசாருக்குத் தெரியாது. விசாரணையின் பின்னர்தான் உண்மை தெரிய வந்தது. உடனடியாக விடுதலை செய்து விட்டனர்.

பூங்காவில் ஆண் நண்பர் ஒருவருடன் தகாத உறவு கொண்டிருந்தபோதே அவரைக் கைது செய்ததாக கலிபோர்னியா பொலிசார் கூறியுள்ளனர். இச் செய்தி ஸ்கை ரி.வி மூலம் உடனடியாக ஒளிபரப்பானது.

ஆனால் இதுவரை பாடகரோ, அவரது வட்டாரமோ இக் கைது பற்றி கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

## வித்தியாசமான காட்சியகம்



உலகில் எதற்கெல்லாமோ அருங்காட்சியகம் (மியூசியம்) இருக்கிறது. ஆனால் அமெரிக்காவில்தான் முதன் முதலாக 'செக்ஸ் மியூசியம்' ஒன்று அமைக்கப்பட உள்ளது.

எலிசன் மேட்டெக்ஸ் என்னும் பெண் ஓவியர் ஒருவர் இதனை உருவாக்கும் அரும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

'செக்ஸ் மிகவும் சக்தி வாய்ந்தது. இன்றியமையாத அந்த உணர்வைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நமக்கு ஒரு புனிதமான இடம் தேவைப்படுகிறது' என்கிறார் எலிசன்.

புகழ்பெற்ற விஞ்ஞானிகள், செக்ஸ் வரலாற்று ஆசிரியர்கள், டாக்டர்கள், மனோதத்துவ நிபுணர்கள், ஓவியர்கள் மற்றும் செக்ஸ் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்த 'செக்ஸ் மியூசியம்' விரைவாக உருவாக்கப்படவுள்ளது.

## ஏழு குழந்தைகள்

கடந்த நவம்பர் மாதம் 19ம் திகதி அமெரிக்காவில் கென்னி, பாபி தம்பதிக்கு ஒரே பிரசவத்தில் ஏழு குழந்தைகள் பிறந்தன.

இந்த ஏழு குழந்தைகளைக் கவனிக்க 60 உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு 40 போத்தல் பால் இந்தக் குழந்தைகளுக்கு தேவைப்படுகிறது. 50ற்கு மேற்பட்ட மாற்றுத்துணிகளும் தேவைப்படுகின்றன.

அமெரிக்காவில் உள்ள தொண்டு நிறுவனங்கள் அக் குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளன. தாயும் தந்தையும் காலை ஆறுமணி முதல் 8 மணி வரைதான் குழந்தைகளை கவனிக்கின்றனர். மீதி நேரம் யாவும் உதவியாளர்களே குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள்.

"தொண்டு நிறுவனங்கள் மட்டும் உதவியிருக்காவிட்டால் குழந்தைகளைப் பராமரிக்க சிரமப்பட்டிருப்போம். எங்களிடம் போதிய பணவசதியும் இல்லை" என்கின்றனர் பெற்றோர்.



படிப்பகம்

www.padippakam.com

## மீசையும் ஆசையும்



↑ இது உள்ளூர் சாதனை. அண்ணருக்கு மீசையின் பலத்தைக் காட்ட ஆசை. சும்மா விரலால் முடியைப் பிடித்து இழுத்தாலே வலியில் முகம் கோணலாகிவிடும். ஆனால் இவரோ தன் மீசையில் ஓட்டோவையே கட்டி இழுக்கிறார். கில்லாடிதான்.

இவரது பெயர் முகம்மது ஹனீபா. 48வயது. திருக்கோணமலை நைக்கா லேனைச் சேர்ந்தவர். திருமலை பஸ் நிலையம் முன்னால் இந்த சாதனையைப் படைத்தார். சுமார் 20 அடி தூரம் இழுத்திருக்கிறார். கைகொடுங்கள் ஹனீபா.

## ஆளும் வளர வாலும் வளரும்



→ குறும்புகள், குளப்படிகள் அதிகம் செய்யும் பையன்களை வால் பையன்கள் என்றும் அழைப்பதுண்டு.

உண்மையிலேயே ஒரு பையன் வாலுடன் பிறந்து வளர்ந்திருக்கிறான் என்றால் நம்புவீர்களா? நம்பித்தான் ஆக வேண்டும்.

இந்தியாவின் தெலுங்கு மாநிலத்தில் சித்தூர் மாவட்டம் சவுடே பள்ளி ஒன்றியத்தில் தூர்க்கா கிராமத்தில் இந்த அதிசயச் சிறுவன் இருக்கிறான்.

இவனது பெயர் ராமாஞ்நேயது. (வயது 8) இவன் பிறக்கும்போது உடலின் பின்பக்கம் சிறு மச்சம் போல தோன்றி இருந்தது. நாளடைவில் குழந்தை வளர வளர மச்சமும் குரங்கின் வால்போல வளர்ந்தது.

உடனே டாக்டர்களிடம் காண்பித்தார்கள். அதனால் பாதிப்பு ஒன்றும் இல்லை என்று டாக்டர்கள் அலட்சியமாக கூறிவிட்டனர்.

ஆனால் எட்டு வயதானபோது அந்த வால் ஒரு அடி நீளத்துக்கு வளர்ந்து விட்டது.

இப்போது திருப்பதி அரச மருத்துவ மனையில் இச் சிறுவனை அனுமதித்து உள்ளனர். அறுவைச் சிகிச்சை மூலம் வாலை அகற்றினால் ஏனைய உடல் உறுப்புக்கள் பாதிக்கப்படுமா? நரம்புகள் துண்டிக்கப்படுமா? என்று டாக்டர்கள் ஆராய்ந்து வருகின்றனர். பாடசாலை செல்லும்போது வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டுதான் போவானாம். அப்படி இருந்தும் சில சமயம் வால் வெளியே நீட்டிக்கொள்ள சக மாணவர்கள் கேலி செய்தார்களாம். இனிப் பொறுக்க முடியாது என்ற நிலையில்தான் திருப்பதி மருத்துவமனையை நாடினார்கள். ■

## வேட்டைக்குத் தயார்



ஸ்கொட்லாந்து மலைகளில் வேட்டைக்காரர்களுக்கு உதவும் நாய்கள் இவை. இப்படம் வில்லியம் றீட் என்பவரால் எடுக்கப்பட்டது. றீட்டும் ஒரு வேட்டைக்காரர்தான். இந்த நாய்களும் அவருக்குச் சொந்தமானவைதான்.


மலைகளிலுள்ள காடுகளில் வாழும் மிருகங்களை வேட்டையாடுவதற்கு இவை பயிற்றப்படுகின்றன.

எஜமானருக்கு இவை மிகவும் நன்றி பாராட்டும் இன நாய்கள் என்று வர்ணிக்கப்படுகிறது.

தாக்குதல் ஒன்றுக்கு தயார் நிலையில் அமர்ந்திருக்கும் கச்சிதத்தைப் பார்த்தீர்களா? இரையைக் கண்டால் எப்படி பாயும் என்பதை கற்பனை செய்ய முடிகிறதல்லவா? ■

## 6 ஆயிரம் வயசு

↓ மரம் இல்லாத நாடு எங்காவது உண்டா? இல்லை. ஆனால் உலகிலேயே அதிக வயதான அதி உயரமான மரம் எங்கே இருக்கிறது தெரியுமா? அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியா மாநிலத்தில் சீக்கியோமியா தேசியப்பூங்காவில் நெடுநெடுவென்று வளர்ந்து காணப்படுகின்றது. அந்த மூத்த மரம்தான் படத்தில் காணப்படுகிறது.



இந்த மரத்தின் விஞ்ஞானப் பெயர் சற்று நீளமானது. வாய்க்குள் சுலபத்தில் புகாது. சீக்கியோமியா டென்ட்றொன் ஜிசான்ரியம் என்பதுதான் இதன் பெயர்.

இந்த மரத்தின் காய்கள் கூம்பு வடிவமாகக் காணப்படும். இவ்வகை மரங்களுக்கு ஆறாயிரம் ஆண்டு வரை ஆயுள் நீடிக்கும். அவற்றில் இம்மரம்தான் ஆராமிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்து உலக சாதனை மரமாக பதியப்பட்டுள்ளது. வேரில் இருந்து உச்சிவரை இரண்டாமிரம் தொன்கள் எடை கொண்டது.

12ஆமிரம் வருட காலம் வாழ்ந்து வரும் மரமும் உண்டு. ஆனால் அது உயரம் குறைந்த மரம். அதன் பெயர் ஷெட்வுட். (செம்மரம்) அதன் செல்லப் பெயர் எற்றேர்னல் கோட். அதாவது சாகாவரம் பெற்ற தெய்வம். அதுவும் கலிஃபோர்னியா வில் உள்ள கிரீன் றெட்வுட்ஸ் அரச பூங்காவில் தான் உள்ளது. உலகில் அதிக வயதானது என்ற உலக சாதனை மரம் செம்மரம் தான். மரம் போல இருக்கிறாயே என்றால் இனிமேல் சந்தோசப்படுங்கள்.

## முப்பிறவிகள்



↑ ஒரு தாய் மக்கள் நாம் என்று மூவரும் குதூகலிக்கின்றார்கள்.

ஆனால் இவர்களைப் பார்ப்பவர்கள்தான் முடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள். மூவரும் ஒரே அச்சில் வார்த்தது போல இருப்பதால்தான் குழப்பம்.

எட்டி, டேவிட், ரொபர்ட் என்பது இவர்களது பெயர்கள். யார் எட்டி, யார் டேவிட், யார் ரொபர்ட் என்று இவர்கள் சொன்னால்தான் தெரியும்.

தங்கள் ரீசேர்ட்டிலும் ஒவ்வொருவரும் தாங்கள் மூவரும் இணைந்து நிற்கும் படத்தை பதித்து வைத்துள்ளனர். குழப்புவதற்கு என்றே பிறந்தவர்கள். திருமணமானால் துணைவியர் நிலைதான் கவலைக்கிடமாகப்போகிறது.

## திறக்காத சிறை



↗ மிருகங்களைப்போல மனிதர்களைச் சிறைக்கூண்டில் அடைத்துப் போடுகிறார்கள். குற்றம் செய்பவர்களை கூண்டில் அடைக்கலாம் தப்பில்லை. ஆனால், எதிர்த்துக் குரல் கொடுக்கிறார்கள், நியாயம் கேட்கிறார்கள் என்பதற்காக கூண்டில் அடைத்து மிரட்டுவது கொடுமைதான். படத்தில் இருப்பவர் சீனாவைச் சேர்ந்தவர். பத்து வருடங்களுக்கு முன்னர் கைதாகி இன்றுவரை கை கால்களில் விலங்கிடப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

## தகவல் பெட்டி

பொலிஸ்காரர் ஒருவரைத் தாக்கியதால் மனநோயாளி என்று பிடித்து வைத்து விட்டனராம். (நம் நாட்டில் என்றால் தமிழ்க் கட்சிகள் அறிக்கைவிட நல்ல வாய்ப்பு)

நம் நாட்டில் விசாரணை இன்றி ஒருவர் இருவரல்ல பல நூறு பேர் சிறையில் இருக்கின்றனர். ■



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 51

# காதல் மன்னரின் காதல் லீலை
## பழிவாங்கிய முன்னாள் நடிகை

அந்தக் கால காதல் மன்னன் அவர். பல மனைவியர் இருந்தனர். அப்படி இருந்தும் மலருக்கு மலர் தாவிக்கொண்டிருப்பார்.

பிரபல நடிகை ஒருவர் இவரை மணந்துகொண்டு, இவரது தாவுதல்களால் மனம் உடைந்து பாழானார்.

ஒரு முறை திருமணத்தின் பின்னர் வரும் நிலவைக் குறிக்கும் படத்திற்காக பல ஊர்களுக்குச் செல்ல நேர்ந்தது. படத்தின் நாயகிமீது கண் வைத்தார் காதல் மன்னன்.

படத்தின் இயக்குநர் அக் காலத்தில் பிரபலமானவர். அதனால் அவர் இல்லாத நேரமாகப் பார்த்துத்தான் நடிகையைச் சீண்டுவார் நடிகர்.

அப்போது அந்த நடிகை இன்னொரு நடிகரைக் காதலித்துக் கொண்டிருந்தார். அந்த நடிகர் அன்றைய கால அடிதடிப் படங்களில் எம்.ஜி.ஆர்போல நடித்து வந்தவர்.

காதல் மன்னன் தன்மேல் கண்வைத்தது தெரிந்ததும் நடிகை ஒதுங்கி இருக்கத் தொடங்கினார். படப்பிடிப்பு முடிந்ததும் நேராக மேக்-அப் அறைக்குச்சென்று கதவை மூடிக் கொண்டு இருந்து விடுவார்.

அவ்வாறு ஒருநாள் அறைக்குள் சென்றவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. கதவை மூடிவிட்டு உடைகளை களைய தொடங்கியபோதுதான் கவனித்தார் நடிகை. உள்ளே காதல் மன்னன் அமர்ந்திருந்து நடிகையை விழுங்கி விடுவதுபோலப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதன்பின்னர் நடிகை காதல் மன்னரின் அன்புப் பிடியில் சிக்கிக்கொண்டார். அவரது விருப்பத்தை மறுத்தால் அப் படத்தில் இருந்துமட்டுமல்லாமல், சினிமா உலகில் இருந்தும் ஒதுங்க வேண்டியதுதான். அதனால் நடிகரின் ஆசைக்குப் பணிந்தார்.

அந்த மேக்-அப் அறையை காதல் லீலைகளுக்கு பயன்படுத்திக் கொண்டார் காதல் மன்னன். அவரும் நடிகையும் தனியே உள்ளே இருந்த சங்கதி எப்படியோ படப்பிடிப்புக் குழுவினருக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் யாரும் தெரிந்ததுபோலக் காட்டிக்கொள்ளவில்லை.

படப்பிடிப்பு முடியும்வரை மேக்-அப் அறை லீலைகளை நடிகர் தொடர்ந்து அரங்கேற்றினார். இவ் விஷயம் நடிகையின் காதலரான நடிகருக்கு எட்டியது. அவர் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

பாவம் நடிகை, காதல் மன்னரும் அப் படத்துடன் நடிகையின் உறவைக் கத்தரித்துவிட்டார்.

### பழிவாங்கிய ஜெயா

ஜெயலலிதாவுக்கு போட்டியாக மஞ்சளாவை எம்.ஜி.ஆரிடம் அறிமுகம் செய்தவர் ஆர்.எம்.வீரப்பன். 'ரிக்ஷாக்காரன்' படம் வீரப்பனின் தயாரிப்பு.

முதலில் எம்.ஜி.ஆர். தயங்கியபோதும், பின்னர் மஞ்சளாவை எம்.ஜி.ஆருக்கும் பிடித்துவிட்டது. தொடர்ந்து வாய்ப்புக் கொடுத்தார்.

அன்று நடந்ததை ஜெயலலிதா பின்னர் மறக்கவேயில்லை. அரசியலுக்கு ஜெயலலிதா வந்த பின்னரும் வீரப்பனுக்கும் அவருக்கும் எட்டாப் பொருத்தம்.

எம்.ஜி.ஆர். மறைந்த பின்னர் ஜெயலலிதாவை அரசியலில் இருந்து ஒழித்துக் கட்ட வீரப்பன் எவ்வளவோ முயன்றார் முடியவில்லை.

இறுதியில் அவரே ஜெயலலிதாவிடம் சரணடைந்தார். 'புரட்சித் தலைவி' என்று தன் வாயாலேயே புகழ்ந்தார்.

ஆனாலும் ஜெயலலிதா அவரை தன்னுடன் சேர்த்துக் கொண்டதே தன் முன்னால் அவரை கைகட்டி நிற்கவைத்துவிட்டு இறுதியில் எட்டி உதைக்கத்தான்.

சிலகாலம் கட்சியில் வைத்திருந்துவிட்டு பின்னர் வீரப்பனை விலக்கினார் ஜெயலலிதா. இன்று அரசியலில் எவ்வித முக்கியத்துவமும் இல்லாமல் இருக்கிறார் வீரப்பன்.

சிவாஜி கணேசனைக்கூட உதாசீனம் செய்து பழிவாங்கியவர் ஜெயலலிதா. அவருடன் பல படங்களில் ஜோடியாகவும் நடித்தவர்.

சிவாஜி வாங்கிய ஊதியத்தில் பத்தில் ஒரு பங்குதான் ஜெயலலிதா அன்று ஊதியமாக பெற்றார்.

ஆனால் பின்னர் சிவாஜியின் பேத்தியை தன் வளர்ப்பு மகனுக்கு திருமணம் செய்து வைத்தது மல்லாமல், சிவாஜியையே ஓரம்கட்டி தானே முன்னின்று திருமண நிகழ்ச்சிகளை நடத்தினார்.

### ஊதியம் 90 இலட்சம்

'காதலா காதலா' படத்தில் நடிப்பதற்காக பிரபுதேவா கேட்ட சம்பளம் ஒரு கோடியே 25 இலட்சம். அது கட்டுபடியாகாது என்று 70 இலட்சத்துக்கு படியவைத்தார் பட அதிபர்.

படப்பிடிப்பு முடிந்து டப்பிங் கொடுப்பதற்காக அழைத்தனர். 'மேலதிகமாக இருபது இலட்சம் தந்தால்தான் டப்பிங்' என்று கறாராகக் கூறிவிட்டார் பிரபுதேவா.

வேறு வழியில்லாமல் 20 இலட்சம் கொடுத்தாராம் பட அதிபர். முன்னர் ஒப்புக்கொண்ட நாட்களைவிட அதிக நாட்கள் நடித்துக் கொடுக்க வேண்டி இருந்தது. அதுதான் மேலும் 20 இலட்சம் கேட்கப்பட்டது என்கிறது பிரபு தேவா வட்டாரம். எப்படியோ மொத்தக் கூலி 90 இலட்சம்.

### சிம்ரானின் திட்டம்

எதிர்காலத்தில் படம் இயக்கும் எண்ணம் இருக்கிறதாம். சொல்பவர் சிம்ரான். 'இப்போது என்னை இயக்குகிறார்கள். நானும் இயக்க வேண்டாமா?' என்று கேட்கிறார் சிம்ரான். நியாயமான ஆசைதான்.

ரஜினியின் படம் தள்ளிப் போவதில் சிம்ரானுக்கு எக்கச்சக்கமான வருத்தம். 'கதாநாயகி நான் தான்' என்று மார்தட்டிக் கொண்டிருந்தவருக்கு தள்ளிப்போவது கவலை தரும்தானே.

### ரகுமான் படம்

நீண்ட இடைவெளியின் பின்னர் ரகுமானுக்கு ஒரு படம் கிடைத்திருக்கிறது. அவரது ஜோடிகளாக ரசிகா, ராஜஸ்ரீ நடிக்கின்றனர். படத்திற்கு 'உறவுக்கு' மரியாதை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பாடல்கள்: மு.மேத்தா. இசை: புதிய இசையமைப்பாளர் உதயா. இயக்கம்: கௌரி மனோகர். எஸ்.எஸ்.சந்திரன், சார்லி, பூர்ணம் விஸ்வநாதன், கல்பனா ஆகியோரும் நடிக்கின்றனர்.

### வந்தார் டயானா

டயானா என்ற பெயரோடு தமிழ்ப்பட ரசிகர்களை உலுப்ப வந்துள்ளார் ஒரு புதுமுகம். வயது ஆக 15. (உண்மையா?) பத்தாம் வகுப்புக்குள் அடி எடுத்து வைக்க முன்னர் சினிமாவுக்குள் புகுந்து விட்டாராம்.

இந்திரஜித் இயக்கும் 'பந்தா' பட கதாநாயகி டயானா. எத்தனையோ பெண்களை தேடி மும்பை, டில்லி என்று அலைந்தாராம் இந்திரஜித். கடைசியாக சென்னையில் கிடைத்த சுரங்கம்தான் டயானா.



கஸ்தூரி



### சினிவிசிட்

### என்று...

நடிகர் சிவகும...
இன்னொருவர் ந...
குணசித்திரப்...
என்று அனைத்...
'உயிரிலும்...
இப்படத்தில் கத...
ரமேஷ் அ...
ஆனாலும் சரத்...

### கா...

'என் ஆச...
முரளி ஆகி...
சுவலட்சுமி.
'என் பாக்...
ஆனால் உ...
லேசான வ...
கரகா...
"அம்மா...
ஆட்டம் இ...

### வராத காத...

'காதல் வந்திரிச்சு' படத்... கதையை இயக்குநர் செல்வம் வார்த்தைகளில் விளக்கியி... கிறார்.

காதலுக்கு தூரமான இளை... னுக்கும் யுவதிகளுக்கும் இடை... காதல் வருகிறது. அது எப்... வருகிறது என்பதை திருப்பங்... டன் சொல்லப்போகிறோம். இந்த ஆண்டு பேசப்படும் படமாக இருக்கும்" என்கிறார்.

### புதுக் காட்சி

தொப்புளில் பம்பரம் விடுவது, ஆம்லெட் போடுவது, தக்காளி உருட்டுவது, பாதரசம் விடுவது என்று பலரகமான காட்சிகள் எடுத்திருக்கிறார்கள்.

இப்போது மற்றொரு ரகமான காட்சி. 'காதலைத் திருடாதே' படத்தில் இக்காட்சி வரப்போகிறது. நடிகை ரீத்து சிங்கின் தொப்புளில் பழரசத்தை ஊற்றி சுரேஸ் சுவைப்பது போல காட்சி வைத்திருக்கிறார்கள்.

எங்கு போய் முடியுமோ?

முகப்பில்: அருண்குமார்—ரோஷினி
படம்: துள்ளித் திரிந்தகாலம்

### காதோடு சொல்லுகிறோம்

மூன்றெழுத்து 'மா' நடிகை அரசியல்வாதி நடிகரான குமாரருடன் 'காய்' விட்டிருக்கிறார். தேர்தலில் பங்கு கொள்ள வேண்டாம் என்றாராம். நடிகர் கேட்கவில்லையாம். அதற்கு முன்னரே பல சமாச்சாரங்களில் உறவு தகராறு ஏற்பட்டு வளர்ந்து வந்ததாம். தேர்தலுடன் முற்றாக முறிந்து போனது. நடிகரால் கொடுக்கப்பட்ட அன்பளிப்புக்களை மட்டும் நடிகை இதுவரை திருப்பிக் கொடுக்கவில்லை. விலை உயர்ந்த காரையும் அவர்தான் வைத்திருக்கிறார்.

நடிக தம்பதியின் வாரிசுகளில் ஒருவரான நடிகை வாய்ப்புப் பெறும் கலைகளில் தாயாரையும் மிஞ்சிவிட்டார். தாயாரும் நாயகியாக நடித்த காலத்தில் பிரபல நடிகர்கள் அனைவரையும் தன் விரல் நுனியில் வைத்திருந்தார். தாராள நடிப்புக்கும் சம்மதித்தார். அந்தக் காலத்திலேயே நீச்சல் உடையில் தோன்றி முழுக் கவர்ச்சி காண்பித்தவர். இப்போது மகளுக்கும் தன் அனுபவங்களை சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

நகைச்சுவை வேலு நடிகர் துணை நடிகைகளை கரெக்டு பண்ணிக் கொண்டிருந்தார். இப்போது கதாநாயகிகள்மீதும் கண் போடுகிறாராம். 'ஆசை' புகழ் கதாநாயகியை நாடியிருக்கிறார். 'இந்த வேலையெல்லாம் என்னிடம் வைத்துக் கொண்டால் செருப்பு பிய்ந்துபோகும்' என்று எச்சரித்துள்ளாராம் நடிகை.

'பா' நடிகருடன் ராசியாக இருந்த சங்கீத நடிகையின் காதல் இப்போது திசைமாறியிருக்கிறது. முருகனின் இன்னொரு பெயர் கொண்ட ஒளிப்பதிவாளருடன் ஒட்டியிருக்கிறார். 'பூ' பெயர் கொண்ட படத்தில் நடித்தபோது ஒளிப் பதிவாளரால் ஈர்க்கப்பட்டாராம். ஆனால் நடிகை வீட்டில் காதலுக்கு சிகப்புக் கொடி. ஒளிப்பதிவாளர் வீட்டிலும் அதே. என்ன செய்யலாம்? என்று யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அம்பிக நடிகைக்கு அமெரிக்க கணவர் இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இனிமேலும் அங்கே நின்றால் உறவு முறியும் என்று கூறிவிட்டார். நடிகையின் சகவாசங்கள் பற்றி அறிந்ததால்தான் கணவர் துள்ளுகிறாராம்.

'மா' நடிகையின் சகோதரியான 'ரோ' நடிகைக்கும் அருண் நடிகருக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட்டுவிட்டது. எங்கள் உறவு காதலுக்கும் நட்புக்கும் இடைப்பட்டது. அவற்றை விடவும் சிறந்தது. இரக்கமானது என்கிறாராம் நடிகை. கேட்பவர்கள் தலை முடியைப் பிய்க்காத குறைதானாம்.

### நம்ம வீட்டு கல்யாணம்

மணிவண்ணன் ஆட்டமிழக்காமல் தொடர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார். கவுண்டமணியைத்தான் காண முடியவில்லை.

மணிவண்ணன் நடிக்கும் படங்களில் ஒன்றுக்கு 'நம்ம வீட்டு கல்யாணம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். இதில் கதாநாயகனாக நடிப்பவர் அஜித்குமார். மணிவண்ணன் அவருக்கு அப்பாவாக நடிக்கிறார். கதாநாயகி ப்ரிதா விஜயகுமார்.

இயக்கம்: ஆர்.மாதவன். இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி. ரஞ்சித், தலைவாசல் விஜய், விவேக், ஆர்.பி. விஸ்வம், கிட்டி, அம்பிகா, பாத்திமா, பாபு உட்பட பலர் நடிக்கவுள்ளனர்.

### மூன்று படங்கள்

பாலசந்தரின் கவிதாலாயா பட நிறுவனம் மூன்று படங்களை ஒரே காலத்தில் தயாரித்து முடிக்க இருக்கிறது.

ஒரு படத்தில் கதாநாயகன் கார்த்திக். அதன் கதை, வசனம் பால சந்தர். இயக்கம் யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை. இன்னொரு படத்தின் நாயகன் முரளி. அவர் நடிக்கும் படத்தை இயக்குபவர் பிரபல இயக்குநர் பூமணி.

மூன்றாவது படத்தை இயக்குபவர் 'லவ் டுடே', 'துள்ளித் திரிந்த காலம்' படங்களை இயக்கிய பாலசேகரன். படத்திற்கு 'உயிரெழுத்து' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. நாயகன் பிரசாந்த் என்று தெரிகிறது. நாயகி இன்னமும் முடிவாகவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

## இளமையுடன்

போன்றே என்றும் இளமையுடன் காட்சி தரும்
ர் சரத்பாபு.
த்திரங்கள், வில்லத்தனமான பாத்திரங்கள்
சோபிக்கக்கூடியவர்.
ாக' படத்தில் பிரதான வேடம் ஏற்றுள்ளார்.
யகன் ரமேஷ் அரவிந்த்.
த் நேற்றுத்தான் நடிக்க வந்த இளைஞர்.
எத்தனை இளமையுடன் தெரிகிறார் பாருங்கள்.

## ஏட்டிக்கு போட்டி

அந்தக் காலத்தில் சிவாஜி, எம்.ஜி.ஆர் போட்டி பிரபலம். அப்போது ஏட்டிக்கு போட்டியாக இருவரது படங்களது பெயர்களும் காணப்படும். உதாரணத்திற்கு சில:

அரச கட்டளை-ஆண்டவன் கட்டளை
மருதநாட்டு இளவரசி- மருதநாட்டு வீரன்
என் அண்ணன்-என் தம்பி
சபாஷ் மாப்பிளை-சபாஷ் மீனா
திருடாதே-திருடன்
புதிய பூமி-புண்ணியபூமி
தனிப்பிறவி-தெய்வப் பிறவி

## நக்மா முடிவு

இரண்டு வருட காதல் உறவுக்கு டாட்டா காட்டிவிட்டார் நக்மா. இப்போது நடிப்பில் முழுக் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார்.

நக்மாவின் தங்கைகளான ரோஷினி, ஜோதிகா இருவரும் நடித்து வருகிறார்கள். இருவரையும் வேறு வீடு பார்த்து போகச் சொல்லியுள்ளார் நக்மா.

தங்கைகள் ஒரே வீட்டில் இருந்தமையால் ஏற்பட்ட இரவுக் குழப்பம்தான் காதல் முறிவுக்கு முக்கிய காரணமாம்.

இப்போது நக்மாவின் தாயார் தன் இரண்டு மகள்களுடன் நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருக்கிறார்.

## ப்ரியமுடன் விஜய்

'ப்ரியமுடன்' என்ற பெயரில் தயாராகும் படத்தில் கௌசல்யாவுடன் ஜோடியாக நடித்துவருகிறார் விஜய்.

படத்தின் கதை என்ன? விஜய் சுருக்கமாக விளக்கியுள்ளார்: "படத்தில் நாயகனின் அத்துமீறல்கள் எல்லாமே அநீதிக்கு எதிராகத்தான். அதனால் அவனுக்கு கெட்டவன் என்று முத்திரை. ஆனாலும் அவனைச் சார்ந்தவர்கள் அவனை ப்ரியமுடன் ஏற்கிறார்கள். அதுதான் கதை" என்கிறார்.

'நினைத்தேன் வந்தாய்' படத்தில் இரண்டு பெண்களிடம் சிக்கிக் கொண்டு திண்டாடும் நாயகன், 'நிலாவே வா' படத்தில் ஆக்ரோச மீனவன் என்று படத்துக்கு படம் வித்தியாசம் காட்டுகிறாராம்.

## ...ஆட்டமா?

வே' படத்தில் சிவாஜி,
ருடன் நடிக்கிறார்
ாஜியுடன் நடிப்பது
என்று கூறுகிறார்.
மையில் சிவாஜிமீது
தத்தில் இருக்கிறார்.
ஆடும் காட்சியில்
கல்கத்தா காளி
. எங்க ஊர் ஆட்டம்.
நீ ஆடறது தப்பு" என்றா
ராம் சிவாஜி.

"சிவாஜி பெரிய நடிகராக இருக்கலாம். அதுக்காக மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்று நினைக்கக் கூடாது. நான் முறைப்படி நடனம் கற்றவள்" என்று இயக்குநரை தனியாக அழைத்து கூறினாராம். சவலட்சமி.

## சமரசம் தோல்வி

'உல்லாசம்' படத்தின் பின்னர் மகேஸ்வரி தெலுங்குக்கு போனார். அங்கு அவரது முன்னாள் காதலர் சக்கரவர்த்தியுடன் மறுபடி சமரசமாக முயன்றார். சக்கரவர்த்தி மசியவில்லை.

தமிழில் முரளியுடன் ரத்னா படத்தில் நடித்து வருகிறார் மகேஸ்வரி. ரத்னாவில் கவர்ச்சி மட்டுமல்ல, நடிக்கவும் செய்கிறாராம். ஆனாலும் மகேஸ்வரி என்றாலே இயக்குநர்கள் ஆடையை குறைப்பதில்தான் கவனமாக இருக்கிறார்கள். மகேஸ்வரியின் ராசி அப்படி.



ாபட்



ரமேஷ் அரவிந்த்-சரத்பாபு
படம்:உயிரினும் மேலாக

## கௌரவ ரஜினி

சத்யராஜ் நடித்த 'வள்ளல்' தமிழில் அவ்வளவாக ஓடவில்லை. அதனை தெலுங்கில் தயாரிக்கிறார் மோகன்பாபு. ஏற்கனவே 'நாட்டாமை' படத்தை தெலுங்கில் தயாரித்து நடித்தவர் மோகன்பாபு.

'நாட்டாமை' படத்தில் ரஜினி கௌரவ வேடத்தில் நடித்தார். 'வள்ளல்' படத்திலும் கௌரவ வேடத்தில் நடிக்கப்போவதாக தகவல்.

"பளிங்கினால் ஒரு மாளிகை
பருவத்தில் மணி மண்டபம்
உயரத்தில் ஒரு கோபுரம்
உன்னை அழைக்குது வா!"

## பூஜாவின் ரசனை

இந்திபட உலகில் 'செக்ஸ்' புரட்சி செய்பவராக பேசப்பட்டவர் பூஜாபட்.

தமிழிலும் 'கல்லூரி வாசல்' படத்தில் நடித்தவர்.

மும்பாய் பத்திரிகை ஒன்றுக்கு நிர்வாணமாக போஸ் கொடுத்து கதிகலங்க வைத்தவர். பின்னர் அதற்கு பலத்த கண்டனம் எழுந்தமையால், அது என் உடம்பல்ல, முகம் மட்டும்தான் என்னுடையது என்று கரணம் அடித்தார். யாரும் நம்பவில்லை.

நடுத்தரவயதான ஆண்களைத்தான் பூஜாபட்டுக்குப் பிடிக்கும். 55 வயதான படத்தயாரிப்பாளர் ஒருவருடனும் அதிக ஒட்டுதலோடு இருக்கிறார். 'நடுத்தரவயதுக்காரர்கள் என்றால் நிதானமானவர்கள். நம்மை புரிந்துகொண்டு அனுசரணையான நட்புடன் இருப்பார்கள்!' என்று பூஜாபட்டே ஒருதடவை பேட்டியளித்திருந்தார்.

பூஜாபட்டின் இத்தகைய ரசனையால் இளம் ஹீரோக்கள் இவரை அண்டுவதில்லை. அதனால் பட வாய்ப்புகள் முன்பு போல் இல்லை.

## விஜயகாந்த்—ப்ரீதா

அந்தக்கால மஞ்சுளாவின் சாயலில் இருக்கிறார் ப்ரீதா விஜயகுமார். 'ரிக்ஷாக்காரன்', படத்தில் எம்.ஜி.ஆர் ஜோடியாக மஞ்சுளா நடித்தபோது ப்ரீதாபோலவே இருந்தார்.

அது என்னவோ தெரியாது, மளமளவென்று ப்ரீதாவுக்கு படங்கள் குவிகின்றன. இளம் நாயகர்கள் மட்டுமல்ல, விஜயகாந்த் விருப்பமும் ப்ரீதாதான்.

'தர்மா' படத்தில் விஜயகாந்த் ஜோடியாக நடிக்கிறார் ப்ரீதா விஜயகுமார். சிம்ரான், ரம்பா எல்லோரையும் சத்தமில்லாமல் ஓரம் கட்டப்போகிறது இந்தச் சிட்டு.

## பொய் சொல்ல வருகிறான்

கார்த்திக், மீனா, பிரியாராமன் நடித்து வரும் படம் 'அரிச்சந்திரா' இப்படத்திற்காக தன் சொந்தக் குரலில் பாடியுள்ளார் கார்த்திக். ஏற்கனவே கார்த்திக் பல படங்களில் தன் குரல் வித்தை காட்டியிருக்கிறார்.

'அரிச்சந்திரன் வர்றான், பொய் சொல்லப் போறான். உண்மையை சொன்னா உலகம் நம்பாது....' என்று தொடங்கும் பாடலைத்தான் காத்திக் பாடியுள்ளார்.

இப் பாடல் காட்சிக்காக மட்டும் ஆறு இலட்சம் ரூபாய் செலவில் அரங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

## கஸ்தூரி தயார்

'கவர்ச்சியா ஐயைய்யோ...' என்று கஸ்தூரி பிகு பண்ணியது அந்தக் காலம். இப்போது ஆடைத் தியாகத்துக்கு அம்மணி தயார்.

தெலுங்கில் முழுப் பரிமாணங்களையும் காண்பித்தார். தமிழிலும் அதேபோல நடிக்க டபிள் ஒ.கேயாம். ஆனாலும் தமிழ்ப்பட இயக்குநர்களுக்கு கஸ்தூரியின் மேல் என்ன கோபம்? போதிய வாய்ப்புக் கொடுக்கிறார்களே இல்லையே.



ரோஷினி
படம்:துள்ளித்திரிந்த காலம்



சிம்ரான்
படம்:அவள் வருவாளா

## ...த்தார் ஹீரா

தரபாண்டியன் படத்தில் பாடல் ஒன்றில் ஆடிக்கொண்டிருந்தார் திடீரென்று ஆட்டத்தை பாதியில் விட்டு போய்விட்டார்.

ரணம் என்ன? "பாடல் வரிகள் ஆபாசருந்தன. கவர்ச்சியாக நடிக்கலாம். மோசமான வரிகளுக்கு வாயசைக்கன். அந்தப் பாட்டுத்தான் வேண்டுப் வேறு யாரையாவது போட்டுக் கொள்ளட்டும்" என்கிறார் ஹீரா.

அப்படி என்ன பாடல்?

"கிக்கடி கிக்கடி குயிலு, நைட்ல அடிக்குது வெயிலு, மெழுகுவர்த்தி விளக்கை ஏத்தி கேக்கு வெட்டிக் கொண்டாடு. சிக்கிக்கிட்டா சிக்ஸர் தூக்கலாம்..." என்று போகிறது பாடல்.

இதைவிட ஆபாசமான பாடல் வரிகளுக்கு எல்லாம் ஆடியவர் ஹீரா. சுந்தரபாண்டியனில் பிரச்சனை கிளம்பியதற்கு வேறு காரணம் இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## மினி சினி

★ ஏ.வெங்கடேசன் இயக்கத்தில் விஜய் தயாரித்து நடிக்கும் 'நிலாவே வா' படத்தில் விஜய்க்கு ஜோடிகளாக சுவலட்சுமியும், ரக்ஷனாவும் நடிப்பதாக இருந்தது. இப்போது இதில் ஒரு சின்ன மாற்றம். ரக்ஷனாவுக்குப் பதிலாக சங்கவி நடிக்கிறார்.

★ 'பெண் ஒன்று கண்டேன்' படத்தில் சத்யராஜும், 'நட்புக்காக' படத்தில் சரத்குமாரும் முதன் முறையாக சொந்தக் குரலில் பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார்கள்.

★ 'ஜீன்ஸ்' படத்திற்காக கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் வேறு எந்தப் புதிய படங்களிலும் நடிக்காமல் இருந்த பிரசாந்த், தற்போது அகத்தியன் இயக்கும் படம், சிவசக்தி பாண்டியன் மற்றும் கே.பாலச்சந்தர் தயாரிக்கும் படம் என 3 புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ 'இந்தியா டுடே' படத்தில் மம்முட்டிக்கு ஜோடியாக நடிப்பவர் புதுமுகம் தாரா பாண்டே. இவர் ஷபானா ஆஸ்மி கதாநாயகியாக நடிக்கும் 'படாதின்' என்ற இந்திப் படத்திலும் நடித்து வருகிறார்.

★ கே.எஸ்.அதியமான் இயக்கிய 'தொட்டாச்சிணுங்கி', 'சொர்ணமுகி' ஆகிய படங்களின் கதை இரண்டு கதாநாயகர்கள் பற்றியதாகும். இவர் அடுத்து இயக்கும் 'பிருந்தாவனம் நந்தகுமாரனும்' படத்தின் கதை இரண்டு கதாநாயகிகளைப் பற்றியதாகும்.

★ தமிழில் படங்கள் எதுவுமின்றி இருக்கும் கனகா சில மலையாளப்படங்களில் நடித்து வருகிறார். அவற்றில் ராஜன் சித்தாரா என்னும் புதிய இயக்குநர் இயக்கத்தில் கனகா கதாநாயகியாக நடித்துள்ள 'மந்திரி கொச்சம்மா' என்ற படம் விரைவில் வெளியாகவுள்ளது.

★ அஜித்குமார்-சிம்ரான் நடிக்கும் 'அவள் வருவாளா' படத்தை இயக்குபவர் புதிய இயக்குநர் தமிழ் வாணன். இவர் 'பாஞ்சாலங்குறிச்சி' படத்தின் இயக்குநர் சீமானிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.

★ கேயார் இயக்கத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் 'தர்மா' படம், சன்னிதியோல் நடித்த 'சித்தி' என்ற இந்திப்படத்தின் தமிழ்த் தழுவலாகும்.

★ தமிழிலும், தெலுங்கிலும் பிரபலமாக இருந்து வரும் சௌந்தர்யா முதன் முதலாக திரையுலகிற்கு அறிமுகமானது கன்னடப்படம் மூலம்தான். 'நன்னா தங்கி' என்ற அந்தப் படம் படுதோல்வியடைந்தது.

★ பிரபுதேவா நடித்த படங்களில் பெரும்பாலானவை இந்தியில் மொழி மாற்றப்பட்டு வெளியானதில் அவரது முகம் அங்கு பரிச்சயமாகிவிட்டது. இதனால் பிரபுதேவாவுக்கு நேரடியாக இரண்டு இந்திப் படங்களில் நடிக்கும் வாய்ப்புக்கள் வந்துள்ளன.

www.padippakam.com



## ஒரு வேண்டுகோள்

உன் கவிதைகளை நேற்றும் தின்றன
விழிகள்,
இரு நூறுதரமேனும்-
உன்னைப் பற்றி கற்பனித்தது மனசு.
எந்த நிலவும் சிக்கிக் கொள்ளாத,
சொர்க்கலோகத்தின்
இனம் புரியாத அழகி-நீ.
***
உன் காயங்களை மறைத்து, மறைத்து,
என்-கவிதையின் சிரசு-
திருடிக் கொண்டாய்.
***
நான் அழுது மடிவதற்கா
என் செய்யுள்களை காதலித்தாய்!
***
என்பெயரை ஏந்தி,
முற்றுப்புள்ளி இடும் போதெல்லாம்
உன்னை நினைப்பதென்பது
முடிவாகிவிட்டது.
***
காலச் சிறையில்
கருகி வீழ்ந்த மலர்கள் நாம்,
கைதிகளின் கூட்டிலுள்,
தளையிடப்பட்ட குற்றவாளிகள்:
***
நீ அழுவதை நிறுத்தமாட்டாயா
என் மனசு வலிக்கிறது.

என்.சுஹறா, கள்-எலிய

## அன்று பட்ட அடிகள்



படுகொலைகள், படுவதைகள், பட்டினிபோடல்கள் என்பவை இன ஒழிப்புக்காக ஹிட்லரால் கண்டு பிடிக்கப்பட்டவை.

போலந்தை கைப்பற்றிய ஜெர்மன் ஆக்கரமிப்பு படைகள் அங்கு யூத மக்கள் பலரை கொன்று குவித்தன. இளம் பெண்களை தமது சதைப்பசிக்கு தீனியாக்கின. பல நூறு பேரை கைது செய்து சித்திரவதைக் கூடங்களில் அடைத்தன.

அதுபோதாது என்று யூத மக்களை பட்டினிக் கொடுமைக்கு உள்ளாக்கினர். மானிய முறையில் வழங்கப்பட்ட உணவு கால் வயிற்றை நிரப்பக் கூடப் போதுமானதாக இருக்கவில்லை.

பட்டினியால் வாடிக் கிடந்த யூதக் குழந்தைகள்தான் இவர்கள்! இத்தனை கொடுமைகளையும் சகித்து, இன்று யூதர்கள் பலம் பெற்றவர்களாக விளங்குவதற்கு காரணம் என்ன? மனத்திடம்! எதையும் தாங்கிப் போராடும் தைரியம்!

இஸ்ரேலியரின பாலஸ்தீன ஆக்கிரமிப்பை ஏற்கவே முடியாது, எனினும் இஸ்ரேலை பலம் வாய்ந்த நாடாக கட்டியெழுப்பிய யூதர்களது ஒன்றுபட்ட உழைப்பும் மனோ தைரியமும் வியப்புக்குரியதே!

## போதி மரம்

திளை விதைத்தவன்
திளை மட்டும்
அறுப்பதில்லை
களை அகற்றாவிட்டால்
திளை ஏது?

விளை விதைத்தால்- தி
விளை விதைத்தால்
"பென்ஸ்"
கார் கிடைப்பது
ஏனடி அம்மா.

தாமதிக்கப்பட்ட நீதி
தண்டனையாகும்
நீதியாவது
மண்ணாங்கட்டியாவது
புண்ணாக்கு.

பிள்ளையார் கோயிலில்
சிவனும் உமையும்
கைது
ஆயுதங்கள் மீட்பு

ஆறு முகம் பன்னிரண்டு
புகைப்படத்துடன்
கிராம சேகரிடம்
தவம் கிடந்தும்
ஞானம் பெறவில்லை

சாதாரண மனிதன்
ஐநூறு ரூபாயை
அழுத்தியதில
பெற்றுவிட்டான்
ஞானம்!

சுபா வரன்- கண்டி.

## நீ நிரப்பிய சோகம்

யுகம் யுகமாய்
நெய்வார்த்து மூட்டிய
நெருப்பாய்
என் மனதை
வருத்திக் கொண்டேயிருக்கும்
உன் நினைப்பு!
o-o
உன்னைப்பற்றியதான
ஞாபக நதிகள்
பெருக்கெடுக்க ஆரம்பித்ததன்
பிற்பாடுதான்
காதல் அணைக்கட்டு
உடைப்பெடுக்கலாயிற்று!
o-o
வாடிப்போன என்
விழிகளுக்குள்
வற்றிப் போகாமல் இருப்பது
கண்ணீரல்ல, கண்மணி;
உன்னைப்பற்றிய என்
கனவுகளே!
o-o
சகியே...!
நேசிக்க முடிந்த
அவசரத்தில்
வெறுக்க முடிவதில்லையே
எனும் போது
வெறுப்பாய்த்தான்
இருக்கிறது!
o-o
சித்திரம் பற்றி
சிந்திக்கவே தெரியாத
உன் கைகளுக்கு
தூரிகை தந்த என் செயல்
எவ்வளவு
கோமாளித்தனமானது?
o-o
சகியே!
உள்வீடு பயனற்ற
உப்பியதோர் பந்தாய்-
நீதந்த சோகங்களால்
என் வாழ்க்கை
பயனற்றதாயிற்று!
o-o
கண்மணி! என்
வாழ்க்கைக் கிண்ணத்தில்
சந்தோஷங்களை
நிரப்பச் சொல்லி
உன்னிடம் யார்
சொன்னது!?

நீயேன்
எல்லாச் சோகங்களையும்
நிரப்பி விட்டுப் போனாய்
என் வாழ்க்கைக்குள்!?
o-o

கம்மல் துறை
எம்.எல்.ஸர்ஹான்.

## தேன் கிண்ணம்

### சுயம்

எவருக்குப் புரியும்
மற்றவர்
வேதனை?
••
என் பசிக்கு
இன்னொருவர் புசித்தால்
பயன் வருமா?
••
எனது கனவுகளை
உனது கண்களால்
சுமக்க இயலுமா?
••
உன் உறுப்புக்களில் ஒன்றாவது
என் நிழலில்
ஒட்டிவிடுமா?
••
என்னுடைய ஒரு சிறு
மூச்சுக் காற்றாவது
இன்னொருவருக்கு
இரவல் ஆகுமா?
••
உனது கண்ணீர்
எனது சோகம் தீர்க்க
களிம்பாகுமா?
••
எனது
ரணங்களும் வலிகளும்
உன்னை இம்சிக்குமா?
••
எனது புன்னகையில்
குளிர்ந்துறையும்
ஆன்மா
என்னுடையதே!
••
எனில்
இன்னொருவருக்குப்
பங்கில்லாமல்
எனக்குள்ளிருக்கும்
என்னுடைய சுயம்
எனக்கு மட்டுமே.
••

இனியவன் இசார்தீன்.

## பேனா நண்பர்கள்



பெயர்:எஸ்.மோகன்ராஜ்
வயது: 25
முகவரி: 'நம்பிக்கை இல்லம்' இணுவில், சுன்னாகம், யாழ்ப்பாணம்
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.சர்மிளா
வயது: 18
முகவரி: நவ ரைஸ்பேன், நாவலப்பிட்டி.
பொழுது போக்கு: பேனா நட்பு, தொலைக்காட்சி.



பெயர்: ஜே.நிர்பான்
வயது: 17
முகவரி: முகிரியாவ, கஹட்டகஸ்டிகிலிய.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எஸ்.நளீர்தீன்
வயது: 22
முகவரி: கோபாலபுரம், நிலாவெளி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(19.04.1998 தொடக்கம் 25.04.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மேடம் - சூரியன், செவ்வாய்.
சிம்மம் - இராகு.
கும்பம் - வியாழன், வெள்ளி, கேது.
மீனம் - சனி, புதன்.

சந்திரன்- தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், இனசனப் பகை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிடவாழ்க்கை,செலவு மிகுதி | பகல் | 11 | மணி |
| புதன்- உறவினர் உதவி,மனக்கலக்கம் | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் சுகம், காரியானுகூலம் | பகல் | 11 | மணி |
| வெள்ள.பலவிதபேறு, தொழில் உயர்ச்சி | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| புதன்- வீண் முயற்சி, பலவித கஷ்டம். | பி.ப | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- கடன் சுமை, மனப் பயம். | பகல் | 12 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனகலக்கம்,தேககம் பாதிப்பு | பி.ப | 2 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பணச்செலவு | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு,அந்நியர் உதவி. | பி.ப | 3 | மணி |
| புதன்- வெளியிட வாழக்கை,உயர்ந்த நட்பு | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம்,காரியானுகூலம் | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம்,பலவித பேறு | பி.ப | 2 | மணி |
| சனி- மனமகிழ்ச்சி,அந்நியர் நட்பு | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் முயற்சி, மனக்கவலை | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம் | பி.ப | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி | பி.ப | 3 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | பி.ப | 2 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்கலக்கம்,தேகசும் பாதிப்பு | பி.ப | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி,பணவரவு | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம்,செலவுமிகுதி | பகல் | 11 | மணி |
| புதன்- புதிய முயற்சி,காரியானுகூலம் | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடவாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம்,பணவரவு. | பகல் | 11 | மணி |
| சனி- இனசன நன்மை,காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் பகை, பண விரயம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண் செலவு, கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், காரியத் தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் சுகம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பண வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- மனக் கலக்கம், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாக்த்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும் முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, பொருள் வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, செலவதிகம். | பகல் | 11 | மணி |
| சனி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2



படிப்பகம்

www.padippakam.com

# பங்கம் இல்லாத தங்கம்



தங்க நகைகள் வாங்கும்போது கவனிக்க வேண்டியவை:

* நிறத்தையும் பளிச்சென்ற தன்மையையும் பார்த்துத் தங்க நகைகளை வாங்கக் கூடாது. பொலிஷ் முலம் ஆபரணங்களுக்கு எந்த அளவுக்கு வேண்டுமானாலும் நிறம் கொடுக்கலாம். மஞ்சள் நிறம் அதிகமாக இருக்கும் ஆபரணம் அதிக 'மாற்று' கொண்டது என்று எண்ணி விடாதீர்கள்.

* வேலைப்பாடுகள் குறைந்த ஆபரணங்களை வாங்குவதே சிறந்தது. செய்கூலி குறைவு என்பதைவிட, விற்கும் போதும் அதிக கழிவு ஏற்படாது.

* தங்க நகைகளுக்கு பலர் பில் வாங்கு வதில்லை. தேவையில்லாமல் எதற்கு பில் போட்டு விற்பனை வரி கொடுக்க வேண்டும் என நினைக்கிறார்கள். நகைகள் சரியில்லாமல் போனாலோ, பிற்காலத்தில் விற்க வேண்டு மென்றாலோ பில்லால் பெரும்பலன் ஏற படும். பில் வாங்கும்போது, நகையின் எடை, டிஸைன், மாற்று போன்றவைகளைத் தெளிவாகக் குறிப்பிடச் சொல்ல வேண்டும்.

* கற்கள், முத்துக்கள் பதித்த நகைகள் வாங்கும்போது, அதிக கவனம் காட்ட வேண்டும். சில கடைகளில் கற்களின் எடையையும் தங்கத்தின் எடைபோலப் பாவித்து விடுவார்கள். கற்களுக்குத் தனி எடையும், தங்கத்திற்குத் தனி எடையும் காட்டவேண்டும்.

* பழக்கம் உள்ள கடைகளிலே நகை வாங்குவது சிறந்தது. அதனால் ஏமாற்றம் தவிர்க்கப்படும். கூடவே பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் உடனடியாகப் பரிகாரம் காணவும் முடியும்.

ஆபரணங்கள் வாங்கிவிட்டால் மட்டும் போதாது. அதனை மாற்றுக் குறையாத அளவுக்குப் பாதுகாக்கவும் தெரிய வேண்டும். நகைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிகள்:

* தங்க நகைகளைத் தனித்தனிப் பெட்டிகளில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். ஒன்றோடு ஒன்றாகப் பலவற்றைச் சேர்த்தால், நகைகளில் கீறல் ஏற்பட்டுவிடும். அதனால் மாற்றுக் குறையும், நிறமும் மங்கிவிடும்.

* சவர்க்காரம் சேர்த்த இளம் சுடுநீரில் ஆபரணங்களைத் தோய்த்து அரைமணி நேரம் கழித்துத் தண்ணீரில் கழுவ வேண்டும்.

* சிறிதளவு பற்பசை அல்லது தரமான பற்பொடி சிறிதளவு எடுத்து, பழைய பிரஷ்ஷில் வைத்து ஆபரணங்களைச் சுத்தம் செய்யலாம்.

* ஆபரணத்தில் அதிகமாக அழுக்கு பதிந்துவிட்டால், சவர்க்காரக் கலவையில் போட்டு ஆபரணத்தைக் கொதிக்க வைத்து பின்பு பிரஷ் மூலம் தேய்த்துக் கழுவ வேண்டும்.

* சவர்க்காரத் தூளும், மஞ்சள் தூளும் சலந்த நீரில் ஆபரணங்களைப் போட்டு, 5 நிமிடம் சூடாக்கி விட்டு பின்பு கழுவினால் ஆபரணங்கள் 'பளிச்' என மின்னும்.

* கல்பதித்த ஆபரணங்களைச் சுடுநீரில் போட்டு விடக்கூடாது.

* வைரம் பதித்த ஆபரணங்களை பற்பசை மற்றும் மிருதுவான பிரஷ் பயன்படுத்தி சுத்தம் செய்யுங்கள்.

* முத்து, வைடூரிய ஆபரணங்கள் மென்மையானவை. அதனால் அவற்றைக் கவனமாக சுத்தப்படுத்த வேண்டும். அவைகளை 'பிளாஸ்டிக்' கவரில் வைக்கக்கூடாது. வெல்வெட் அல்லது துணியில் பொதிந்து வைக்க வேண்டும். வியர்வை, சென்ட் போன்றவை இந்த வகை ஆபரணங்களில் படுவது நல்லதல்ல. விசேஷ நிகழ்ச்சிகளில் மட்டும் இந்த மாதிரியான ஆபரணங்களை அணியுங்கள்.

# வெற்றி பெறுவது எப்படி?

வெற்றிப்பாதையில் செல்ல வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் நேரத்தை மிச்சம்பிடிக்க வேண்டும். எப்படி?



* தினமும் அதிகாலை 5 மணிக்கே எழுந்து விடுங்கள். விழிப்பு வந்த பின்பும் சோர்ந்து போய் படுக்கையில் உருளக் கூடாது. சீக்கிரமாகவே எழுந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இரவில் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

* ஒவ்வொரு நாளும் செய்து முடிக்க வேண்டிய வேலைகளைக் குறிப்பெடுத்து வையுங்கள். அன்றன்றைக்கே அதனைச் செய்து முடித்து உங்களுக்கே ஒரு சபாஷ் போட்டுக் கொள்ளுங்கள்.

* எது முதலில் செய்யப்பட வேண்டியது? பின்னர் எதைச் செய்வது? என்று முடிவு செய்வதில் அதிக காலம் தாழ்த்தி விடாதீர்கள்.

* ஒரு வேலையை முடிக்க குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். அந்த நேரத்திற்குள் வேலையை முடிக்க முயற்சி செய்யுங்கள்.

* நேரம் போதாது என்ற எண்ணம் இருந்தால் தூங்கும் நேரம், பொழுதுபோக்கும் நேரம், வம்பளக் கும் நேரம் போன்றவைகளை ஓரளவு குறைத்து தேவைப்படும் நேரத்துக்காகச் சரிக்கட்டிக் கொள்ளுங்கள்.

* உங்களுக்கு வரும் எல்லாக் கடிதத்திற்கும் பதில் எழுதிப் போடுங்கள். உடனே பதில் எழுத வேண்டும் என்று உங்களையே நீங்கள் நிர்ப்பந்தப்படுத்துங்கள். உறவையும், நட்பையும் பலப்படுத்த கடிதங்கள் உதவும்.

* ஓய்வு நாட்களில் முடிந்தளவு ஓய்வெடுங்கள். வேலை நாட்களில் ஓய்வெடுக்காதீர்கள்.

* இது என்ன இயந்திர வாழ்க்கை என்ற எண்ணம் மனதில் எழுந்தால், வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு இரண்டு நாட்கள் விருப்பமான இடத்திற்குப் பயணம் போய் விடுங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DN

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

கையொப்பம்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-04-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 31

# மகாராணியின் முன்னாள் காதலர்

சாள்ஸும்-டயானாவும் மறுபடி ஒன்று சேர்த்துவிடுவார்களோ என்று கமீலா சந்தேகப்பட்டார்.

அதனால் முன்பைவிட அதிக நேரத்தை சாள்ஸ்சுடன் செலவிட்டார்.

ஹைகுரோவ் தோட்டத்தில் சாள்ஸ் ஏற் பாடு செய்யும் விருந்து வைபவங்களை



இளவயதில் மகாராணியார்

கமீலாவே முன்னின்று கவனிக்கத் தொடங்கினார்.

அதனைக் கண்ட டயானாவுக்கு தாங்க முடியாத வெறுப்புக் கிளம்பும். அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பார். விருந்தில் கலந்து கொள்ள வரமாட்டார்.

கமீலாவின் எதிர்பார்ப்பும் அதுதான். டயானாவின் கண்களில் தென்படக்கூடியதாக சாள்ஸ்சுடன் உரசிக்கொண்டும், வழிந்து கொண்டும் கமீலா காட்சியளித்தார்.

இந்த விவகாரங்கள் எல்லாமே ஹைகுரோவ் மாளிகையில் பணிபுரிந்த ஊழியர்களால் கவனிக்கப்பட்டே வந்தது.

ஹைகுரோவில் நீண்ட காலம் காவல் கடமையில் இருந்து ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜர் அண்ட்று ஜாக்குவேஸ்.

ஓய்வு பெற்றதும் ஒரு பத்திரிகைக்கு ஹைகுரோவ் இரகசியங்கள் பற்றி நீண்ட கட்டுரை எழுதினார். கணிசமான வெகுமதி அவருக்குக் கொடுக்கப்பட்டது.

"இளவரசரின் வாழ்வில் டயானாவுக்குரிய இடத்தில் புகுந்துகொண்டு ஆட்டம் போடும் பெண்மணிதான் கமீலா," என்று தன் கட்டுரையில் அவர் விபரித்திருந்தார்.

இக் கட்டுரையை சாள்ஸ் வட்டாரம் வெறுத்தது. டயானாவின் நெருங்கிய வட்டாரம் வரவேற்று ஆமோதித்தது.

"இளவரசர் சாள்ஸ்சுடன் அனுசரித்துப் போக முடியாதா? கடைசியாக முயன்று பாரேன்!" என்று டயானாவின் குடும்ப நண்பர்கள் சிலர் ஆலோசனை கூறினர்.

அவர்களிடம் டயானா கூறினார்: "எனக்கு மட்டும் அந்த ஆசை இருக்காதா என்ன? ஆனால் சாள்ஸை நினைக்கும் போதெல்லாம் கூடவே கமீலாவும் என் மனக்கண் முன்னால் தோன்றுகிறாள். அதை நினைக்க எனக்கு பைத்தியம் பிடித்துவிடும்."

## அதிர்ச்சி

இக் காலகட்டத்தில் டயானாவின் குடும்ப நண்பர் ஒருவர் மூலமாக அத் தகவல் டயானாவுக்குத் தெரியவந்தது.

அதனை நம்பவும் முடியாமல், நம்பாதிருக்கவும் முடியாமல் டயானா குழம்பிப் போனார்.

டயானாவின் தந்தையாரான ஏள் ஸ்பென்சருக்கும், மகாராணி எலிசபெத்துக்கும் இடையே காதல் உறவு இருந்தது என்பதுதான் அந்தத் தகவல்.

இத் தகவலை வெளியிட்டவர் பொறுப்பற்ற ஒருவரல்ல; ஸ்கொட்லாந்து மதபோதக ரான டக்ளஸ் லிஸ்டர் என்பவர் தான் அதனைக் கூறியிருந்தார். தகவலைக் கூறும்போது அவருக்கு 71 வயது.

அந்த வயதில், அதுவும் ஒரு மத போதகர் பொய் கூறவேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்தார் டயானா.

1947ம் ஆண்டு ஏள் ஸ்பென்சர்-எலிஸபெத் காதல் மலர்ந்தது. அப்போது எலிஸபெத்துக்கு 20 வயது.

பட்டாம்பூச்சிபோல பறந்து திரிந்த எலிஸபெத்தின் அழகு ஏள் ஸ்பென்சரைக் கவர்ந்தது. எலிஸபெத்துக்கு ஏள் ஸ்பென்சரை பிடித்துக் கொண்டது.



ஸ்பென்சர்-எலிஸபெத்

இருவரும் காதல் வானில் தம் சிறகுகளை விரித்துப் பறந்து திரிந்தனர்.

எத்தனை நாட்களுக்கு மறைக்க முடியும்? அரண்மனைக்கு இவர்கள் காதல் தெரிய வந்தது. பூகம்பம் வெடித்தது.

எதிர்கால மகாராணிக்கு கணவராகும் தகுதி அந்த ஏள் ஸ்பென்சருக்கு இருக்கிறதா? இல்லவே இல்லை!

"நாளைய மகாராணி நீ. தலையில் சூடப் போகும் முடிக்காக உன் காதலை இறக்கி வைத்து விடு!" என்று இரவும் பகலும் எலிஸபெத்துக்கு ஓதல் நடந்தது.

இறுதியில் பணிந்தார். காதலைத் துறந்தார்.

அதன் பின்னர் ஒன்பது மாதங் களில் இளவரசர் பிலிப்பை மணந் தார் எலிஸபெத்.

காதல் முறிந்த சோகத்தில் சிலகாலம் மனம் சரிந்து கிடந்தார் ஏள் ஸ்பென்சர். பின்னர் தன்னைத் தேற்றிக் கொண்டார்.

ஆனாலும் இறுதிவரை எலிஸபெத்தை அவரால் மறக்க முடியவில்லை. அதனால்தான் டயானாவின் தாயாருடன் முழுமையான ஈடுபாட்டுடன் அவரால் வாழ முடிய வில்லை.

அரச குடும்ப மருமகளாக தன மகள் செல்வதை ஏள் ஸ்பென்சர் தடுக்காததுக்குக் காரணமும் அதுதான்.

ஏள் ஸ்பென்சரை தனியாக அழைத்த எலிஸபெத், "உங்கள் மகளை மருமகளாக அடையும் பாக்கியத்தை தாருங்கள்,"என்று கேட்டபோது, அவரால் மறுக்கவே முடியவில்லை.

இவைதான் டயானா அறிந்த தகவல்கள்.

இளவயதில் தன் தந்தையைக் காதலித்த மகாராணி தன் குடும்பத்தினர் பற்றிய பேச்சை எடுத்தால் முகம் சுளிப்பதும், அலட்சியப்படுத்துவதும் நடிப்புத்தானோ என்றும் டயானா யோசித்தார்.

தந்தையார் உயிருடன் இருந்தபோது அத் தகவல் கிடைத்திருந்தால், அவரிடம் கேட்டு உறுதி செய்ய டயானா தயங்கியிருக்கமாட்டார்.

தந்தை மறைந்த பின்னர் அச் செய்தி கிடைத்ததே என்பதுதான் டயானாவுக்கு வருத்தமாக இருந்தது.

நீண்ட காலம் மறைத்து வைத்திருந்த உண்மையை அப்போது வெளியிட்ட காரணத்தையும் டக்ளஸ் லிஸ்டர் கூறினார்: "அப்போது டயானாவின் தந்தையை ஓரம்கட்டிய அதே அரச குடும்பம், இப்பொழுது அவருடைய மகளையும் ஒதுக்கிவிடத் திட்டமிடுகிறது. அதனால்தான் அந்த உண்மையை வெளியிட எண்ணினேன்."

ஆனாலும் டயானாவின் வேண்டுகோள் காரணமாக அத் தகவலை உடனடியாக அவர் பகிரங்கப்படுத்தவில்லை.

1996ல்தான் ஒரு பத்திரிகை மூலம் உலகம் அறியக்கூடியதாக அத் தகவலை வெளியிட்டார் டக்ளஸ் லிஸ்டர்.

**புவனா**

பத்திரிகையில் அச் செய்தி வெளியாகி பரபரப்பாகப் பேசப்பட்டது. ஆனாலும் அரச குடும்பம் அச்செய்தி பற்றி கருத்து எதனை யும் வெளியிடவில்லை. மௌனம் அனுஷ்டித் தது.

## ஹெவிற் தாமதம்

மறுபடி ஒட்டவே முடியாத உறவுடன் தவித்துக் கொண்டிருந்த டயானா வளைகுடாப் போர் முடிந்து ஜேம்ஸ் ஹெவிற் திரும்பி வரும் நாளுக்காகக் காத்திருந்தார்.

டயானாதான் தினமும் ஹெவிற்றுக்கு கடிதங்களை எழுதிக் குவித்தாரே தவிர, ஹெவிற்றிடம் இருந்து கடிதங்கள் வருவது அரிது.

போர்க்களத்தில் நிற்பவர் கடிதம் எழுதுவது எப்படி என்று டயானா தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொள்வார்.

ஜேம்ஸ் ஹெவிற்றுக்கு டயானா கடிதங்களை அனுப்பும் செய்தியும் அரண்மனை வட்டாரங்கள் மூலம் எப்படியோ பத்திரிகைகளுக்கு கசிந்துவிட்டது.

சாள்ஸின் நண்பர்கள் வட்டாரம்தான் அத் தகவலை வெளியிட்டது என்பது காலம் கடந்துதான் டயானாவுக்கு தெரிந்தது.

டயானா நள்ளிரவு தாண்டியும் தூங்காமல் இருந்து கடிதம் எழுதுவது சாள்ஸுக்கு மட்டும்தான் தெரியும்.

இருவரும் தனியறைகளில் தூங்கினாலும் கூட டயானாவின் நடவடிக்கைகளை இடைக் கிடையே மோப்பம் பிடிக்க சாள்ஸ் தவறுவதில்லை.

டயானாவின் காதலை அம்பலப்படுத்தி



கமீலா பாக்கர்

னால் சாள்ஸ்மீது மக்களுக்குள்ள வெறுப்பு நீங்கும். அதேசமயம் சாள்ஸ்-டயானா இடையே ஒட்டுப்போட முடியாதளவுக்கு விரிசலும் ஏற்படும், என்று எதிர்பார்த்தார் கமீலா.

சாள்ஸின் நெருங்கிய நண்பர்களும் கமீலாவின் சொற்படி நடக்கக்கூடியவர்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் ஜேம்ஸ் ஹெவிற்றுக்காக டயானா ஏங்கிக் கொண்டிருக்கிறார் என்று செய்திகளை வெளியிட்டன.

இளவரசர் சாள்ஸ் இனிமேல் டயானாவின் சுகத்தையோ துக்கத்தையோ பகிர்ந்து கொள்ள முடியாது. அந்தளவுக்கு அவர்களது மனங்களும், கட்டில்களும் எட்ட முடியாத தூரத்திற்கு விலகிப் போய்விட்டன.

வளைகுடாப் போர் முடிந்து ஜேம்ஸ் ஹெவிற் திரும்பினார்.

டயானா ஜேம்ஸ் ஹெவிற்றை சந்திக்க ஓடோடிச் சென்றார்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ திருமதி லில்லிமலர் ஜோசேப்பு, எருக்கலம்பிட்டி, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





உன் கண்ணில் நீர் வழிந்தால்
-என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி!
என் கண்ணிற் பாவையன்றோ
-கண்ணம்மா
என்னுயிர் நின்ன தன்றோ?
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## மந்திரிகுமாரன்



ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவிடம் ஒரு புத்திசாலி அமைச்சர் இருந்தார். அந்த அமைச்சருக்கு வயதாகிவிட்டதால் அமைச்சர் பதவியிலிருந்து ஓய்வு பெற விரும்பினார்.

எனவே தனது இடத்திற்குத் தன் மகன் சிவகுமாரனை நியமிக்கும்படி ராஜாவிடம் கூறினார். அமைச்சர் பதவிக்கு சிவகுமாரன் பொருத்தமானவன் தானா? என்பதை சோதிக்க விரும்பினார் ராஜா.

மறுநாள் வேட்டைக்குப் போகும் போது சிவகுமாரனையும் அழைத்துக் கொண்டு சென்றார் ராஜா.

வீரர்களை முன்னே அனுப்பிவிட்டு ராஜாவும் மந்திரிகுமாரனான சிவகுமாரனும் உரையாடிக்கொண்டு நடந்து சென்றனர். இவர்கள் இருவரும் நடந்து செல்கையில் இவர்களுக்கு முன்னால் ஒரு மனிதர் சென்றுகொண்டிருந்தார்.

ராஜா சிவகுமாரனிடம், "சிவகுமாரா! அதோ நமக்கு முன்னால் செல்கிறாரே? அவர் பெயர், அவர் தொழில், சற்று முன்னர் அவர் என்ன சாப்பிட்டார் என்று கூறுவாயா?" என்று கேட்டார்.

சிவகுமாரனும் சரியென்று சொல்ல, பெரிய முள்ளொன்று ராஜாவின் பாதரட்சையையும் மீறி அவரது காலில் தைத்து விட்டது.

உடனே ராஜா, "சிவகுமாரா! காலில் முள் தைத்துவிட்டது. உடனே எடுத்து விடு!" என்று சத்தமாகச் சொன்னார்.

சிவகுமாரனும் ராஜாவின் காலில் தைத்த முள்ளை எடுத்து விட்டு,

"அரசே! நமக்கு முன்னால் செல்கிறாரே, அவர் பெயர் சிவகுமாரன். அவரது தொழில் தச்சுவேலை. அவர் சற்று நேரத்திற்கு முன் இனிப்புப் பண்டம் ஒன்றைச் சாப்பிட்டுள்ளார். அதுவும் தேன்தான் சாப்பிட்டுள்ளார்," என்று சொன்னான்.

உடனே ராஜா முன்னால் சென்று கொண்டிருந்தவரைக் கைதட்டிக் கூப்பிட்டார். அந்த மனிதர் ராஜாவிடம் வந்தார். ராஜா அவரிடம்,

"உன் பெயர்? என்ன தொழில் செய்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த மனிதர், "என் பெயர் சிவகுமார். நான் தச்சுவேலை செய்து வருகிறேன்!" என்று கூறினார்.

"சரி, சற்று முன் நீ என்ன சாப்பிட்டாய்?" என்று மறுபடி கேள்வி கேட்டார் ராஜா.

"நான் வரும் வழியில் தேன் சாப்பிட்டேன்!" என்று சொன்னார் அந்த மனிதர். ராஜா அந்த மனிதரைப் போகச் சொல்லி விட்டு சிவகுமாரனிடம்,

"சிவகுமாரா! எப்படி இவ்வளவு சரியாகப் பதில் சொன்னாய்?" என்று கேட்டார்.

"அரசே! 'சிவகுமாரா காலில் முள் தைத்துவிட்டது. எடுத்துவிடு' என்று சத்தமாகக் கூப்பிடும்போது அவரும் திரும்பிப் பார்த்தார். எனவே அவரது பெயர் சிவகுமாரன் என்று அறிந்து கொண்டேன்.

அவர் போகும்போது, வழியில் தென்படும் மரங்களை எல்லாம் பார்த்துக் கொண்டே சென்றதால், அவர் தொழில் தச்சுவேலை என்பதைப் புரிந்து கொண்டேன்.

அவரது வாயிலும், கைகளிலும் இலையான் மொய்த்துக் கொண்டே இருந்ததால் அவர் இனிப்புப் பண்டம் ஒன்றைச் சாப்பிட்டிருக்க வேண்டும். இந்த வழியில் பழமரங்கள் எதுவும் இல்லாததால், தேன்தான் சாப்பிட்டிருக்கவேண்டும் எனத் தெரிந்து கொண்டேன்" என்று சொன்னான்.

மந்திரிகுமாரனின் மதிநுட்பத்தை வியந்த ராஜா அவனைப் பாராட்டி மந்திரியாக நியமித்தார்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



**வின்பிட்டா பறவை:**
அவுஸ்திரேலிய நாட்டில் உள்ள விஸ்பிட்டா பறவை மஞ்சள், பச்சை, சிவப்பு, செம்மஞ்சள், வெள்ளை, கறுப்பு, இளஞ்சிவப்பு, நீலம், கபிலம் ஆகிய 9 வர்ணங்களை உடையது.

**ஆட்டுத் தாடி:**
கோட்ஸ் பியர்ட் (GOATS' BEARD-ஆட்டுத்தாடி) என்ற செடியில் பூக்கள் கொத்துக்கொத்தாக மலரும். ஒவ்வொரு கொத்திலும் 10 ஆயிரம் மொட்டுக்கள் இருக்கும்.



**கடிகாரவாள்:**
17ம் நூற்றாண்டில் ஜெர்மனிய சிற்றரசர்கள் பயன்படுத்திய பெரும்பாலான வாள்களின் பிடிகளில் கடிகாரம் பொருத்தப் பட்டிருந்தது.





**அன்ட்ரீஸ் முல்லர்:**
1632-1694களில் வாழ்ந்த அன்ட்ரீஸ் முல்லர் என்ற ஜெர்மனியர், தனது 16வது வயதிலேயே கிரேக்க, இலத்தீன் மற்றும் ஹீப்ரு ஆகிய மொழிகளில் கவிதை புனையும் ஆற்றல் பெற்றார்.

## வாரம் ஒரு நாடு

## ஐவரி கோஸ்ட்

**தலைநகர்** – அபிட்ஜான்
**பரப்பு** – 3,22,462 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை** – 1.43 கோடி
**மொழி** – ஃபிரெஞ்சு, பழங்குடி மொழி
**சமயம்** – இஸ்லாம், கிறிஸ்தவம், நாட்டுப்புற நம்பிக்கைகள்
**எழுத்தறிவு** – 45%
**நாணயம்** – ஃபிராங்க்
**தனிநபர் வருமானம்** – 800 டொலர்

**அமைவிடம்:**
மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. இதன் தென்பகுதி கினியா வளைகுடாவில் கடற்கரைப்பகுதி கொண்டுள்ளது. இதன் மேற்கில் லைபீரியா மற்றும் கினியாவும்: வடக்கில் மாலி மற்றும் புர்கினோ பாஸோவும்: கிழக்கில் கானாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.



**வரலாறு:**
1960ல் சுதந்திரம் பெற்றது. கூட்டுக் கட்சி ஆட்சி நடைபெறுகிறது. 1985ல் ஐவரி கோஸ்ட்டின் பெயர் கோட்-டி-இவோயர் என்று ஃபிரெஞ்சு மொழியில் மாற்றப்பட்டது.

**பொருளாதாரம்:**
கொக்கோ முக்கிய விளைபொருள். உலகிலேயே மிக அதிகமான கொக்கோ விளைவது இங்குதான். தொழில் துறைகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.04.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 241
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 239

பரிசுக்குரியவர்:
எம். பெரோஸ் கான்,
நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம்.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கே. டினேஷ்கரன், புனித அந்தோனியார் மத்திய கல்லூரி, வத்தளை. | கே. மகேஸ்வரன், மட்/இந்துக்கல்லூரி, வாழைச்சேனை. |
| எஸ். மைதிலி, சரஸ்வதி தேசிய பாடசாலை, பதுளை. | எல். முகமட் றில்வான், ஸம்ஸ் மத்திய கல்லூரி, வாழைச்சேனை. |
| பி. அனோஜன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4. | ரி. அனுஷா, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா. |
| எஸ். தேவதர்ஷினி, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருமலை. | எஸ். பஸ்மியா, ஹேனமுல்லை, பாணந்துறை. |
| ஷியானி கபூர், தாருஸ்ஸலாம் முஸ்லிம் மகாவித்தியாலயம், முந்தல். | எம். அமிர்தர்ஷினி, தமிழ் மகளிர் வித்தியாலயம், பதுளை. |

## ஏன் தெரியுமா?



போலியாக வருத்தப்பட்டு ஒருவர் கண்ணீர் வடித்தால், அவரை 'முதலைக் கண்ணீர் வடிக்கிறார்' என்று கூறுவார்கள். இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன தெரியுமா?

முதலை நீரில் வாழும் ஊர்வனவற்றைச் சேர்ந்தது. அதன் வியர்வை நம்மைப் போல் உடலின் தோல் வழியாக வெளியேறாமல் கண்வழியாக வெளியேறுகிறது. முதலையின் கண்களில் இருந்து துளித்துளியாக வியர்வை வெளியேறுவது, முதலை, கண்ணீர் வடிப்பது போலத் தோன்றும். ஆனால் அது அழுவதில்லை. முதலையின் கண்களில் இருந்து வரும் வியர்வை கண்ணீர் அல்ல.

அதனால்தான் போலியாக அழுபவர்களை முதலைக் கண்ணீர் வடிக்கிறார் என்று கூறுவார்கள். பாம்பு, ஆமை போன்ற ஊர்வனவும் முதலையைப்போல் கண்களின் வழியே வியர்வையே வெளியேற்றுகின்றன.

## பொதுச் செயலாளர்கள்



ஐக்கிய நாடுகள் சபையில் 185 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 1945ம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கிய ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராக இதுவரை 7 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது ஐ.நா.சபையின் பொதுச் செயலாளராக இருக்கும் கொஃபி அன்னன் கானா நாட்டைச் சேர்ந்தவர். இதுவரை பொதுச் செயலாளர்களாக இருந்தவர்களின் பட்டியல் வருமாறு:

1. நோர்வே நாட்டைச் சேர்ந்த ட்ரிக் லீ (1946-53)
2. ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ரொக் ஹமாஷ்க் ஜோல்ட் (1953-62)
3. பர்மா நாட்டைச் சேர்ந்த ஊதாண்ட் (1962-71)
4. ஒஸ்ரியா நாட்டைச் சேர்ந்த கேர்ட் வோல்மியம் (1971-81)
5. பெரு நாட்டைச் சேர்ந்த ஜவீர் பெரஸ் (1981-91)
6. எகிப்து நாட்டைச் சேர்ந்த பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி (1991-1996)

## புக்கர் பரிசு

புக்கர் பரிசு என்றால் என்னவென்று தெரியுமா உங்களுக்கு? ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஐரோப்பாக் கண்டத்தில் வெளியிடப்படும் சிறந்த இலக்கியப் புத்தகத்திற்கு வழங்கப்படும் பரிசே புக்கர் பரிசு ஆகும். இந்தப் பரிசு 1968ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் பரிசுத் தொகை 20 ஆயிரம் அமெரிக்க டொலர் ஆகும்.

## கடல் தகவல்கள்



★ பூமியின் பரப்பளவில் கடல்கள் ஆக்கிரமித்துள்ள பரப்பளவு 71 சதவீதமாகும்.

★ உலகிலேயே மிகப் பெரிய கடல் பசிபிக் பெருங்கடல். இரண்டாவது அட்லாண்டிக் பெருங்கடல் மூன்றாவது இந்தியப் பெருங்கடல்.

★ உலகிலேயே மிகவும் ஆழமான பெருங்கடலும் பசிபிக் பெருங்கடலே.

★ மிக அதிகளவு உப்பாகக் காணப்படும் கடல் சாக்கடல்.

★ சுற்றிவர நிலத்தால் சூழப்பட்டுள்ள பெருங்கடல் கஸ்பியன் கடல்.

★ உலகிலேயே மிகப் பெரிய அலைகள் தோன்றும் கடல் ஃபன்டி விரிகுடாவில் உள்ளது.

★ கடலைப் பற்றிய ஆராய்ச்சியின் பெயர் ஓஷனோகிரஃபி (OCEANOGRAPHY).

## விந்தைச் செய்திகள்

* உலக அதிசயங்களில் ஒன்றான பாரிஸில் உள்ள இஃபில் கோபுரத்தில் உள்ள மொத்த ஆணிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 25 இலட்சம்.

* அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தின், லிபர்ட்டி தீவில் அமைந்துள்ள சுதந்திரச் சிலையின் ஆட்காட்டி விரலின் உயரம் என்ன தெரியுமா? 8 அடி.

* உலகிலேயே உயரமான கட்டடங்களில் முக்கியமான ஒன்று சீயர்ஸ் டவர். இக்கட்டடத்தில் உள்ள ஜன்னல்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? 16 ஆயிரம்.

* சேர். கில்பர்ட் ஸ்கொட் என்ற புகழ்பெற்ற பிரிட்டிஷ் கட்டட நிபுணர் 1811-1878 காலப்பகுதியில் வாழ்ந்தவர். இவர் தமது வாழ்நாளில் 28 தேவாலயங்கள், 474 வணக்கத்தலங்கள், 23 மடங்கள், 26 பாடசாலைகள், 16 பல்கலைக்கழகங்கள், 58 நினைவுச் சின்னங்கள், 27 பொது உபயோகக் கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டினார்.

## புத்தகச்செய்திகள்

* உலகின் அனேக மொழிகளில் அச்சிடப்பட்ட ஒரே புத்தகம் கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிள் ஆகும். சுருக்கெழுத்து முறையில் அச்சிடப்பட்ட ஒரே மத நூல் என்ற பெருமையும் இதற்குண்டு.
* உலகின் மிகப் பழமையான புத்தகம் 'ஹிராக சூத்ரா.' சமஸ்கிருத புத்தகமான இது பின்னர் சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
* உலகின் மிகப் பெரிய புத்தகம் 'சுப்பர் புக்.' இதன் அகலம் 270 சென்டிமீட்டர். நீளம் 300 சென்டிமீட்டர். நிறை 252 கிலோகிராம். 1976ம் ஆண்டு கொலராடோவில் இது பிரசுரமானது.
* உலகின் மிகச் சிறிய புத்தகம் 'ஓல்ட் கிங் கோல்'. 1985ல் வெளியான இது குழந்தைகளுக்கான கதைப் புத்தகமாகும். இப்புத்தகத்தின் பக்கங்களை ஊசியின் உதவியால்தான் புரட்ட முடியும்.
* ஆபிரிக்காவைச் சேர்ந்த மேரி பவுல்க்னெர் என்பவரே அதிக நாவல்களை எழுதிய பெருமைக்குரிய நாவலாசிரியர். காத்லீன் லின்ட்சே என்ற பெயரில் பிரபலமான இவர், இதுவரை 904 நாவல்களை எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# திக் திக் திக் 07

**ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:**

# நந்தினி 440 வோல்ட்

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

**கோ**வை மாநகராட்சி நந்தினியையும் பாரியையும் இனிதாய் வரவேற்ற போது மணி 12-05. கோவையின் வானவீதி மப்பும் மந்தாரமுமாய் இருந்தது.

"பாண்டுரங்க மாமா வீட்ல சாப்பாட்டை முடிச்சுக்கிட்டு ஒரு மணிக்குள்ளே ஏர்ப்போர்ட் போயாகணும்... முடியுங்களா....?" நந்தினி கேட்டாள்.

"போயிரலாம்...."– லேசாய் கண்ணயர்ந்தபடியே பாரி சொன்னான்.

"கிருஷ்ணன்... கொஞ்சம் வேகமா போயேன்... பாண்டுரங்க மாமாவோட வீடு தெரியுமில்ல உனக்கு?"

"தெரியும்மா..."

"கொஞ்சம் வேகமா போ..."

கிருஷ்ணன் போனான்.

குறிஞ்சி ஏரி ரோட்டைச் சுற்றிக் கொண்டு– போத்தனூர் பிரிவு ரோட்டை வெட்டியபடி கார் பாய்ந்தது. கோவை நகரத்தின் போக்குவரத்து அங்கிருந்தே சுறுசுறுப்பாய் ஆரம்பித்திருக்க– கிருஷ்ணன் அதைப்பொருட்படுத்தாமல் ஆக்ஸிலேட்டரை எண்பதில் அழுத்தினான். நந்தினி பரபரத்தாள்.

"கிருஷணன்.. கொஞ்சம் வேகம்ன்னா இப்படியா...? ஸ்லோ பண்ணு!"

அவள் சொல்லச் சொல்லவே– கார் சின்னதாய் ஜர்க் ஆகிக் குலுங்க– பாலன்ஸ் தடுமாறியது.

எதிரே பீறிட்டு வந்த லாரியை சிரமப்பட்டு தவிர்த்தான் கிருஷ்ணன். பாரி பதற்றக் குரலில் கத்தினான். "கிருஷ்ணன்! காரை ஓரமா நிறுத்து!"

கிருஷ்ணன் பிரேக்கில் காலை பதிக்க– அது எந்த விதமான பிடிப்பும் இல்லாமல், உள்ளே போய் வர– கிருஷ்ணனுக்கு வியர்த்தது.

"ஸ...ஸார்....பிரேக் பெய்லியர்...!"

"என்ன சொல்றே...?"

"பிரேக்கை அழுத்தினா வண்டி நிக்கமாட்டேங்குது ஸார்...."

பாரியும் நந்தினியும் திகிலோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள். கார் இராட்சஸ வேகத்தில் பிய்த்துக் கொண்டு போனது. எதிரே டவுன் பஸ்களும் லாரிகளும் கொசுருக்கு ஸ்கூட்டர்களும் வரிசையாய் வந்து கொண்டிருந்தன. காற்று காரை அசுர வேகத்தில் சீவியது.

"கிருஷ்ணன்! ஏதாவது பண்ணி வண்டியை நிறுத்து!"– பாரி கத்த, ஏராளமான வியர்வையோடு திரும்பிப் பார்த்த கிருஷ்ணன், "என்னால முடியலை ஸார்," என்றான் அழுகிற குரலில்– "வண்டி கண்ட்ரோல்ல இல்ல ஸார்... எதிலாவது மோதித்தான் நிறுத்தனும்..." தொடர்ந்து சொன்னான்.

"எப்படியாவது நிறுத்து..."

"அந்த ஸ்பீட்ல மோதி நிறுத்தினா வண்டி ஸ்மாஷ் ஆயிடும் ஸார்... உயிர்ச்சேதம் தவிர்க்க முடியாததாயிடும்..."

"பரவாயில்லை... கார் சிட்டிக்குள்ளே போயிட்டா... நிலைமை மோசமாயிடும்.... என்ன நந்தினி... நீ என்ன சொல்றே...?" கேட்டுக்கொண்டே பக்கவாட்டில் திரும்பிப் பார்த்த பாரி அதிர்ந்து போனான்.

நந்தினி பின்சீட்டுக்கு சாய்ந்து மயக்கமாகியிருந்தாள்.

தார் பிய்த்துக் கொண்டு விர்ரென்று போக, எதிரே வந்த டவுன் பஸ் காரின் வேகத்தைக் கண்டு ஒதுங்கிப்போனது.

"கி...கி...கிருஷ்ணன்..."

"ஸ...ஸார்..."

"ரோட்டுக்கு வலது பக்கமா ஒரு மண்மேடு மாதிரி தெரியுதே... அதுமேல காரை மோதி நிறுத்து..."

"ஸார்!"

"தைரியமா. மோதி நிறுத்து... ஒன்னும் ஆகாது...."

கிருஷ்ணன் காரை ஒடித்து– எதிரே வந்த ஒரு ஆட்டோவைத் தவிர்த்து– ரோட்டோரமாய்க் கொட்டி வைத்திருந்த மண்மேட்டை நோக்கி வேகமாய்ப் போனான்.

'த்த்த்ட்ட்ட்....'

காரின் பானெட் மூக்கு மண்மேட்டைத் தகர்த்து– முடியாமல் ஒரு உயிருள்ள ஜந்து மாதிரி பக்கவாட்டில் புரண்டு மல்லாந்தது.



காரின் நான்கு சக்கரங்களும் இயக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்துக் கொண்டு மெதுவாய்ச் சுழன்றன.

-000-

**வீ**ரபத்ரன் பசித்த புலி மாதிரி அந்த சின்ன அறைக்குள் உலாவினான். கையில் மாட்டியிருந்த கைவிலங்கைப் பற்களால் கடித்துக் கழற்ற முயன்று– உதட்டோரம் இரத்தத்தை வழிய விட்டான். சுவரை 'தொம்'மென்று கைகளால் மொத்தினான். "ரெண்டு பேரையும் வெட்டிப் போடாமே நான் ஓயமாட்டேண்டா! துண்டு துண்டா வெட்டுவேன்..!" என்று தொண்டை நாளங்கள் அதிர அதிரக் கத்தினான்.

பூட்டியிருந்த அறைக்கு வெளியே ஹாஸ்பிடலின் வராந்தாவில்– நாற்காலிகளில் நிரம்பியிருந்த டாக்டர் குணசீலனும் இன்ஸ்பெக்டர் நவநீத கிருஷ்ணனும், அந்தச் சத்தங்களை உன்னிப்பாய்க் கேட்டுவிட்டு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

டாக்டர் குணசீலன் தன் அகலமான முன் நெற்றியைத் தடவிக்கொண்டே கேட்டார்.

"பேஷண்ட்டோட பேர் என்னான்னு சொன்னீங்க இன்ஸ்பெக்டர்?"

"வீரபத்ரன்."

"சொந்த ஊரே நரசிம்ம நாயக்கன் பாளையம் தானா?"

"ஆமா....!"

"வீரபத்ரனோட நடவடிக்கைகளைப் பார்க்கும்போது– மத்தவங்களுக்கு அவன் ஒரு பைத்தியம் மாதிரி தெரியலாம்... ஆனா.... ஹி ஈஸ் நார்மல்... மனசுக்குள்ளே கொலை வெறி நிரம்பியிருக்கு... அவங்களைக் கொல்லணும் கொல்லணும்ங்கிற ஆத்திரம் அவன் உடம்புல ஓடற இரத்தத்துல கலந்திருக்கு. அவங்களை அவன் கொலை செஞ்சாத்தான் அவனோட வெறியே அடங்கும்... இந்த வெறி சப்சைட் ஆகணும்ன்னா... அடிக்கடி மயக்க ஊசி போட்டு அவனைத் தூங்க வைக்கணும்...."

"ப்ளீஸ் டாக்டர்... எதையாவது பண்ணி அவனை நார்மலுக்கு கொண்டு வாங்க... ஸ்டேஷன் லாக்-அப்புல அவனை வெச்சிட்டிருக்கவே முடியலை..."

"ரெண்டே நாள்... பொறுங்க... இவனைப் பசுமாடு மாதிரி மாத்திடறேன்..."

"டாக்டர்! இவனுக்கு நிச்சயமா மென்ட்டல் டிஸ் ஆர்டர் இல்லையே?"

"சுத்தமா இல்லை..."

"பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆக்ட் பண்றானா?"

"அப்படியிருந்தா... அவனை டயாக்னைஸ் பண்ணினப்பவே... எனக்குத் தெரிஞ்சிருக்கும்... இன்ஸ்பெக்டர்! நீங்க வீரபத்ரனைப் பற்றிக் கவலைப்படாதீங்க. அவனுடைய மனசுக்குள்ளே உறைஞ்சு போயிருக்கிற அந்த கொலை வெறியைக் கொஞ்சம் கொஞ்சமா ரிலீப் பண்ணிடலாம்..."

"தாங்க்யூ டாக்டர்."

இன்ஸ்பெக்டர், பக்கத்திலிருந்த தொப்பியைத் தலைக்கு கொடுத்துக் கொண்டே எழுந்தார்.

"நான் சாய்ந்தரமா வந்து பார்க்கிறேன் டாக்டர்..."

"ப்ளீஸ் கம்..."

டாக்டர் குணசீலன் இன்ஸ்பெக்டரின் கையைப் பற்றிக் குலுக்கி வழியனுப்பிவிட்டு தன் கையிலிருந்த வீரபத்ரனின் 'டயாக்னைஸ் ரிப்போர்ட்'டைப் புரட்ட ஆரம்பித்தார். கடந்த ஒரு மணி நேரமாய் வீரபத்ரனை மருத்துவ ரீதியாய் அலசினதில்– அவன் எல்லாவற்றிலும் துல்லியமாய் இருந்தான். நிச்சயமாய்ப் பைத்தியம் கிடையாது. உடம்பிலிருக்கும் எல்லா நரம்புகளுமே கொலை வெறியில் விரைப்பேறி– மூளைக்கு ஓயாமல் 'அவர்களை வெட்டு! அவர்களை வெட்டு!' என்று சொல்லிக் கொடுக்கிறது. இரத்தம் நிஜமாகவே உஷ்ணமாகிப் பாய்கிறது.

"டாக்டர்...."

பதற்றமான குரல் கேட்டு நிமிர்ந்தார் டாக்டர் குணசீலன்.

ஐ.சி.யூனிட் ஹெட் நர்ஸ் மரிய புஷ்பம், முகத்தில் வழியும் வியர்வையோடு நின்றிருந்தாள்.

"என்ன சிஸ்டர்?"

"ஐ.சி.யூனிட்டுக்கு கேஸ் ஒண்ணு வந்திருக்கு டாக்டர்..."

நர்ஸின் பதற்றம் டாக்டரையும் தொற்றிக் கொண்டது. பைலை எடுத்து மேஜையின் மேல் போட்டுவிட்டு– அவளோடு இணைந்து நடந்தார். மெல்லிய குரலில் பேசிக்கொண்டே நடந்தார்.

"கேஸ்... ஆணா, பெண்ணா?"

"பெண்"

"ஏஜ்..?"

"இருபது இருக்கலாம் டாக்டர்..."

"பேர்?"

"நந்தினி."

"அந்தப் பொண்ணுக்கு என்ன...?"

"கார் ஆக்ஸிடெண்ட்..."

"இன்ஜீரிஸ்...?"

"ஹெட் இன்ஜீரிஸ்..."

"உனக்கு என்ன தோணுது...? கேஸ் போயிடுமா...?"

"அப்படித்தான் தோணுது டாக்டர். ஃபேஸ் பூராவும் இரத்தக் களரியா தெரியுது... கண்ணாடித்துண்டு முகம் நிறைய குத்தியிருக்கு..."

வராந்தா முடிந்து போயிருக்க– எதிரே ஐ.சி. யூனிட் தெரிந்தது. ஒரு சின்ன கும்பலுக்கு மத்தியில்– பழக்கமான கான்ஸ்டபிள் முகங்கள். டாக்டர் குணசீலனைப் பார்த்ததும் நெற்றியில் சல்யூட் பதித்தார்கள். கோரஸாய் சொன்னார்கள்.

"உக்கடம் பக்கத்துல நடந்த ஆக்ஸிடெண்ட் ஸார்..."

"எத்தனை பேர்...?"

"மூணு பேர் வந்திருக்காங்க... டிரைவர், ஹஸ்பெண்ட் அண்ட் ஒய்ப் டிரைவர்க்கும் ஹஸ்பெண்டுக்கும் சொற்ப காயம். அந்தப் பெண்ணுக்குத்தான் மேஜர் இன்ஜீரிஸ்... இன்ஸ்பெக்டர் இப்போ வர்றேன்னு சொன்னார் டாக்டர்..."

டாக்டர் குணசீலன் தலையாட்டிக் கொண்டே ஐ.சி. யூனிட்டுக்குள் நுழைந்தார். முகப்பில் சிவப்பு விளக்கு எரிய– கதவு சாத்திக் கொண்டது.

மேஜையின் மேல் படுக்க வைத்திருந்த நந்தினியை நோக்கி நடந்தார் டாக்டர். உள்ளுக்குள் அவருடைய இதயம் ஒருமுறை உதறிக் கொண்டது.

நந்தினியின் தலையும் முகமும்–

சிவப்பு பெயிண்ட் அடித்த மாதிரியான சைஸில்– செவேலென்று தெரிய– அவைகளுக்கு மத்தியில்– கண்ணாடிச் சில்கள் ஏராளமாய்ப் பொதிந்து தெரிந்தன.

(தொடர்ந்து வரும்)

---

# அதே பாதையில் புதிய சந்ததி....

**நீதிக்கான போராட்டம் ஒரே இரவில் வெற்றி பெற்றுவிடுவதில்லை. தோல்விகள், பின்னடைவுகள், இழப்புக்கள், துன்பங்கள் என்பவற்றை தாண்டித்தான் வெற்றி பெறுகின்றன. கியூபாப் புரட்சியும் பல தோல்விகளின் பின்னரே மாபெரும் வெற்றி பெற்றது. இது கியூபா கெரில்லாப்போரில் ஒரு கட்டம்.......**

**கி**ரான்மா ஒரு மணல் திட்டில் ஒதுங்கியது. அந்தச்சிறு கப்பலில் இருந்து ஒரு படகு கடல் நீரில் இறக்கப்பட்டது. இறக்கப்பட்டதும் அந்தப் படகு தண்ணீரில் மூழ்கி விட்டது. வேறு வழியில்லை. கழுத்தளவு நீரில் நடந்துதான் தரையை அடைய முடியும். கொஞ்சம் உணவும், ஆயுதங்களும் எடுத்துக்கொண்டு அவர்கள் கடலில் இறங்கித்தான் ஆக வேண்டும்.

அப்போது சர்வாதிகாரி பாடிஸ்டாவின் ரோந்துப் படையும், ஆகாய விமானமும் திடீரென்று அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டன. பாடிஸ்டாவின் படைகள், பிடலின் ஆட்கள் மேல் மரணத் தாக்குதல் தொடுத்தன. "இது ஒரு கப்பல் விபத்து!" என்று பின்னாளில் ரால் காஸ்ட்ரோ இந்நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்.

ஈரமும் ஆளை அமிழ்த்தும் களியும், சகதியும் நிறைந்த கடற்கரையில் நடப்பதற்கு புரட்சிக்காரர்களுக்கு நீண்ட நேரம் ஆயிற்று. 1961ல் இந்த இடத்தைப் பார்வையிட்ட வான்டா வாஸிலேவ்கா தன்னுடைய 'விடுதலைத் தீவுகள்' என்ற நூலில் எழுதுகிறார்: "எங்கும் ஒரே சேறுமயம். அவற்றில் புதர்ச்செடிகள் வளர்ந்திருக்கின்றன.

இளஞ்சிவப்பு நிறமான, ஈரப்பசையுள்ள சகதியின் மேல் வேர்களும் புதர்ச்செடிகளின் கிளைகளும் ஒன்றோடொன்று பின்னிச் சிக்குண்டு எங்கும் பரந்து கிடக்கின்றன. புதர்ச்செடிகளின் கிளைகளில் கொழுத்த பளபளப்பான இலைகள் நிறைந்திருக்கின்றன. எளிதாக இவற்றை விலக்கிக்கொண்டு முன்னே போகமுடியாது; இவை தொட்டதும் வளையக்கூடிய கிளைகள் அல்ல. விலக்க முடியாத அளவுக்கு இடைவெளியின்றி இந்தக் கிளைகள் இறுக்கமாகப் பின்னிக் கொண்டிருக்கின்றன.

இந்தச் செடிகள் களியில் ஆழவேரூன்றியிருக்கின்றன. சில இடங்களில் மண் உறுதியாய் இருப்பது போல் தோன்றுகிறது. இறுகப் பிணைந்த புதர்ச் செடிகளின் கிளைகளுக்கிடையே நீர் தேங்கிச் சிறு ஏரிபோல் சில இடங்களில் காட்சி அளிக்கிறது. ஆனால் அவற்றின் கீழே, சிவந்த நிறமுடைய சகதிதான் இருக்கிறது."

இந்த அடுக்கடுக்கான முட்கம்பி வேலிகள் போன்ற தடையைத் தாண்டிவர புரட்சி வீரர்களுக்கு இராட்சத பலம் தேவைப்பட்டது. ஆனால் அவர்களோ களைத்துப்போய், பசியால் வாடி, தாகத்தால் தவித்துக்கொண்டிருந்தார்கள். தான் யுத்தத்தில் கலந்து கொண்டு 1941ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் சேறு நிரம்பியிருந்த சாலைகள் வழியே பின்வாங்கிய அனுபவம் இருந்ததால்தான் கியூபா நாட்டில் சகதியும் புதர்களும் நிறைந்த கடற்கரையைக் கண்ணால் கண்டதும் இதைக் கடப்பதற்குப் புரட்சிக்காரர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்று ஊகித்து உணர முடிந்தது என்று வாஸிலெவ்ஸ்கா குறிப்பிட்டுள்ளார்.

தனது அனுபவத்திலிருந்து, கிரான்மாவிலிருந்து இறங்கியவர்கள் பட்ட அவஸ்தைகளையும் அவர்களில் சிலர் இந்தச் சேற்றில் 'சிக்கி இறந்ததையும் அவரால் ஊகித்து அறிந்திருக்க முடியும்.

வரலாறு மீண்டும் திரும்புகிறது. அறுபதாண்டுகளுக்கு முன் இந்த இடத்திற்கு அருகிலுள்ள வேறொரு இடத்திலிருந்துதான், வீரம் பொருந்திய மாம்பிசெஸ் எனப்படும் கியூபன் தேசபக்தர்கள் போராடினர். கியூபாவின் விடுதலைக்காக அவர்கள் நடத்திய அந்தப் போராட்டத்திற்குத் துணிச்சல் மிக்க ஜெனரல் அன்டனியோ மாசியோ என்பவர் தலைமை தாங்கினார். இந்தப் போராட்டத்தில் சுயவிருப்பத்தின் பேரில் கலந்துகொண்டு போர் வீரராகப் பணியாற்றிய பியோடர் ஸ்ட்ரெல்ட்ஸோவ் என்ற ரஷ்யர், வெஸ்ட்னிக் எவ்ரோபி என்ற நூலில் தனது தோழர்களைப் பற்றி எழுதுகிறார்:

"பாறைகள் அவர்களது செருப்பணியாத பாதங்களைக் கீறிப் புண்ணாக்கி இருந்தன. அவர்கள் தங்கள் முதுகுகளில் சுமந்து சென்ற கனத்த பைகள் உராய்ந்து, உராய்ந்து அவர்களது முதுகுத் தோலினைப் பிய்த்திருந்தது. கடுமையான காய்ச்சலோடு வந்த அவர்கள் சூடான பாறைகள் மீது விழுந்து வாய் திறவாமல் முக்கி முனகிக் கொண்டிருந்தார்கள். ஆரோக்கியமான ஒரு சிலர் மட்டும் தங்கள் முதுகுகளில் தாய்நாட்டின் சுதந்திரத்தைச் சுமந்துகொண்டு தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார்கள். இந்தப் பயணத்தின் போது, அதாவது நான்கு ஐந்து நாட்களாக அவர்கள் எதுவுமே சாப்பிடவில்லை. ஆனாலும்கூட, அவர்கள் ஒருபோதும் புலம்பியதில்லை; வருத்தப்பட்டதில்லை. அந்த அளவுக்கு அந்தப் போர் வீரர்களிடையே தேசபக்திப் பெருவெள்ளம் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருந்தது."

இப்போது, அந்த நாயகர்களின் பேரன்களும், கொள்ளுப் பேரன்களும் தாய்நாட்டைப் புதிய எஜமானர்களிடமிருந்து விடுவிக்கும் பொருட்டு தங்களது மூதாதையர் கடந்த அதே பாதையை– துன்பங்கள் மலிந்த தியாகப் பாதையை, உயிரைப் பணயம் வைத்துக் கடக்க வேண்டிய பாதையை– கடந்து கொண்டிருந்தார்கள்.

பாதையில் கிடைக்கின்ற வழி காட்டிகளை நம்பி, இரண்டு நாட்களாக சேகுவேராவின் ஆட்கள், தங்களைத் தேடும் எதிரியின் விமானங்களிலிருந்து தப்பிக்க முயன்றார்கள்.

சேகுவேரா எழுதுகிறார்:

"டிசம்பர் 4ம் திகதி இரவு முழுவதும் நாங்கள் ஒரு கரும்புத் தோட்டத்தின் ஊடே நடந்துகொண்டிருந்தோம்.



கரும்பு களைத் தின்று நாங்கள் எங்களது பசியையும், தாகத்தையும் தணித்துக் கொண்டோம். ஆனால் கரும்புச் சக்கைகளைப் பாதை நெடுகிலும் துப்பி வந்தோம். பாடிஸ்டாவின் படைகள் சக்கைகளை வைத்தே எங்களைப் பின் தொடரலாம். ஆகவே அவ்வாறு அசட்டையாக நாங்கள் நடந்து கொண்டது தவறு.

ஆனால், எங்களைக் காட்டிக்கொடுத்தது கரும்புச் சக்கைகள் அல்ல; எங்களுக்கு வழி சொன்ன ஒரு வழிகாட்டிதான் எங்களைக் காட்டிக்கொடுத்தான் என்பது பின்னர் தெரியவந்தது. நாங்கள் இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு முதல்நாள் மாலையில் தான் அவனை வெளியே அனுப்பி வைத்தோம். அவன் எங்களைத் தேடிக் கொண்டிருந்த பாடிஸ்டாவின் ஆட்களை நேரே நாங்கள் இருக்குமிடத்திற்குக்கூட்டி வந்து விட்டான். நாங்கள் பலமுறை இவ்விதமான தவறுகளைச் செய்தோம். இந்த அனுபவங்களிலிருந்துதான் நாங்கள் எவ்வளவு எச்சரிக்கையாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டோம்.

காலையில் நாங்கள் முற்றிலுமாகக் களைத்திருந்தோம். ஆகவே அலெகிரியா டி பியோ என்ற இடத்தில் இருந்த கரும்பாலை ஒன்றில் சற்று நேரத்திற்கு ஓய்வெடுப்பது என்று தீர்மானித்தோம். அந்த இடத்தைச் சென்று அடைவதற்குள்ளேயே எங்களைத் தூக்கம் ஆட்கொண்டது.

மதியம் நெருங்குகிறபோது, தலைக்கு மேலே விமானங்கள் கர்ஜித்தன. கஷ்டமான பாதையில் நடந்து வந்ததால் களைத்துப் போயிருந்த நாங்கள் விமானங்கள் பறப்பதைச் சரியாகக் கவனிக்கவில்லை.

நான் குழுவின் மருத்துவன் ஆதலால், பாதங்களில் காயம் பட்டவர்களுக்கும் சதை வரை முட்களால் கீறப்பட்டவர்களுக்கும் முதலுதவி செய்தேன். அன்று, நான் கடைசியாக ஹம்பர்ட்டோ லமோட்டே என்பவருக்கு மருத்துவம் செய்தேன் என்பது எனக்கு இன்றும் நினைவில் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com






"அம்மா, என்ன பேசற நீ?" பதறிப் போனாள் மதுமிதா.

தன் அம்மா மிகுந்த ஆத்திரத்துடன் இருப்பாள் என்று நினைத்தால், ஏதோ எல்லாமே உண்மை போல நாடகத்தனமாகப் பேசியது அதிர்ச்சியாகவும் இருந்தது. அதேசமயம் இந்தப் பத்திரிகை வில்லங்கத்தை ஆரம்பித்திருப்பதே அம்மாதான் என்கிற தன் சந்தேகம் ஊர்ஜிதம் ஆகியது.

"மதுமிதா, நீ எதுவும் அப்செட் ஆகாதே! மேற்கொண்டு அந்த வெங்கடரெட்டி அதிகமா எதுவும் பேசாம இருக்கச் செய்யறதுக்கு நான் முயற்சி பண்றேன். நான் அவனை சந்திக்கிறதா இருக்கேன்!" என்றாள் துர்க்கா.

"எதுக்கு? உங்களோட அடுத்த கட்ட நடவடிக்கை என்னன்னு டிஸ்கஸ் பண்றதுக்கா?"

"என்ன மதுமிதா இப்படிப் பேசறே?"

"என்னம்மா என்கிட்டயே நாடக மாடறே? எனக்கு எல்லாம் புரிஞ்சு போச்சு!"

"என்ன புரிஞ்சு போச்சு?"

"இதெல்லாம் உன்னோட ஏற்பாடு தான். சொந்தப் பெண்ணோட பேரையும் புகழையும் நாசம் பண்றதுக்குப் போராடுற முதல் அம்மா நீயாகத்தான் இருப்பே!"

"சரி, ஒத்துக்கறேன். நான்தான் இந்த ஏற்பாடு கள்ல இறங்கி இருக்கேன். ஏன் இப்படி எல்லாம் செய்யறேன்னு யோசிச்சுப் பாத்தியா? நீ என்னை அம்மான்னு மதிக்கறதில்லை. என் பேச்சுக்கு எந்த மரியாதையும் கொடுக்கறதில்லை. ஆனா, நான் மட்டும் என் பொண்ணாச்சேன்னு, உன்னைக் கொஞ்சிக்கிட்டே இருக்கணுமா? தலையில தூக்கி வச்சிக்கிட்டே இருக்கணுமா? இரகசியமா எங்க எல்லாரையும் ஏமாத்திட்டு நீ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு திட்டம் போடுவே. அதைப் பார்த்துக்கிட்டு நான் சும்மா இருக்கணுமா?"



"சரிம்மா.... இவ்வளவு தூரம் வந்ததுக்கப்புறம் வெளிப்படையாவே பேசிடலாம். நீ சொல்றது உண்மைதான். என் மனசுக்குப் பிடிக்காத இந்தத் தொழில்ல உனக்காக இத்தனை வருஷம் நான் இருந்தது போதும்னு பட்டுச்சி. எனக்காக நான் வாழணும்னு ஆசை வந்துச்சி. என்னை முழுசாப் புரிஞ்சுகிட்ட நல்ல மனுஷனோட பழக்கமும் கிடைச்சிச்சு. என் எதிர்காலத்தைப் பத்தியோ என் விருப்பங்களைப் பத்தியோ எப்பயாவது நீ கவலைப்பட்டிருக்கியா? உன்னைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு பணம் காய்க்கிற மரம். பாசம் எல்லாம் செத்துப் போய் என்னை ஒரு இயந்திரமா நீ பார்க்க ஆரம்பிச்சிட்டே... வாழ்நாள் பூரா உனக்காக உழைக்கிற ஒரு இயந்திரமாவே இருந்திட நான் தயாராயில்லை. அதனால்தான் இரகசியமா கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானிச்சேன்."

"தீர்மானிச்சே இல்லே, அதுக்குப் பதிலடிதான் இந்த நடவடிக்கை!"

"கொஞ்சமாவது உன் மனசுல பாசம் ஒட்டிக்கிட்டிருக்கும்னு நான் எதிர்பார்த்தது என் தப்புத்தான். இப்ப நீ ஒரு அம்மாவா நடந்துக்கலை; வில்லி மாதிரித் தான் நடந்துக்கிட்டிருக்கே. பேசறதும் அப்படித்தான் இருக்கு. என் பொண்ணுக்கு ஏற்கனவே இரகசியமா கல்யாணம் நடந்துருச்சின்னு வாய்கூசாம, மனசு கூசாம கதை கட்டி விட்டிருக்கியே.. இதில உனக்கு என்ன சந்தோஷம்?"

> "எங்க கல்யாணம் எப்பன்னு நானும் சுந்தரும் பேசி டிசைட் பண்ணிட்டோம். அது புரியாம எல்லோரும் எதுக்காக எங்களைப் பத்திப் பேசி நேரத்தை வேஸ்ட் பண்றாங்கன்னு தெரியலை."
>
> நடிகை குஷ்பு... 'குங்குமம்' 14.08.97 இதழில்...

"இது என் சந்தோஷத்துக்காக இல்லடி.. அப்பத்தான் நீ என் வழிக்கு வருவே... அதுக்காகத்தான்! நீ நினைச்சுக்கிட்டிருக்கிற உன் இரகசியக் கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தணும். அதுக்காகத்தான்!"

"பத்திரிகைகள்ல என் பேரைக் கெடுத்துடறதால நீ நினைச்சதைச் சாதிச்சிட முடியும்னு நம்புறியா?"

"கண்டிப்பா!"

"பாவம்மா நீ! இதிலயும் உனக்கு ஏமாற்றம்தான் கிடைக்கப்போகுது. அப்படி எந்தக் கல்யாணமும் நடக்கலைன்னு என்னால நிரூபிக்க முடியும். நிரூபிக்கத்தான் போறேன்!"

"முடிஞ்சா முயற்சி பண்ணிப்பாரு! என்னதான் நீ மறுப்புப்பேட்டி கொடுத்தாலும் உன்னைப் பத்தி மக்கள் மனசுல சந்தேகம் ஸ்ட்ராங்கா விழுந்துடும். ஊர் முழுக்க சந்தேகப்படறது இருக்கட்டும். ரொம்ப பெருந்தன்மையோட உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறதா இருக்கானே அந்த முட்டாள் சந்திரசேகர், அவன் மனசுல ஒரு பெரிய சந்தேகப்புள்ளி விழுந்துடும். இல்லையா? அது போதும்!"

"ஸோ... நான் கல்யாணம் பண்ணிக்கப் போற நபர் யாருன்னு வரைக்கும் தெரிஞ்சிக் கிட்டாச்சா?"

"உங்கம்மாவை யாருன்னு நினைச்சே? எனக்குப் பிடிக்காத எதையும் நான் நடக்க விடமாட்டேன் மதுமிதா! 'என்னை மன்னிச்சிருங்கம்மா, நீங்க சொல்றபடி நான் நடந்துக்கறேன்'னு நீ சொல்லத்தான் போறே. சொல்ல வைக்கிறேன் பாரு!"

"பார்க்கலாம்மா...! ஒரு பொண்ணு தன் அம்மாக்கிட்டேயே சவால் விட்டுப் பேசற நிலைமை சங்கடமான விஷயம். ஆனா என்னைப் பேசப் பேச வைக்கிறே நீ. அம்மா, நீ என்ன பித்தலாட்டம் வேணும்னாலும் நடத்திக்கோ. என் இஷ்டப்படி என் கல்யாணம் நடக்கத்தான் போகுது!"

"காலொடிஞ்சி ஆஸ்பத்திரியில இருக்கிறப்பவே உனக்கு இவ்வளவு திமிரா?"

"கால்தானேம்மா ஒடிஞ்சிருக்கு. மனசு எப்பவும் எனக்கு தேக்குமரம்!"

ஃபோனை சட்டென்று வைத்தாள் மதுமிதா.

அம்மா மேல் ஆத்திரம் பொங்கியது.

'ச்சே! இவள் என் அம்மாதானா? நிஜமாகவே என்னைக் கருச்சுமந்து பெற்றவள் தானா இவள்?

கருணையின் வடிவமாக, அன்பின் இருப்பிடமாக, பாசத்தின் பிரதிநிதியாக, தெய்வத்தின் பிரதிபிம்பமாக அன்னையை உயர்த்திப் பேசப்படுவதும், எழுதப்படுவதும் பொய்யா?

இல்லை! எனக்கு அமைந்த அம்மா ஒரு விதி விலக்கு.

மூன்றாவது மனிதன் தாக்க வந்தால், தாயிடம் சொல்லலாம். தாயே தாக்க வந்தால் யாரிடம் செல்வது?

என்ன செய்யப் போகிறேன்? இந்தப் பிரச்சனையை எப்படிச் சமாளிக்கப்போகிறேன்?

சந்திரசேகர் இந்தக் கட்டுரையைப் படித்திருப்பாரா? படித்திருந்தாலும் 'குப்பை' என்று ஒரே வார்த்தையில் அதை அலட்சியப்படுத்தக் கூடியவர்தான் அவர்.

தன் ஆபீசில் வேலை பார்க்கும் அந்த சாரியை சமாதானப்படுத்துவதற்காக அவரை வைத்து நாடகமாடியதற்காக என் தன்மானம் பாதிக்கப்பட்டதாக அவரிடம் சத்தம் போட்டபோது, என்ன சொன்னார் அவர்?

'நான் உன்னை சந்தேகப்பட்டேன்னு நீ எப்படி என்னை சந்தேகப் படலாம் மது?'

அப்படிக் கேட்டவர் என் சந்துரு.

நான்தான் கோபம் தீராமல் அவரை வார்த்தைகளால் காயப்படுத்தி அனுப்பி வைத்தேன்.

இந்தச் செல்லமான ஊடல்கள் எங்களுக்குள் எத்தனையோ முறை நிகழ்ந்திருக்கின்றன. ஊடல் இல்லாத காதல் ஏது? அதில் சுவைதான் ஏது?

சந்திரசேகரை உடனே சந்தித்து 'அடுத்து என்ன செய்யலாம்' என்று ஆலோசனை கேட்க வேண்டும். அவருக்கு எதாவது நல்ல யோசனை தோன்றும்.'

சந்திரசேகரை பிடிக்க தொலைபேசியில் முயன்றாள்.

வெளியே சென்றிருப்பதாகத் தகவல் சொன்னார்கள். வந்ததும் தனக்கு ஃபோன் செய்யச் சொல்லி விட்டு, ஃபோனை வைத்த மதுமிதா, அறைக்குள் மெதுவாக உலாத்தியபடி யோசிக்கத் தொடங்கினாள்.

★★★

மதுமிதா வீட்டின் வரவேற்பறையில் நான்கு நிருபர்கள் காத்திருந்தார்கள். அவர்கள் முன்பு குளிர்பானங்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஈஸ்வர் கால் மேல்கால்போட்டு பீடா குதப்பியபடி அமர்ந்திருந்தார்.

"மேடம் வரட்டும். அது வரைக்கும் நீங்க எங்கிட்ட பேசிக்கிட்டு இருங்களேன் சார்!" என்றார் ஒரு நிருபர்.

மறுப்பாகத் தலையசைத்தார் ஈஸ்வர்.

"நீங்க எது சம்பந்தமா பேட்டிக்கு வந்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியும். இதுபத்தி துர்க்கா தெளிவா சொல்லுவாங்க. என் வாயைக் கிளறாதீங்க. கொஞ்சம் அமைதியா இருங்க."

சில நிமிடங்கள் கழித்து, பட்டுச்சேலை சரசரக்க மாடியிலிருந்து இறங்கி வந்து பொதுவாக அவர்களைப் பார்த்து புன்னகை செய்துவிட்டு அமர்ந்தாள்.

"என்ன கேக்கணும் உங்களுக்கு? கேளுங்க. ஒவ்வொருத்தராகக் கேளுங்க!" என்றார் ஈஸ்வர்.

"மேடம், 'சினிமா புயல்' பத்திரிகையில் வெங்கடரெட்டின்னு ஒருத்தர் கொடுத்திருக்கிற பேட்டியை நீங்க படிச்சிருப்பீங்க. அதெல்லாம் உண்மையா? மதுமிதாவுக்கும் அவருக்கும் ஏற்கனவே கல்யாணம் நடந்தது நிஜம்தானா?"

"சொல்றேன். இந்தக் கேள்வியை மதுமிதா கிட்டே கேட்க முயற்சி செஞ்சீங்களா?"

"முயற்சி செய்தோம். எந்த பத்திரிகைக்காரங்களையும் நேர்ல சந்திக்கவோ, இல்லை ஃபோன்ல பேசவோ அவங்க தயாரா இல்லைன்னு அவங்க சிகிச்சை எடுத்துக்கிட்டிருக்கிற ஆஸ்பத்திரியில பதில் சொல்லிட்டாங்க மேடம். அதனாலதான் நாங்க இங்க வந்தோம்."

"சார் விஷயம் இவ்வளவுதூரம்- அதுவும் ஆதாரங்களோட வெளியவந்த பிறகு, எந்த உண்மையையும் மறைக்க நான் தயாரா இல்லை. அந்த வெங்கடரெட்டி என் மருமகன் தான்! அவளா விரும்பி இரகசியமா கல்யாணம் செய்துக்கிட்டா... முதல்ல நான் எதிர்த்தேன். அப்புறம் ஏத்துக்க வேண்டிய தாப் போச்சு."

"நீங்க நிபந்தனை போட்டு அவரை விலகி இருக்கச் சொல்லிட்டு மதுமிதாவை நடிகை ஆக்கினதா குறிப்பிட்டிருக்கிறது..."

"அதுவும் உண்மைதான். அந்த சமயம் எனக்கு எக்கச்சக்கமான பண நெருக்கடி. என் பொண்ணை நடிகையாக்கறது மூலமா அதை சமாளிச்சிட முடியும்னு நினைச்சேன். கல்யாணமானவ ஒரு ஹீரோயின்னு சொன்னா இளம் இரசிகர்கள் ஒதுக்கி வெச்சிடுவாங்களே... அதனாலதான் அப்படி ஒரு நிபந்தனை போட்டேன்."

"சரி. இப்போ சமீபத்தில வெங்கடரெட்டி மதுமிதாவைச் சந்திச்சு நடந்த கல்யாணத்தை பகிரங்கப்படுத்திட்டு சேர்ந்து வாழலாம்னு சொன்னப்போ மதுமிதா மறுத்தது ஏன்?"

"மறுத்தது உண்மைதான். அதனால் தான் வெங்கடரெட்டி ஆத்திரமாகி இப்படி பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்திட்டார்! "கொஞ்சம் பொறுமையா இருங்க மாப்பிள்ளை. நான் என் மகளை சமாதானப்படுத்தறேன்'னு நானும் சொல்லிப் பார்த்தேன்."

"மதுமிதா காதலிச்சி செய்துகிட்ட கல்யாணம்தானே? இப்ப எதுக்காக சேர்ந்து வாழப் பிரியப்படாம ஒதுக்கப் பார்க்கணும்?"

"சார், இந்தக் கேள்விக்கு என் மகளைப் பத்தி வெளிப்படையா சில விசயங்களைப் பேசவேண்டி இருக்கு. ஒரு அம்மாவே தன் மகளைப்பத்தி இப்படி எல்லாம் பேசறது உங்களுக்கு ஆச்சரியமா இருக்கலாம். ஆனா நான் பேசறது உண்மை. மதுமிதாவை நடிகையாக்கினது நான்தான். ஆனா, அவ வளர்ந்து நடிகையாகி பேரும், புகழும், பணமும் சம்பாரிச்சதும் ஒரு அகந்தை வந்திடுச்சி. யாரையும் மதிக்கிறதில்லை. என்னையே பல சமயம் எடுத்தெறிஞ்சு பேசுவா.. வெங்கடரெட்டியை அப்ப விரும்பி காதலிச்சி, என்னையே எதிர்த்துக்கிட்டு கல்யாணம் செய்துக்கிட்டா. இப்ப அவளோட ஸ்டேட்டசுக்கு வெங்கடரெட்டியோட குடித்தனம் பண்றதை கௌரவக் குறைச்சலா நினைக்கறா. சுயமா சம்பாதிக்கிற ஒரு வளர்ந்த பொண்ணுக்கிட்ட ஒரு தாய் அவ்வளவு தான் எடுத்துச் சொல்ல முடியும்!"

நிருபர்கள் ஆர்வமாக பரபரவென்று குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

★★★

காரை நிறுத்திவிட்டு தன் அலுவலகத்திற்குள் வந்து அமர்ந்ததும் சந்திரசேகரிடம் வந்தார் சாரி. அவர் கையில் 'சினிமா புயல்'.

"தம்பி மதுமிதா பத்தி இந்தப் பத்திரிகையில..."

"என்ன எழுதியிருக்காங்க? நான் படிக்கலையே. கொடுங்க!" என்று வாங்கிப் புரட்டினான் சந்திரசேகர்.

(தொடரும்)

# நில்-கவனி-முன்னேறு



என் இனிய நண்பர்களே!

மகாராஜா தர்மரும் திரௌபதியும் அந்த இரவில் கொஞ்ச நேரம் காட்டுக்குள் நடந்து சென்று வரலாம் என்று புறப்பட்டார்கள். காடுகளுக்கே இயற்கையான ஓசைகளோடு மங்கிய நிலவொளியில் அந்தக் காடு ரம்மியமாகக் காட்சியளித்தது.

ஒற்றையடிப் பாதையின் ஓரத்தில் ஏதோ ஒரு ஜீவன் கிடந்து துடித்துக் கொண்டிருப்பதை மகாராஜா தர்மர் பார்த்தார். திரௌபதியும் அதைக் கவனித்தாள்.

தர்மர் பாதையை விட்டிறங்கி அந்த ஜீவனைத் தொட்டுப் பார்த்தார்.

ஓர் அழகான மான்குட்டி, அம்பு பாய்ந்து, பாய்ந்தபடியே ஓடிவந்து பாதையின் ஓரத்தில் விழுந்திருக்கிறது. அதை அப்படியே தோளில் தூக்கிக் கொண்டார் தர்மர். பர்ணசாலைக்கு வந்தார். மான் குட்டியை இறக்கி வைத்துவிட்டு, பாய்ந்திருந்த அம்பை வெளியில் எடுத்தார். திரௌபதி மானுக்குச் சிகிச்சை செய்தாள்.

விளக்கொளியில் அம்பை உற்று நோக்கிய தர்மர், "பீமா, பீமா" என்று ஆத்திரமாக அழைத்தார்.

பீமன் வந்தான். தர்மர் கேட்டார்: "இந்த மான் குட்டி உனக்கு என்ன கொடுமை புரிந்தது? ஏன் இந்தக் கணையால் அடித்தாய்?"

பீமன் கேட்டான்: "நீங்கள் யாருக்கு என்ன தீங்கு செய்தீர்கள்? ஏன் காட்டில் இருக்கிறீர்கள்?

குற்றவாளிகள் மட்டும் தண்டிக்கப்படும் நியாயம் உலகில் தோன்றும் போது தான், ஒவ்வொரு கொலைக்கும் காரண காரியம் பார்க்கவேண்டும்!

இல்லாதவரை எதுவும் நியாயந்தான்!"

தர்மர் சொன்னார்: "நம்மைச் சிலர் தண்டித்தார்கள் என்பதற்காக நாம் வேறொருவரை தண்டிப்பதா?"

பீமன் சொன்னான்: "எனக்கு இப்போது யார்மீதும் அனுதாபம் கிடையாது. நண்பர்கள் பகைவர் என்று யாரையும் பிரித்துப் பார்க்க நான் விரும்பவில்லை. முகத்தைப் பார்த்து குணத்தைக் கண்டு பிடிக்க முடிகிறதா? சொல்லைக் கேட்டு ஆளை நம்ப முடிகிறதா? உலகத்தில் எதிலுமே உண்மையில்லை. என்னுடைய எதிரிகளைக் களத்திலே சந்திக்கும்வரை இந்த வனத்திலே மிருகங்களிடம் நான் ஒத்திகை பார்க்கப் போகிறேன். காட்டு மிருகங்களைக் கொன்று பழகிக் கொண்டால்தான் இப்போதிருக்கும் நாட்டு மிருகங்களை நன்றாக வேட்டையாட முடியும்!"

பீமன் சொன்னான்: "எதிரி சிரிப்பதைப் பார்க்கும் போது எந்த வீரனுக்கு நிதானம் வரும்? நம்முடைய எதிரிகள் நிதானித்துத் தீர்க்கப்பட வேண்டிய எதிரிகள் அல்ல; அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷக்கிருமி! மனிதாபிமானத்தோடு அவர்களை எடைதூக்கிப் பார்க்க வேண்டியதில்லை. இந்தக் காட்டிலிருக்கும் ஒவ்வொரு நாளும் என் கரங்கள் துடித்துக் கொண்டே இருக்கின்றன. இப்பொழுதே மாறுவேடத்தில் அஸ்தினாபுரிக்குள் நுழைந்து பாரத யுத்தத்திற்குப் பக்குவமான சூழ்நிலையை உருவாக்க நான் விரும்புகிறேன்."

தர்மர் அமைதியாகச் சொன்னார்: "ஐவரில் ஒருவன் அனாதையாக மாண்டு போவதை நான் விரும்பவில்லை. ஆனாலும் உன் இஷ்டப்படி செய்ய உன்னை நான் அனுமதிக்கிறேன்.

## கவியரசு கண்ணதாசன்

தர்மர் சொன்னார்: "உங்களில் ஒருவருக்குமே நிதானம் இல்லை."

பீமன் சொன்னான்: "நீங்கள் நிதானித்துக்கொண்டிருக்கும் நேரத்திலேயே நாங்கள் நியாயத்தைச் சந்திக்க விரும்புகிறோம்."

தர்மர் சொன்னார்: "பருவம் தவறிய மழையும், நிதானம் தவறிய மனிதனும் பயனற்றுப் போவது உறுதி."

பாரத வரலாறு உன்னால் வேறு விதமாகத் திரும்புமானால் அதற்கு நான் பொறுப்பல்ல."

மறுநாள் அஸ்தினாபுரம் செல்ல பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் அனுமதி தந்தார் தர்மர்.

(இது அசல் மகாபாரதமல்ல; பழைய பாரதத்தில் புதிய கண்ணோட்டம்.)

## யார் இவர்?



'அக்கடா என்று உடைபோட்டால் என்ன?' என்று இன்று கேட்பவர் இவர். இந்தியில் பிரபலம்; தமிழிலும் கமலுடன் நடித்துள்ளார். கண்டுபிடிக்க முடியாதவர்கள் 18ம் பக்கம் நாடலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# குண்டுப் பாப்பா

“ஏன்னங்க... இதப் பாருங்க.... எதிர் வீட்டுல குடிவந்திருக்காங்களே, அவங்க குழந்த எவ்வளவு அழகாயிருக்கு தெரியுமா! செக்கச் செவேல்னு, கொழுக்கு மொழுக்குன்னு மைதாமாவ பிசைஞ்சு செஞ்சாப்பல...”

என் மனைவி விமலா அடுக்கிக் கொண்டே போனாள்...

எதிர் வீட்டில் குடிவந்திருக்கும் குண்டுப் பாப்பா (ஷோபா என்ற பெயருடைய அந்தக் குழந்தைக்கு, என் மனைவி சூட்டியிருக்கும் செல்லப் பெயர்–காரணப் பெயர்.) ஒருநாள் என் மனைவியின் பிரதான விருந்தாளியாக எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

“என்னங்க... நீங்க ஆபீஸ் போனப்பறம், பிள்ளைகளும் ஸ்கூல் போனப்பறம் நான் தனியா போரடிச்சுக்கிட்டுத்தானே ஒக்காந்துருக்கேன்... எனக்கும் பொழுதுபோகணு மில்லயா...? அதே சமயம் சுமதிக்கும் உதவி செய்த மாதிரி இருக்கும். இவ இருக்காளே... எம காதகி... அம்மாவ ஒரு வேல செய்ய விடமாட்டேங்கறா... அதான் தூக்கிட்டு வந்துட்டேன்.”

விமலா தூக்கி வந்திருந்த அந்த எம காதகியைப் பார்த்தேன். சும்மா சொல்லக் கூடாது.... விமலா சொன்னது போலவே அந்த எமகாதகி அழகாகவே இருந்தாள்.

“இந்தாங்க... பிடியுங்க!” குண்டு பாப்பாவை நான் கேளாமலேயே என் கைகளில் திணித்தாள். என் ஸ்பரிசம்பட்ட அடுத்த நிமிஷம் தேள் கொட்டினாற் போல் வீலென்று அலறியது குண்டுப் பாப்பா.

“ஐயோ, என்னங்க உங்க கை பட்டதுமே இப்படி அலர்றா...? என்கிட்ட எவ்வளவு சமத்தா இருக்கா பாருங்க...!”

குழந்தை தன்னிடம் சமத்தாக இருப்பதில் பெருமை கொண்டவளாக விமலா, குண்டுப் பாப்பாவை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

குழந்தையே இவ்வளவு அழகாக இருந்தால், இந்தக் குழந்தையைப் பெற்றவள்...! என் ஆவல் அதிகரித்தது...

அவர்கள் எதிர்வீட்டிற்கு குடிவந்து ஒரு வாரம் ஆகிறது. இந்த ஒரு வாரத்தில் விமலாதான் எதிர்வீட்டுக்குப் போய்போய் வந்தாளேயொழிய, எதிர்வீட்டு சுமதி என்று சொல்லப்பட்டவள், இதுநாள் வரை எங்கள் வீட்டுப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை.

ஒரு நாள் விமலாவிடம் கேட்டேன்,

“நீதான் எப்பப்பாரு எதிர்வீட்டுக்கு ஓடுறா? உன் ஃப்ரெண்ட் ஒரு நாளாவது நம்ம வீட்டுக்கு வந்தாளா? மரியாதை தெரியாத ஜென்மம்....”

வேண்டுமென்றே குரலில் எரிச்சலையும், வெறுப்பையும் கலந்து கேட்டேன்.

“சுமதி பாவம். அவளுக்கு அப்படியெல்லாம் நம்ம வீட்டுக்கு வரக் கூடாதை என்றெல்லாம் ஒண்ணும் இல்ல... அவளுக்கு எங்க ஓய்வு? இந்தக் கிராதகி அவள விட்டாத்தானே... நான் இவள எடுத்துட்டு வர்ற கொஞ்ச நேரத்துலதான் அவ வீட்டு வேலையெல்லாம் முடிச்சுக்க வேண்டியிருக்கு. பாவம்...!”

“ஆமா, நீயா ஏதாவது சமாதானம் சொல்லிக்கோ...” அவ்வளவாக அக்கறை இல்லாதவன் போல் மேற்கொண்டு அவளைப்பற்றிப் பேசாமல் இருந்துவிட்டேன்.

மேலும் இரண்டு வாரங்கள் ஓடின. சுமதியின் தரிசனம் எனக்கு கிடைத்தபாடாயில்லை. பேசாமல் சுமதியின் கணவனிடம் நம்மை நாமே அறிமுகப்படுத்திக் கொள்ளச் செல்கிறாற்போல் எதிர் வீட்டிற்குப்போக வேண்டியதுதான்.

“விமலா, உன் ஃப்ரெண்டோட புருஷன் சிவராமைப் பார்த்துவிட்டு வருகிறேன்...”

அதிசயமாக என்னைப் பார்த்த விமலா, வேறு ஏதாவது குறுக்குக்கேள்வி கேட்பதற்குள், அவசரம் அவசரமாக என் வீட்டை விட்டுக் கிளம்பினேன்.

உள்ளே நுழைந்ததுமே கையில் குண்டுப் பாப்பாவுடன் சுமதி எதிர்ப்பட்டாள். குண்டு பாப்பாவே பெரிய பாப்பாவாக இருந்தால் எப்படி இருக்குமோ, அப்படியிருந்தாள். அதே நிறம், அதே கண்கள், அதே குண்டு முகம், அதே உருண்டு திரண்ட உடம்பு... குண்டு பாப்பா என்னைப் பார்த்ததுமே சிநேகமாகக் கைகளைக் கொட்டிச் சிரித்தது.

“த்தா....த்தா...” என்னை நோக்கி கைகளை நீட்டித் தாவியது.

இந்த மூன்று வாரங்களில் தினமும் எங்கள் வீட்டுக்கு வந்ததில், நான் அதனிடம் நட்புறவு கொண்டாடாவிட்டாலும், அது ஒருதலை நட்புடன் என்னை வரவேற்றது. பெரிய பாப்பாவின் கடைக்கண் பார்வை என்மீது படவேண்டுமென்றால், குண்டுப் பாப்பாவை விரோதித்துக் கொள்ளக்கூடாது. குண்டுப்பாப்பாவை வாங்கிற சாக்கில், சுமதியின் அருகே போய் கைகளை நீட்டினேன்.

“நான் கணேஷ்...விமலாவின் கணவன்...!”

குண்டுப் பாப்பாவை வாங்கிய விரல்கள், சுமதியின் உடம்பில் பட்டது நிச்சயம் தற்செயலாகத்தான்!

“வாங்க... பாப்பாவின் அப்பா வெளியில போயிருக்கார். உக்காருங்க... டீ கொண்டுவரேன்...!”

மின்னலென என் கண்ணெதிரே தோன்றி மறைந்த அந்த ஒரு கணத்தில், என் மனதில் ஆயிரமாயிரம் வக்கிரங்களைத் தட்டியெழுப்பி விட்டுப் போனாள் அவள். டீயை சர்வ ஜாக்கிரதையாக ட்ரேயில் வைத்து எடுத்து வந்த அவள், ட்ரேயை என் முன் இருந்த டீப்பாயில் வைத்தாள்.

நான் அமர்ந்திருந்த சோபாவின் பக்கத்து சோபா காலியாக இருந்தாலும், வேண்டுமென்றே என்னை அவமதிப்பது போல்



இரண்டு சோபாக்கள் தள்ளி அமர்ந்தாள். நான் டீயை சாப்பிடுவதற்குத் தோதாக குண்டுப் பாப்பாவை அவளிடம் நீட்டினேன். இம்முறையும் என் விரல்கள் அவள் உடலில்... நான் என்ன செய்வது! இதுவும் தற்செயல்தான்... என் உடலில் ஆயிரம் வோல்ட் மின்சாரம் சார்ஜ் ஆகியது.

அதன்பின் எதிர்த்த வீட்டு குண்டுப் பாப்பாவை எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. இதுவரை என் குழந்தைகளைத் தவிர மற்ற குழந்தைகளை தூக்கியறியாத-கொஞ்சியறியாத நான், குண்டுப் பாப்பாவின் தீவிர இரசிகனானேன். என் மனைவி விமலா மனம் மகிழ்ந்தாள்.

“இப்பவாவது உங்களுக்கு குழந்தையோட அருமை தெரியுதே... குழந்தைகள தூக்கவே தூக்காத உங்கள எந்நேரமும் தன்னை சுமக்க வச்சுட்டா பாத்தீங்களா, நம்ம குண்டுப் பாப்பா...!”

வீட்டில எந்நேரமும் குண்டுப் பாப்பாவின் பேச்சுதான். குண்டுப் பாப்பாவைப் பார்ப்பதற்காக நான் அடிக்கடி எதிர்வீட்டிற்குப் போகும்படி ஆயிற்று. சுமதியின் கையிலிருந்து குண்டுப் பாப்பாவை வாங்கும் போதும், அதைத் திருப்பிக் கொடுக்கும் போதும் ஒவ்வொரு முறையும் என் விரல்கள் அவள் உடலில் தற்செயலாகப்பட்டன.

ஆனால் நாளடைவில் என்னுடைய ‘ட்ரிக்’ புரிந்துபோன சுமதி, நான் உள்ளே நுழையும் போதே குண்டுப் பாப்பாவை தரையில் இறக்கிவிட ஆரம்பித்தாள். ஆனாலும் பாப்பாவைத் திருப்பிக்கொடுக்கும்போது, சுமதியின் கைகளில் நேரடியாகக் கொடுக்கும் வழக்கத்தை கறாராகக் கடைபிடித்தேன்.

ஆனாலும் என்னுடைய திட்டம் அவளுக்குப் புரியாமல் போகவில்லை. சுமதியின் கணவன் சிவராம் வேறு அடிக்கடி ‘டூர்’ போய்விடுவது எனக்கு வசதியாகப் போயிற்று. இரவு நேரங்களில்கூட குழந்தையைப் பார்க்கிற சாக்கில் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி போக ஆரம்பித்தேன்.

“சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்தா, உடனே குழந்தை ஞாபகம்தான் வர்றது... அதான் எப்பப்பாரு இப்படி உங்க வீட்டுக்கு ஓடி ஓடி வரேன்...!”

ஆனால் என்னுடைய வார்த்தைகளை அவள் சுத்தமாக நம்பவில்லை யென்பது, சுமதி என்னைப் பார்த்த பார்வை யிலேயே தெரிந்தது.

ஆனால் ஒரு நாள் நான் எதிர்பாராத விதமாய் விமலா, பெரிய குண்டொன்றைத் தூக்கிப்போட்டாள். சுமதி இந்த வீட்டைக் காலி செய்துவிட்டு, கொட்டாஞ்சேனையில் ஒரு வீட்டிற்குக் குடிபோகிறாளாம். அதுவும் அடுத்த வாரமே! இந்த வீட்டு வாடகை ரொம்ப அதிகம் என்று காரணம் சொல்கிறாளாம். “இங்க வரும்போதே வாடகை எவ்வளவுன்னு தெரிஞ்சுண்டுதானே வந்தா... இப்ப திடும்னு வாடகை அதிகமென்று ஏன் சொல்லணும்? வேற ஏதோ காரணம் இருக்கு. சொல்ல மாட்டேங்கறா?”

என் மனைவி என்னிடம் சொல்லிக் குறைபட்டுக் கொண்டாள். எனக்குத் ‘திக்’ கென்றது. போகிற போக்கில் இந்த சுமதி, விமலாவிடம் எதையாவது சொல்லி வைத்து விட்டுப் போய்விடப் போகிறாள்... நல்ல வேளை, நான் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. ஆனால் அவர்கள் அங்கிருந்து கிளம்புகின்ற அன்று சொல்லிக் கொண்டு போவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்த சுமதி, என்னைப் பார்த்த பார்வையால்... ‘உங்களால்தான், உங்கள் தொந்திரவு பொறுக்க முடியாமல்தான் இந்த வீட்டைக் காலி செய்துகொண்டு போகிறேன்’ என்று சொல்லாமல் சொல்லிவிட்டுப்போனாள்.

சுமதி, எதிர் வீட்டைக் காலி பண்ணி இரண்டு நாட்கள்தான் ஆகியிருக்கும். அந்த இரண்டு நாட்களும் வாழ்க்கை வெறுத்துப் போய் இருந்த நேரத்தில், பக்கத்து வீட்டு சாம்பசிவம் ஓடிவந்தார்.

“கணேசன், என்ன அநியாயம் பாருங்கோ... சுமதியோட குழந்தை ஷோபா தண்ணித் தொட்டில விழுந்து செத்துப் போயிடுச்சாம். சுமதியோட அண்ணா இப்ப ஃபோன் பண்ணினார். சுமதி புருஷன் வேற இப்ப ஊர்ல இல்லயாம். குழந்தய பார்த்துக்க ஆள் இல்லாம, குழந்தைய விளையாட விட்டுட்டு இவ ஏதோ வேலயா இருந்திருக்கா... வேலையெல்லாம் முடிச் சுட்டு குழந்தைய தேடிப் பாத்தா, குழந்தை தொட்டில மிதக்கறதாம். கண்றாவி... பாவம்!”

“ஐயோ, குண்டுப் பாப்பா சாகறதுக்காகத்தான் அவ இந்த வீட்டக் காலி

**பிரமிளா கார்த்திக்**

பண்ணிண்டு போனாளா...? அவ மாத்திரம் இந்த வீட்டுலேயே இருந்திருந்தா, இப்படி ஒரு அநியாயம் நடந்திருக்குமா? நானும் எங்க வீட்டுக்காரரும் குழந்தையைத் தரைல விடாம பார்த்துக்கொண்டிருந்தமே... ஐயோ, குண்டுப் பாப்பா...” விமலா அடித்துக் கொண்டு அழுதாள்.

‘உன்னாலதான் எங்கம்மா இந்த வீட்டைக் காலி பண்ணினா. உன்னாலதான் நான் செத்தேன்...!’ குண்டுப் பாப்பா என் எதிரில் நின்று என்னை நோக்கி தன் விரலை நீட்டியது.

“ஐயோ... குண்டுப் பாப்பா, என்னை மன்னிச்சிடு. உன்னக் கொன்றது நான்தான்.... நான்தான் உன்னக் கொன்னுட்டேன்...”

“என்னங்க....என்ன... என்னென்னமோ பேசறீங்க? ஐயோ, குண்டுப் பாப்பா செத்த அதிர்ச்சியில இவருக்கு என்னமோ ஆயிடுச்சு... என்னென்னமோ பேசறாரே...!”

என் மனைவி என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள்.... ○

---

# வசியக்காரி

**கலீல் ஜிப்ரான்**

என் இதயம் கவர்ந்தவள். இந்தத் தனியறையில், இந்த வெல்வெட் சோபாவில், தன் அழகிய உடல் சாய்த்து, நேற்றுப் படுத்திருந்தாள். இந்தக் கண்ணாடிக் குவளையிலிருந்துதான் அவள் திராட்சை மது பருகினாள்.

இதுதான் நேற்றைய கனவு: என் இதயம், காதலிக்காக, வெகு தூரத்திலுள்ள ஓரிடத்திற்குச் சென்றது– மறதியின் பூமிக்கு; சூன்யப் பிரதேசத்திற்கு.

என் முகம் பார்க்கும் கண்ணாடியில் அவளது கைவிரல் ரேகைகள், அவளது மூச்சின் நறுமணம், இன்னும் என் ஆடையின் மடிப்புக்களிலிருந்து வீசுகின்றது. அவளது இனிய குரல், இன்னும் இந்த அறையில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.




ஆனால், என் இதயக் காதலி மறதி, நாடு கடத்தல் என்பவைகளின் பள்ளத்தாக்கை நோக்கிப் போய் விட்டாள்.

என் படுக்கையருகே அவளது ஓவியம். அவள் எழுதிய காதல் கடிதங்களை, மரகதக் கற்களும், பவளங்களும் பதிக்கப் பெற்ற வெள்ளிப் பெட்டியில் வைத்திருக்கிறேன். ஊமை மௌனம் ஆட்சி செய்யும் மறதி இடத்திற்கு, நாளை அவற்றையெல்லாம் காற்றடித்துப் போகும்வரை, அவை என்னிடம்தான் இருக்கும்.

நான் காதலித்த பெண், நீங்கள் இதயம் பறி கொடுத்த பெண்ணைப் போன்றவள் தான். அவள் அபூர்வமான அழகி, கடவுளே வடிவமைத்தது போல. அவள் புறாவைப் போல் சாதுவானவள்; பாம்மை போல சூதுள்ளவள். மயிலைப்போல கம்பீரமானவள். ஓநாயைப் போல் கொடூரமானவள்; வெள்ளை அன்னம் போல் அழகானவள்; கருப்பு இரவைப் போல் அச்சம் தரக் கூடியவள்.

கைப்பிடியளவு மண்ணும்,ஒரு குவளைக் கடல் நுரையும் கலந்து பிசைந்த கலவை அவள்.

குழந்தைப் பருவம் முதல் அவளை எனக்குத் தெரியும். அவளை நான் தோட்டங்களுக்குப் பின்பற்றிச் சென்றேன்; அவள் நகரத் தெருக்களில் நடந்தபோது, அவளது ஆடையின் விளிம்பைப் பற்றியவாறு நான் நடந்தேன்.

என் இளமைப் பருவம் முதல் அவளை நான் அறிவேன். நான் படித்த புத்தகங்களில் அவளுடைய நிழலைக் கண்டிருக்கிறேன். அவளுடைய தெய்வீகக் குரலை, முணு முணுக்கும் ஓடைகளில் கேட்டிருக்கிறேன்.

என் இதயத்தின் அமைதியின்மையையும், என் ஆன்ம இரகசியங்களையும் அவளுக்குத் திறந்து காட்டினேன்.

என் இதயம் காதலித்த அந்தப் பெண், குளிர் நடுக்கும், தொலைதூரப் பாழ்நிலமான வெறுமை, மறதி என்னும் பிரதேசத்திற்குச் சென்று விட்டாள்.

என் இதயக் காதலியின் பெயர், வாழ்க்கை. அவள் அழகி. எல்லா இதயங்களையும் தன்பால் ஈர்க்க வல்லவள். நமது வாழ்க்கைகளை அவள் அடமானத்திற்கு எடுத்து, நமது வருவாய்களையும், வாக்குறுதிகளையும் புதைத்து விடுகிறாள்.

வாழ்க்கை என்பவள், தன் காதலர்களின் கண்ணீரில் குளிப்பவள்; தனக்கு இரையானவர்களின் இரத்தத்தில் எண்ணெய் தேய்த்துக் கொள்பவள். அவளது ஆடை, இரவின் கருப்புக் கரையுள்ள வெள்ளைத் தினங்கள். தன் இதயத்தைக் காதலனிடம் கொண்டு செல்கிறாள் அவள். ஆனால், திருமணத்திற்கு மறுத்து விடுகிறாள்.

வாழ்க்கை,
தன் அழகால் நம்மை மயக்கிவிடும்
சாகசக்காரி– ஆனால்,
அவள் தந்திரத்தை அறிந்தவன்
அவளது வசியங்களுக்குத் தப்பி விடுவான். ●

---

# மகாலட்சுமி

**சிநேகா**

“வந்துட்டீங்களா? கற்றை கற்றையா பணத்தை அள்ளிக்கிட்டு வாரம் தவறாம இங்கே வந்துடறீங்களே, மனசு நிறைய அன்பை சுமந்துக்கிட்டு உங்க வீட்டுக்குப் போகலாமில்ல?”

கொஞ்சமாய் சூடேறிய வார்த்தைகள். கேட்டுக் கொண்டிருந்த சங்கர் திகைப்புடன் நின்றான்.

“சொரணை இருந்தாத்தானே? நீங்க நூறு முகம் பார்த்து இன்பம் தேடி அலையறீங்க. வேறு முகம் பார்க்காம வீட்டில உங்க பொண்டாட்டி உங்களுக்காக காத்துக் கிடக்காளே! அந்த உணர்வு இல்லாம இங்கே ஓடி வர்றீங்களே, நீங்கள்ளாம் ஆம்பளைங்கதானா?”

வார்த்தைகளில் உஷ்ணத்தின் அளவு அதிகமாகியது. தாக்குதலால் மேலும் திகைத்துப்போனான் சங்கர்.

“மகாலட்சுமி, நீ உள்ளே வாம்மா. உனக்கு உடம்பு சரியில்லை. நீ இன்னிக்கு நல்லா ஓய்வு எடுத்துக்கோ. வாம்மா வா! மகாலட்சுமி!” வார்த்தை சவுக்குகளால் சங்கரின் இதயத்தை அடித்துக் கொண்டிருந்த மகாலட்சுமி என்ற அந்த பெண்ணை பலவந்தமாக உள்ளே அழைத்துச் செல்ல முற்பட்டாள் அந்த விலை மகளிர் விடுதித் தலைவி.

அங்குள்ள பெண்களிலேயே அதிக அழகு, கவர்ச்சி, மிக அதிகமாய் சம்பாதிப்பவள் மகாலட்சுமிதானே? எனவே, அவளிடம் எப்போதும் நயமாகவே பேசுவது அவளது வழக்கம்.

மகாலட்சுமி தலைவியின் கைகளை உதறினாள். “கல்யாணம் கட்டி, புள்ளைங்களைப் பெத்துட்டா மட்டும் ஆம்பளையாயிட முடியாதுய்யா. கட்டினவளையும், பெத்ததுங்களையும் கண் கலங்காம சந்தோஷமா வச்சுக் காப்பாத்தறவன்தான் உண்மையான ஆம்பளை.”

அவள் பேசப்பேச, வலுக்கட்டாயமாக அவளை இழுத்துக் கொண்டு சென்றாள் தலைவி. மகாலட்சுமி முறையாக கல்யாணம் செய்துகொண்டவள்தான். உழைத்து சம்பாதிப்பதற்கு சோம்பேறித்தனப்பட்ட ஊதாரி கணவன் தவிக்க விட்டு விட்டு வேறு மலருக்கு தாவி விட்டான்.

தகுந்த கல்வி இல்லாத இவள் வேறு வழியின்றி விடுதியில் (சிகப்பு) விளக்கேற்றும் மகாலட்சுமியாகி விட்டாள்.

ஓடிப்போன கணவன் செய்த துரோகம் காரணமாக கோபம் தலைக்கு ஏறும்போதெல்லாம் இப்படித்தான் ஹிஸ்டீரியா நோயாளிபோல கத்துவாள். அந்நேரத்தில் மட்டும் அவளுக்கு ஓய்வு. இல்லாவிட்டால் வாடிக்கையாளர்களை வசைபாடியே விரட்டிவிடுவாள் என்ற பயம் தலைவிக்கு.

திகைத்து நின்ற சங்கர் மெதுவாக வெளியேறினான். ஸ்கூட்டரில் ஏறி பூங்காவில் நீண்டநேரம் உட்கார்ந்திருந்து விட்டு வீடு சேர்ந்தபோது நேரம் பின் இரவாகி இருந்தது.

அழைப்பு மணியை ஒலிக்கச் செய்தான். புவனா வந்து கதவைத் திறந்தாள். தூக்கக் கலக்கம் நிரம்பிய கண்களிலும், கணவனைப் பார்த்ததும் ஒரு ஒளி மின்னியது.




மவுனமாக சென்று சாரத்துக்கு மாறினான் சங்கர். “சாப்பிட வாங்க,” கூப்பிட்டாள் புவனா. இரவில், விஸ்கியுடன் மீன் வறுவல், சிக்கன் சாப்பிட்டு விடுவதால் வீட்டில் சாப்பிடுவதே இல்லை என்றாலும் அலுக்காமல், சலிக்காமல் தினமும் நாள் தவறாமல் சாப்பிட அழைப்பாள். அவன் வேண்டாம் என்ற பின்னரே சாப்பாட்டிற்கு தண்ணீர் விடுவாள்.

அன்றும் சாப்பாடு வேண்டாம் என மவுனமாக தலையை ஆட்டிவிட்டு தன் படுக்கையில் போய் ‘தொப்’ பென்று விழுந்தான் சங்கர். அடுக்களையில் புவனா சாப்பாட்டிற்கு தண்ணீர் ஊற்றி விட்டு, சுத்தம் செய்யும் சப்தம் கேட்டது.

‘ஒரு நாள் கூட முகம் சுளிக்காது, தனக்கு பணிவிடை செய்கிறாளே.... இத்தனைக்கும் நான் ஒரு வார்த்தைகூட அவளிடம் அன்பாக பேசுவதில்லை’ எண்ணங்கள் இதயத்தை கனக்க வைத்தது.

புவனா மெல்ல நடந்து வரும் சப்தம் கேட்டது. அவனருகே வந்தாள். ‘தினமும் வெறும் வயித்தோட படுத்துக்கறது உடம்புக்கு நல்லதில்லீங்க,’ சொல்லி விட்டு குழந்தைகள் படுத்திருந்த கட்டிலுக்குச் சென்று அவர்களுடன் படுத்துக்கொண்டாள். திருமணமாகிய புதிதில் மனைவியிடம் மோகம் மட்டுமே கொண்டு அள்ளித் தெளித்த அவசரக் கோலத்தில் பிறந்த பிள்ளைகள். மனம் விட்டு அவளது உணர்வுகள், ஆசைகள் இவற்றைப் பற்றி ஒரு நாளாகிலும் கேட்டதில்லை. அவளது எண்ணங்களைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ள நினைத்ததுமில்லை. மனைவி என்பவள் குடும்பத்தைப் பேணும் இயந்திரம்; வாரிசுகளை வளர்க்கும் கேந்திரம் என்ற எண்ணம் அவனுக்கு.

இன்று? மனைவியை ஒரு மனுஷியாக, பெண்ணாக, தாயாகப் பார்த்தான். மெதுவாக எழுந்து சென்று குழந்தைகளுடன் படுத்துக் கொண்டிருந்த புவனாவுடன் தானும் நெருங்கிப் படுத்து அவளை அணைத்துக்கொண்டான். அன்றைய அணைப்பில் ஆசை மட்டுமல்ல, புது அன்பையும் புவனாவின் பெண்மை உணர்ந்து கொண்டது. கண்மூடி கணவனின் அணைப்பில் லயித்தாள்.

அவளிடமிருந்து வந்த மஞ்சள் வாசனை மனதிற்கு ரம்மியமாக இருந்தது. இரவின் மங்கிய வெளிச்சத்தில் அவள் மூக்கில் அணிந்திருந்த சிறு வைர மூக்குத்தி மின்னியது. ‘மகாலட்சுமி போல இருக்கும் இவளை விட்டு வேறு மகளிரிடம் சென்றோமே’ என வெட்கினான்.

மகாலட்சுமி! தன் மனதிலும், உடலிலும் இருந்த அழுக்கை நீக்கிய அந்த விடுதிப் பெண்ணும் மகாலட்சுமிதானே! மானசீகமாக அவளுக்கு நன்றி செலுத்தினான். ▫


படிப்பகம்

www.padippakam.com



# நிலவுக்கு விண்ணப்பம்

## இலக்கிய நயம்

**வா**க்குறுதி கொடுப்பது
அரசியலில் மட்டுமல்ல;
சரசவியலிலும் சகஜம்!

கட்டியணைக்கையில்
வாக்குறுதிகள் நீளும்!
காரியம் முடிந்ததும்
காற்றில் பறக்கும்!

காதலிகள் ஜாக்கிரதை
காதலர்கள் குளிர்மொழிகள்
தரம் பிரித்து மெய் அறிக!

இதோ ஒரு காதலி
தன் தோழியிடம்
புலம்புகிறாள் கேள்மின்:

நெஞ்சில் நிறைந்தவர்- இன்று
நினைவைத் துறந்தாரோ?
கொஞ்சி மகிழ்ந்தவர்- எங்கே
பஞ்சாய் பறந்தாரோ?

உச்சந்தலையில் அடித்து- ஓர்
சத்தியம் செய்தவர்
பட்சம் இழந்தாரோ- எனை
துச்சமாய் நினைத்தாரோ?

நெஞ்சினை மஞ்சமாய்
நினைத்து துயின்றவர்- இன்று
நெருப்பினை உமிழ்ந்தாரோ?-அன்பு
கொடுப்பினை மறந்தாரோ?

தோளை அணைத்து- எனை
தொட்டுத் தழுவியவர்- அந்த
நாளை மறந்தாரோ?

விரிந்த மஞ்சத்தில்-என்னில்
சரிந்த நாளை மறந்தாரோ?

கொவ்வை இதழ் என்று
கொத்தி மகிழ்ந்திருந்த
கோலம் மறந்தாரோ?

கோபுரக் கலசம் என்றும்
கோலக் கனிகள் என்றும்
எந்தன் நெஞ்சில் சரணடைந்த
நினைப்பை மறந்தாரோ?

ஆலிழை வயிறு என்றும்
நுலிழை இடை என்றும்
ஆயிரம் தரம் சொன்ன
நாளினை மறந்தாரோ?

வாழையின் மடல் என்று
வாகான கால் வருடி,
துகிலினை மிக விலக்கி
துணிவுடன் எனை ஆண்ட
அந்த நாளினை மறந்தாரோ?

பூ மஞ்சம் சதிராட
பூந் தேகம் களமாக
பூஞ் சிரிப்பை பரிமாறி
மாய்ந்திருந்தோம் உயிர்மாறி!

நெஞ்சணையில் நகக் குறிகள்- எம்
பஞ்சணையில் போர்க்குறிகள்!
மஞ்சத்தில் வஞ்சமில்லை
நெஞ்சில் சுகத்துக்கு பஞ்சமில்லை!

நாளினை மறந்தாரோ-எந்த
நாளினை மறந்தாரோ?

மோக முத்தத்தில்-எம்
முகம் நனைய
போக யுத்தத்தில்-எம்
மனம் நனையும்!

அலை அலையாய்
ஆசை எழ
கலை பயிலும்
களம் விரியும்!

உள்ளத்தில் இன்ப
வெள்ளம்!
தேகத்தில் வியர்வை
வெள்ளம்!

இடை வளைத்து-என்
இதழ் பிடித்து- வெட்க
தடை உடைத்து
படை எடுத்த
குடை சாயா மன்னரடி!

இத்தனையும் அவள்
உரைக்க,
"போதுமடி நித்திரை
கொள்" என்றாள்
தோழி.

பத்திரமாய்- பக்குவமாய்
தூங்குவதற்கு
பஞ்சணையையும்
விரித்தாள் தோழி!

"பஞ்சணை எதற்கடி
தோழி
பஞ்சணை எதற்கடி?
கொஞ்சிட அவர்
இன்றி,
பஞ்சணை எதற்கடி?"

"வண்டில்லாத
பூவுக்கு வாசம் ஏனடி?
மழை இல்லாத
ஊருக்கு குடை ஏனடி?
கடல் இல்லாத
ஊருக்கு தூண்டில் ஏனடி?

சூரிய ஒளி இல்லாமல்
தாவரம் செழிக்க முடியுமா?
வீரிய அவரில்லாமல்
என் மனம் தழைக்க இயலுமா?

மழை இல்லாத பூமி
மலர முடியுமா?
அவரில்லாமல் என் மனம்
மகிழ முடியுமா?"

தோழிக்கு விடை
சொல்லத் தெரியவில்லை.

"போனவரை எண்ணி
பொழுதைத் தேய்க்காதே!
பொய்களினை நம்பி
மெய் உருகாதே!"
என்றாள் தோழி.

"என்னை மறந்தாலும்- அவரை
எண்ண மறக்கவில்லை!
கண்ணை மறந்தாலும்- என்
கண்ணாளனை மறக்கவில்லை!
மண்ணை மறந்தாலும்- என்
மன்னவரை மறக்கவில்லை!

பஞ்சணையில் படுத்திருந்தால்
அன்றணைத்த நினைவு வரும்!
கல்லணையில் படுத்தாலும்
அவர் தேக நினைவு வரும்!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?

நினைவை நழுவ விட
நெஞ்சு மறுக்கிறது!
கனவில் தழுவிவிட
கைகள் துடிக்கிறது!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?

கூடிக் கலந்த சுகம்
நாடி துடிப்பதுபோல
நினைவில் அனுதினமும்!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?

எரியும் நிலவொளியில்
அவரைத் தேடுகிறேன்!
இரவு முழுவதையும்
விரயம் ஆக்குகிறேன்!

தூங்க இமை கவிழ்த்தால்
இமையில் அவர் நினைவு!
பாரம் தாங்காமல்
இமைகள் துடிதுடிக்கும்!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?"

தோழிக்கு வியப்பு
சிறிதளவு குறும்பு.

"நிலவொளியில் தேடுகிறாய்
நிலவு இல்லாத இரவில்
இந்தப் பெருவெளியில்
எப்படித் தேடுவாய்?"
என்று கேட்டாள்.

"நிலவுக்கு ஒரு
விண்ணப்பம் போடுவேன்
என் எண்ணப்படி!"
என்றாள் அவள்.

"என்ன விண்ணப்பம்
உரை பார்க்கலாம்!"

"நிலவே நிலவே
போகாதே!
நீல வானத்தைவிட்டு
பிரியாதே!
என்னவர் போனார்
எனைப் பிரிந்து!
விழிவலை விரித்து
தேடுகிறேன்!
மறுபடி அவரைக்
காணும்வரை
நிலவொளி வேண்டும்
நின்றுவிடு!"

தோழிக்கு
அழுவதா? சிரிப்பதா?
என்று தெரியவில்லை!

நிலவுக்கு காதலி போட்ட
விண்ணப்பம்
திருக்குறளிலும் உண்டு
இதோ பாரீர்:

***"விடாஅது சென்றாரைக்***
***-கண்ணினால்- காணப்***
***படாஅதி வாழி மதி!"***

*அதிகாரம்:122- குறள்:1210*

தருவது ரசிகன்

(ஸ்போர்ட்ஸ்)

## அஸார் தொடருவார்



**ஷா**ர்ஜாவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் கப்டனாக இருந்து வரும் முகமட் அஸாருதீன் வரும் நவம்பர் மாதம்வரை கப்டனாகத் தொடர்ந்து பணியாற்றுவார். இந்தத் தகவலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைச் செயலர் ஜே.வை.லேலே தெரிவித்துள்ளார்.

ஷார்ஜாவில் நடைபெறும் இந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய மூன்று நாடுகளுக்கிடையிலான போட்டிகள் ஏப்ரல் 24ல் முடிவடைந்துவிடும்.

இதனை அடுத்து, இந்தியா, கென்யா, பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகள் பங்கு பற்றும் போட்டிகள் மே 11ம் திகதி ஆரம்பமாகின்றன.

இலண்டனில் மே மாதம் 18ம் திகதி நடைபெறவிருக்கும் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் கப்டன்கள் மாநாட்டிலும அஸாருதீன் கலந்து கொள்கிறார்.

இதற்கிடையே பீகார் மக்களை இழிவுபடுத்தும் விதத்தில் விமர்சித்ததாக அஸாருதீன் மீது தொடரப்பட்ட வழக்கும் வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

இவ்வருட ஆரம்பத்தில் பீகாரில் அஸாருதீன் விளையாடியபோது, அவரது தொப்பி காணாமல் போனது இதனால் கோபமடைந்த அஸார் 'பீகார் மக்கள் திருடுவதை வழக்கமாகக் கொண்டவர்கள்' என்ற ரீதியில் கருத்துத் தெரிவித்தார்.

இதனால் பீகாரைச் சேர்ந்த சின்கா என்பவர் அஸார்மீது அவதூறு வழக்குத் தொடுத்திருந்தார். அதற்கு அஸாருதீன் மன்னிப்பும் கேட்டிருந்தார். அந்த வழக்குத்தான் அண்மையில் வாபஸ் பெறப்பட்டது.

## பிராட்மனுக்கு கௌரவம்

கிரிக்கெட் உலகில் அதி சிறந்த பாட்ஸ்மனாகத் திகழ்ந்த அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் சேர் டொனால்ட் பிராட்மன் உபயோகித்த பொருட்கள், விருதுகள் ஆகியவற்றைக் கொண்ட கண்காட்சி ஒன்று அண்மையில் அவுஸ்திரேலியரான அடிலெயிடில் திறந்துவைக்கப்பட்டது. இக் காட்சியை பிராட்மனின் பெரும் இரசிகரான அவுஸ்திரேலிய பிரதம மந்திரி ஜோன் ஹோவாட் அவர்களே திறந்து வைத்தார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற 19ம் நூற்றாண்டு நூல் நிலைய நிறுவனத்துக்குரிய கட்டடத்தில் தொடங்கிவிடப்பட்டுள்ள இக் கண்காட்சி திறப்பு விழாவின்போது,நோய் வாய்ப்பட்டிருக்கும் 89 வயதான பிராட்மனால் கலந்து கொள்ளமுடியவில்லை.

பிராட்மனுக்கு எதிராக இங்கிலாந்து அணியில் விளையாடிய 79 வயதான சேர் அலெக் பெட்சர் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் பொருட்டு இங்கிலாந்திலிருந்து அடிலெயிடுக்கு வந்திருந்தார்.

இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற பொருட்கள்- 1930ம் ஆண்டு இங்கிலாந்து லீட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில் டொன் பிராட்மன் 334 ஓட்டங்களைக் குவிக்கப் பயன்படுத்திய அவருடைய துடுப்பு (பேட்) ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

### இவர்தான் அவர்



ஊர்மிளா

## கோலாகல ஏற்பாடுகள்

**வ**ருகின்ற ஜூன் மாதம் உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டிகள் ஃபிரான்ஸ் நாட்டில் நடைபெறுவது எல்லோரும் அறிந்ததே. இதையொட்டி ஃபிரான்ஸில் கோலாகல ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பல்வேறு தனியார் நிறுவனங்கள் உதைபந்துப் போட்டிக்கென விசேஷ ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

பாரிஸில் உள்ள பிரபல புத்தக நிறுவனமொன்று உலகக் கோப்பை உதைபந்துப் போட்டிகளை முன்னிட்டு சிறப்புப் புத்தகம் ஒன்றைத் தயாரித்து வெளியிடுகிறது.

சுமார் 2000 ரூபாய் மதிப்புள்ள இப் புத்தகத்தில் 1863 முதல் உலகக் கோப்பை உதைபந்து போட்டியின் வரலாறு, நடைபெற்ற போட்டிகள், வெற்றி பெற்ற அணிகள், சிறந்த வீரர்களின் படங்கள் ஆகியவை இதில் அடங்கியுள்ளன.

"400 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம் உதைபந்து இரசிகர்களுக்கு விருந்தாக இருக்கும்." என இப்புத்தகத்தின் பதிப்பாளர் கூறியுள்ளார்.

## சிந்தியா பதில்கள்

**★ செய் நன்றி மறப்போர் தொகை அதிகமாகி வருகிறதே?**

கே. சீராளன், மட்டக்களப்பு.

எடுத்ததுக்கெல்லாம் உதட்டளவில் நன்றி சொல்லிச் சொல்லி, நன்றி வெறும் சம்பிரதாயமாகிவிட்டது என்கிறார் ஆன்மீகவாதி சுகபோதானந்தா. அவர் கூறிய குட்டிக்கதை ஒன்று:

ஒருமுறை நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்றில் ஏதோ கோளாறு. விமானம் தள்ளாட ஆரம்பித்தது.

விமானப் பணிப்பெண் "பயணிகளே... பயப்படாதீர்கள். விமானத்தில் சின்னக் கோளாறுதான். விமானி சரிசெய்துவிடுவார்!" என்று கூறினார்.

நேரம் செல்லச் செல்ல விமானம் கட்டுப்பாடு இல்லாமல் தாறுமாறாகப் பறக்க ஆரம்பித்தது. அப்போது "அன்பு நிறைந்த பயணிகளே, நமது திறமைமிக்க விமானி எவ்வளவோ முயற்சி செய்தும், விமானத்தில் இருக்கும் கோளாறை நிவர்த்தி செய்ய முடியவில்லை. அதனால் இன்னும் சில நிமிடத்தில் விமானம் வெடித்துச் சிதறப் போகிறது. ஆனாலும் எங்கள் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்ததுக்கு நன்றி!" என்று கூறி, பயணிகளை அதோகதியில் விட்டுவிட்டு பாரசூட்டை மாட்டிக்கொண்டு விமானியோடு வெளியே குதித்துவிட்டாள் விமானப் பணிப்பெண்.

விமானப் பணிப்பெண் கூறிய நன்றி போன்று நன்றி கூறுபவர்கள் எண்ணிக்கைதான் அதிகமாகி வருகிறதோ என்று கவலையாக இருக்கிறது!

❑❑

**★ 'ஜீன்ஸ்' ஐஸ்வர்யா ராயை நம்பர் வன் ஆக்குமா?**

எம். தவக்குமார், சுவிற்ஸர்லாந்து.

நம்பவர் வன் ஆக்குகிறதோ இல்லையோ, பம்பர் குலுக்கல் நடத்தியிருக்கிறாராம் கவர்ச்சியில்!

❑❑

**★ இலவச தொலைபேசி அழைப்புக் கிடைத்ததும் பெண்களின் அறுவைக் கச்சேரிகளை கட்டியதாமே?**

சி. மகேசன், கொழும்பு-09.

மிகப் புராதனகாலக் குற்றச்சாட்டு இது! பெண்கள் என்றால் வாய்மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆதிக்க மனோபாவத்துடன் புழுத்துப்போன தமாஷ் விடுகிறீர்கள். ஆண்கள் மட்டும் புதுவருச விடுமுறையன்று அர்த்தத்தோடுதான் கச்சேரி வைத்துக் கொண்டிருக்கிறார்களாக்கும்! அன்றைய சந்தோசம் இரு பாலாருக்கும்தான்!

❑❑

**★ மதவாத சக்தி என்று தன்னால் வர்ணிக்கப்பட்ட வாஜ்பேயியை சந்தனமாலை அணிவித்து பாராட்டியுள்ளாரே கருணாநிதி?**

சோ. யோகராசா, மட்டக்களப்பு.

இப்படித்தான் நடக்கும் என்று நமது காதிலை பூ கந்தசாமியார் முன்னாடியே கற்பனை பண்ணிவிட்டாரே! கருணாநிதியின் இன்றைய அரசியல் என்பது கலப்படமில்லாத சாக்கடை! பதவிக்கு இலாபம் என்றால் பாரதிய ஜனதாவுடனும் பாகம் கொள்வார் கலைஞர். மதவாதமாவது, இனவாதமாவது, அரசியல்வாதிகளது சகல வாதங்களும் பதவிக்காகவே! இங்கும் அது பொருந்தும்!

❑❑

**★ இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு தயார் என்று பக்கம் பக்கமாக அறிக்கைகள் விடுவது, ஆவணங்களை அடுக்கிக் காட்டுவது போன்ற இழுத்தடிப்புக்களுடன் இந்த ஆட்சிக்காலம் முடிந்துவிடும் என்கிறேன். நீர் என்ன கூறுகிறீர்?**

கா. தயாளினி, வவுனியா.

ஓர் அரசர் தன் நாட்டுக்கு முதலமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க நினைத்தார். தனது அமைச்சர்கள் நால்வர் இடையே பரீட்சை வைத்து சிறந்த ஒருவரைத் தேர்வு செய்ய நினைத்தார்.

அந்த நால்வரையும் அழைத்து, "என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட இந்த பூட்டைத் திறக்க நாளைக் காலையில் உங்கள் நால்வருக்கும் ஒரு வாய்ப்புத் தரப்படும். யார் இந்தப் பூட்டை குறைவான நேரத்தில் திறக்கிறாரோ அவரே நாட்டின் முதலமைச்சர்!" என்று அறிவித்தார்.

### பாராளுமன்ற விவாதங்கள்! யாருக்கு இலாபம்?



முதலமைச்சராக வேண்டும் என்ற ஆசையில் விடிய விடிய பூட்டுக்கள் பற்றிய ஆராய்ச்சி நூல்களைப் படித்தார்கள். அந்த நால்வரில் ஒருவர் மட்டும் அதிகம் படிக்காமல் தூங்கிவிட்டார்.

மறுநாள் காலையில், அரச சபையில் பெரியதொரு பூட்டு அவர்கள் முன்பாக வைக்கப்பட்டது. பூட்டின் பிரமாண்டம் அனைவரையும் பயமுறுத்தியது. எடுத்துவந்த நூல்களை புரட்டிப் பார்த்தனர். பூட்டைத் திறக்கும் வழி புலப்படவில்லை.

இரவில் தூங்கிய அந்த நாலாவது அமைச்சர் கடைசியாக எழுந்து வந்தார். பூட்டின் அருகே சென்று நிதானமாக கூர்ந்து பார்த்தார். என்னே ஆச்சரியம்! பூட்டு பூட்டப்படவே இல்லை. சாவியே இல்லாமல் அவர் திறந்தார். அவரையே முதலமைச்சராக்கினார் அரசர்.

இக்கதை மூலம் அறியப்படும் நீதி யாதெனில், பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமானால் முதலில் பிரச்சனையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே உமது கருத்துக்கே எனது வாக்கு!

❑❑

**★ பாராளுமன்றத்தில் கொழும்புக் கைதுகள் தொடர்பாக கூட்டணி விவாதம் நடத்த அரசு அனுமதி கொடுத்துள்ளதே?**

ஏ. சகாயராசா, யாழ்ப்பாணம்.

அதனால் இலாபம் அரசுக்குத்தான். இப்படியான விவாதங்கள் நடத்தி, இவர்கள் அடிப்பது போல அடிக்க, அரசு அழுவது போல நடிக்க, அதனைப் பத்திரிகைகளில் படித்துவிட்டு மக்களின் கோபம் வடிந்து போகும்! பாராளுமன்ற விவாதங்களால் எந்த அழுத்தம் எப்போது தீர்ந்தது? வவுனியா தடை முகாம் விடயத்திலும் பாரளுமன்றத்தில் கூட்டணி விவாதம் கேட்டு வெளுத்து வாங்கியது. பயன் பூச்சியம்! "அரசுமீது நம்பிக்கை இழந்துவிட்டோம்" என்று அகில உலகமறிய சகல தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு உரத்துக் கூறினாலே போதும்! அரசின் போருக்கான பலத்தில் பாதி குறைந்துவிடும்!

❑❑

**★ வாஜ்பேய் இலங்கை வருகிறார் அல்லவா? அப்போது இனப்பிரச்சனை தொடர்பாக கருத்துக் கூறுவாரா?**

கி. ராதாகிருஷ்ணன், கொழும்பு-06.

பெரிதாக ஒன்றும் கூறமாட்டார்! அது தான் இராஜதந்திரம்! அதனை வைத்து எந்த முடிவுக்கும் வரமுடியாது!

❑❑

**★ புகைபிடிப்பதை நிறுத்துமாறு என் காதலரிடம் கூறியும் கேட்க மறுக்கிறாரே?**

பி. கஸ்தூரி, கண்டி.

இப்படித்தான் ஒருத்தர் இருந்தார். அவர் நண்பர் ஒருவர் புகைபிடிப்பதை நிறுத்துவது எப்படி என்ற புத்தகம் ஒன்றை அவருக்குக் கொடுத்திருந்தார்.

ஒருவாரம் கழித்து நண்பர் மறுபடி அவரைச் சந்தித்தார். "என்ன புத்தகம் படித்தாயா?" என்று கேட்டார்.

"ஆமாம், புகைபிடிப்பது மிகத் தப்பு என்று புத்தகத்தில் போட்டிருந்தது, உடனடியாக விட்டு விட்டேன்!" என்றார்.

"எதை? சிகரெட்டையா?"என்றார் நண்பர்.

"இல்லை! அந்தப் புத்தகத்தைப் படிப்பதை!" என்றார் அவர்.

உங்கள் காதலர் உங்களை கைவிடாமல் பார்த்துக் கொள்க!

❑❑

**★ அவசரகாலச் சட்டம் இல்லையானால் என்னாகும்?**

மா. ரங்கநாதன், யாழ்ப்பாணம்.

வகை தொகையற்ற கைதுகள் முதல் வரைமுறையற்ற படைத்தரப்பின் அதிகாரமும் கட்டுப்படுத்தப்படும். அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் இரண்டும் இன்றைய நிலையில் இன ஒடுக்குமுறைக்கான கறுப்புச் சட்டங்கள்!இவ்வாறான சட்டங்களை முன்னர் தென்னாபிரிக்க வெள்ளையின அரசு பிறப்பித்தமையால்தான் உலகமே எதிர்த்தது! நம் நாட்டில் தமிழ்க் கட்சிகளே எதிர்க்கத் தொடங்கினால்தான் இந்தச் சட்டங்கள் உலகின் முன் அம்பலமாகும்!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் போது நெறி 5

## யோசேப்புக்கு ஏற்பட்ட சோதனை

ஆண்டவருடைய ஆசீர்வாதம் பெற்ற யோசேப்பு, எகிப்து நாட்டு மன்னன் பர்வோனின் தளபதியான போத்திபாரின் இல்லத்தையும் அவருடைய அளவற்ற செல்வ வளங்களையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுச் செம்மையாக நடத்திக் கொண்டிருந்தார். இளமையுடன் எழிலும் குலுங்கும் யோசேப்பின் மீது போத்திபாரின் இளம் மனைவி ஆசை வைத்து விட்டாள். எப்படியாவது யோசேப்பை தனது இச்சைக்கு இசையவைக்க அவள் முயற்சித்தாள். தன்னை அடிமை நிலையிலிருந்து உயர்த்தி, உயர் நிலையிலிருந்த தனது குடும்பத்தில் ஒருவனாகவே மாற்றி விட்ட போத்திபாரைத் தனது தந்தைக்கு நிகராகவே யோசேப்பு மதித்தார். போத்திபாரின் மனைவி இளம் பராயத்தினளாக இருந்த போதிலும் அவரைத்தன் அன்னைக்குச் சமமாகவே யோசேப்பு மதித்து மிக்க மரியாதையுடன் நடக்கலானார். ஆனால் அம் மாதின் கெட்ட நோக்கத்தை உணர்ந்த அவர், அப் பெண்ணிடமிருந்து ஒதுங்கியே நடக்கலானார்.

போத்திபாரின் பணியாட்களோ உறவினரோ இல்லாத வேளைகளில் அப் பெண் யோசேப்பின் அருகே வந்து தனது ஆசை வலையில் அவரை வீழ்த்த அரும்பாடுபட்டாள். யோசேப்பு இதற்கு இடம் கொடாது நழுவிச்சென்று கொண்டிருந்தமையினால் அம் மாது அவர் மீது சினமுற்றாள். ஆசையை அடக்க முடியாத அம்மாது அவரைப் பழி தீர்க்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

### சூழ்ச்சிவலை

எவருமே இல்லாத ஒரு நாள், யோசேப்பு போத்திபாரின் இல்லத்தில் அலுவலாக இருந்தபோது அப்பெண் அவரைத் தனது ஆசைக்கு இணங்குமாறு அழைத்தாள். அவர் மறுக்கவே யோசேப்பின் மேலங்கியைப் பிடித்திழுத்தாள். அவளிடத்திலிருந்து தப்பிக் கொள்வதற்காக, மேலங்கியை அப் பெண்ணின் கையிலேயே விட்டுவிட்டு எழுந்தோடிவிட்டார். பழிதீர்க்கச் சரியான சந்தர்ப்பம் கிட்டிவிட்டதை உணர்ந்த அப்பெண் கூக்குரலிட்டாள். அவளுடைய அவலக்குரல் கேட்டு ஓடி வந்தவர்களிடம், யோசேப்பு தன்னை அவருடைய ஆசைக்கு அழைத்து அணைக்க முயன்றதாகப் பொய் கூறி, அழுது புலம்பினாள். இதைக் கேட்டவர்களும் உண்மையென நம்பினர். போத்திபாரின் காதுகளுக்கும் செய்தி எட்டியது. மனைவியின் கூற்றை உண்மையென நம்பிய அவர் ஆத்திரங்கொண்டார். விசாரணை எதுவுமின்றி யோசேப்பை சிறையிலிட்டார்.



ஆண்டவர் மீது அளவற்ற பக்தி செலுத்துபவரான யோசேப்பு தான் நிரபராதி என்பதனால் மனதில் எவ்வகையிலும் கவலை கொள்ளவில்லை. ஆண்டவரின் சோதனை அவலத்துக்கு அடிகோலாது என்று அவர் திடமாக நம்பினார். மேலும் நன்மைகள் கிடைக்கவே இத்தகைய சோதனையை ஆண்டவர் அருளியிருக்கிறார் என்றே மனதைத் திடப்படுத்தி, பிரார்த்தனையில் தன் காலத்தைக் கழித்தார்.

சிறை அதிகாரி யோசேப்பைப் பார்த்த மாத்திரத்திலேயே அவருடைய தேகத்திலே வீசிய தெய்வீக ஒளியினை அவதானித்தார். சாந்தம் தவழும் யோசேப்பின் முகம், அவர் ஒரு ஒழுக்க சீலர் என்பதை எடுத்துக்காட்டிற்று. 'இவர் எதுவித குற்றமும் செய்யாத நிரபராதியே,' என்று உள்ளூர உணர்ந்தமையினால் சிறையிலுள்ள ஏனைய கைதிகளை மேற்பார்வையிட்டு வழி நடத்தும் பொறுப்பினை யோசேப்பிடம் ஒப்படைத்தார்.

எகிப்து நாட்டரசன் பார்வோனுக்கு மதுபானம் தயாரித்துப் பருகத் தரும் ஒருவனும் உணவு தயாரித்துப் பரிமாறும் பணியாளர்களின் தலைவனுமான மற்றுமொருவனும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு யோசேப்பு இருந்த சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

மது பரிமாறுவோனும் உணவு தயாரிப்போரின் தலைவனும் ஒருநாள் மிகவும் கவலையுடன் காணப்பட்டனர். கைதிகளைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்த யோசேப்பு அவர்கள் இருவரையும் அணுகி, அவர்களின் கவலைக்குக் காரணம் என்ன என்று வினவினார். அவர்கள் இருவரும் முதல் நாளிரவு உறக்கத்தின்போது தாங்கள்கண்ட கனவுபற்றிக் கவலையுடன் கூறினர். கனவின் முழு விபரத்தையும் தன்னிடம் கூறுமாறு யோசேப்புக் கேட்டார். அவர்களும் சொன்னார்கள்.

### கனவும் பலனும்

பானம் தயாரிப்போனின் கனவு பற்றி அவன் கூறியதாவது: "என் முன்னே மூன்று திராட்சைக் கொடிகள் பழுத்த பழங்களுடன் வளைந்து நின்றன. என்னிடமிருந்த பார்வோன் மன்னரின் மதுக்கிண்ணத்துள் திராட்சைப் பழங்களிலிருந்த ரத்தைப் பிழிந்தெடுத்தேன். பார்வோனின் கரத்தில் பழரசக் கிண்ணத்தைக் கொடுத்தேன்!"

இவ்வாறு அவன் கூறியதும், யோசேப்பு அக்கனவுக்கான பலனை இவ்வாறு கூறினார்:

"மூன்று திராட்சைக் கொடிகளும் மூன்று நாட்களைக் குறிக்கும். இன்னும் மூன்று நாட்களில் பார்வோன் மன்னர் உன்னை அழைத்து, முன்னர் நீ பார்த்த அதே பணியில் உன்னை அமர்த்தப்போகிறார். உன்மீது எக்குற்றமும் இல்லை, என்று மன்னர் கண்டு கொண்டார். உனக்கு இனி மேல் எக்குறையும் இல்லை!"

இதுதான் பானம் தயாரிப்பவனின் கனவுக்குரிய பலன் என்பதை யோசேப்பு விளக்கினார். இதைத் தொடர்ந்து அரசனுக்கு உணவு தயாரிப்போரின் தலைவனின் கனவு பற்றி யோசேப்பு வினவினார்.

அவன் கூறியது இதுதான்:

மன்னர் பார்வோனுக்கெனத் தயாரிக்கப்பட்ட அப்பங்களை மூன்று கூடைகளில் தலையில் வைத்துச் சுமந்து கொண்டு போனேன். சில பறவைகள் பறந்து வந்து மேல் கூடையிலிருந்த அப்பங்களனைத்தையும் தின்றுவிட்டுப் பறந்து சென்றன. இதுவே நான் கண்ட கனவு."

கனவின் விபரத்தைக் கேட்ட யோசேப்பு, கனவு கண்டவனைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு, "நீ கண்ட கனவு உனக்கு நல்ல பலனை அளிக்கப்போவதில்லை. மூன்று கூடைகளும் மூன்று நாட்களைக் குறிக்கின்றன. இன்னும் மூன்று நாட்களில் அரசர் உன்னை அழைப்பார். ஏற்கனவே நீ செய்த குற்றத்துக்கான தண்டனை உனக்கு வழங்கப்படும். உன்னுடைய தலை சீவப்படும். நீ கழுவில் ஏற்றப்படுவாய்!" என்றார்.

யோசேப்பு இரு கைதிகளுக்கும் அளித்த விளக்கத்தின்படி மூன்றாவது நாளன்று மன்னனுக்குப் பிறந்த நாள் விழா. அரண்மனைக் காவலர்கள் சிறைச்சாலைக்கு வந்தனர். இருவரையும் அழைத்துச் சென்றனர். அவர்கள் காவலர்களுடன் போவதற்கு முன், பானம் தயாரிப்போனைப் பார்த்து யோசேப்பு, "நான் கூறியது போல் உனக்கு உனது பழைய வேலை கிடைத்து நீ மகிழ்ச்சியுடன் வாழ்வாய்! ஆனால் உன்னிடம் ஒன்று கூறுகிறேன். நானும் எக்குற்றமும் செய்யாமல் இந்தச் சிறையில் இருக்கிறேன். இருப்பினும் ஆண்டவர் எனக்கு எக்குறையும் வைக்கவில்லை. ஆனால் தொடர்ந்தும் இச்சிறையில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. மன்னவர் மகிழ்ச்சியாக இருக்கும்போது என்னைப் பற்றி அவரிடம் கூறு. நான் எக் குற்றமும் செய்யாதவன் என்று கூறி என்னை விடுதலை செய்ய ஏற்பாடு செய்!" என்று கேட்டுக் கொண்டார். அவனும் அவ்வாறே மன்னரிடம் கூறி விடுதலை வாங்கித் தருவதாக வாக்களித்து விட்டுப் போனான். ஆனால் யோசேப்பின் கோரிக்கையை மறந்துவிட்டான்.

### மன்னவன் கண்ட கனவு

இரண்டு வருடங்கள் உருண்டோடிவிட்டன. பார்வோன் மன்னன் இரவு தூங்கும் போது கனவு கண்டு விழித்தெழுந்தான். கனவில் கண்ட காட்சி மன்னரைக் கவலை கொள்ள வைத்தது. சற்று நேரம் விழித்திருந்து விட்டு படுக்கையில் படுத்துத் தூங்கிய மன்னனை மற்றுமொரு கனவு துயிலெழ வைத்தது. இதனால் மேலும் கலவரமடைந்து தூங்க முடியாமல் பார்வோன் தவித்தான்.

பொழுது புலர்ந்ததும் தனது அமைச்சர்களை அழைத்து தான் கண்ட கனவுகள் பற்றிக் குறிப்பிட்டு, அவற்றுக்கான விளக்கம் கேட்டான். எவரும் கனவுகளுக்கான சரியான பலனைக் கூறமுடியவில்லை. நாட்டின் மதப் பெரியார்கள், அறிஞர்கள் ஆகியோரை அழைத்து கனவுகளுக்குப் பலன் கூறுமாறு கேட்டான். ஆனால் அவர்கள் கூறிய பலன்கள் எவையும் மன்னனுக்குத் திருப்தி தரவில்லை. மன்னனை மென்மேலும் கவலை வாட்டியது.

மன்னன் தான் கண்ட கனவுகளால் கவலை கொண்டிருப்பதை அவதானித்த மது தயாரிப்போனுக்கு, இரண்டு வருடங்களின் முன்னர் சிறையில்- தன் கனவுக்குப் பலன் கூறிய யோசேப்பின் நினைவு அப்போது தான் வந்தது. பார்வோனிடத்தில் சிறையிலுள்ள யோசேப்பைப் பற்றித் தெரிவித்தான். மன்னன், சிறையிலுள்ள யோசேப்பை அழைத்து வருமாறு தனது ஏவலாளர்களை அனுப்பிவைத்தார்.

யோசேப் ஆண்டவரைத் துதித்தார். ஆண்டவனுடைய சோதனையிலிருந்து மீட்சி கிடைத்துவிட்டது என்று எண்ணி நன்றி கூறினார். தன்னை அலங்கரித்துக் கொண்டு ஏவலாளர்களுடன் அரண்மனை சென்றார். யோசேப்பைக் கண்ட மன்னன் பார்வோன், யோசேப்பின் முகத்தில் ஒரு தெய்வீகக்களை வீசுவதைக் கண்டார். தான் கண்ட கனவுகளுக்கு உரிய பலனைத் தெளிவாக இந்த இளைஞன் கூறுவான் என்று திடமாக நம்பினார். தகுந்த மரியாதையுடன் யோசேப்பை இருக்கையில் அமர்த்தினார். தான் கண்ட கனவுகளை மன்னர் யோசேப்பிடம் விபரமாகக் கூறலானார்:

"நான் நைல் நதிக்கரையில் நின்று கொண்டிருந்தேன். நதியிலிருந்து ஏழ அழகிய- கொழுத்த பசுக்கள் வெளியே வந்து நதிக்கரையில் மேய்ந்து கொண்டிருந்தன. இதனைத் தொடர்ந்து அதே நதியிலிருந்து அருவருப்பான தோற்றமுடைய- மெலிந்த ஏழு பசுக்கள் வெளிவந்தன. முன்பு வந்த ஏழு சிறந்த பசுக்களையும் பிந்தி வந்த ஏழு பசுக்களும் விழுங்கிவிட்டன. இருப்பினும் அந்த அருவருப்பான பசுக்கள் அதே மெலிந்த தோற்றத்திலேயே காணப்பட்டன."

(தொடர்ந்து வரும்)

**திருமறை ③ விடை: தெராகு.**

**பரிசு பெறுவோர்:**

1. யோ. யேசுதாஸ், 26/6, பாரதி ஒழுங்கை, மட்.தண்டவன்வெளி.
2. வி. ஜெகதீஸ்வரன், மெல்போட், புசல்லாவ.
3. எஸ். வத்சலா தன்னுகை டிவிஷன், பசறை.
4. செல்வன் சி. ஸ்ரீரவி, குருநாகல் வீதி, சிலாபம்.
5. ஏ. செபஸ்தியன், 24/2, உடுப்பிடிய, உக்குவளை.

**திருமறை 05 வினா:-** பார்வோன் மன்னனால் சிறையிலடைக்கப்பட்ட இருவருடைய தொழில் என்ன?

ஏப்ரல். 25க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 05 – தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## செல்வியின் பிடிவாதம்

இந்தியப் பிரதமர் வாஜ்பேய் அவர்களும் செல்வி ஜெயலலிதாவும் சந்திக்கின்றனர். மணிரத்னம் படப் பாணியில் அவர்கள் பேச்சுவார்த்தை நடக்கிறது.

ஜெயா: வணக்கம்!
வாஜ்: வணக்கம்!
ஜெயா: நலமா?
வாஜ்: நலம்!
ஜெயா: வாழ்த்துக்கள்.
வாஜ்: நன்றி.
ஜெயா: கலைக்கணும்!
வாஜ்: எதை? எதைக் கலைக்கணும்!



ஜெயா: தி.மு.க ஆட்சியை கலைக்கணும். கருணாநிதியைக் கலைக்கணும்! முடிஞ்சா நாட்டை விட்டே கலைக்கணும்!
வாஜ்: முடியாது!
ஜெயா: ஏன்! ஏன் முடியாது!
வாஜ்: அதுதான்! அப்படித்தான்!
ஜெயா: என் ஆதரவு வேண்டாமா?
வாஜ்: வேணும்!
ஜெயா: அப்ப கலையுங்க!
வாஜ்: அது மட்டும் முடியாது!
ஜெயா: ஆதரவை வாபஸ் வாங்கிக்க வேண்டி வரும்.
வாஜ்: வாங்கிக்குங்க!
ஜெயா: பின்னாடி என்ன பண்ணுவீங்க?
வாஜ்: என்ன பண்ணணுமோ அதைப் பண்ண வேண்டியதுதான்!
ஜெயா: ஃப்ளீஸ் கலைச்சிருங்க.
வாஜ்: ஃப்ளீஸ் அந்த நினைப்பை கலைச்சிருங்க!
ஜெயா: கலைச்சிடுறேன்! எல்லாவற்றையும் கலைச்சிடுறேன்! முதல்லே அவர்களை கலைச்சிடச் சொல்லுங்க. என்மேலே போட்ட வழக்குகளை கலைச்சிடச் சொல்லுங்க. என் சசிமேலே போட்டாங்களே வழக்குகள், அதை எல்லாம் கலைச்சிடச் சொல்லுங்க! என் சொத்துக்களை யெல்லாம் பட்டியல் போட்டு முடக்கினாங்களே, அந்த ஃபைலை எல்லாம் கலைச்சிடச் சொல்லுங்க!
வாஜ்: முடியாது, நான் சொல்ல முடியாது....
ஜெயா: ஏன்?
வாஜ்: சிரிப்பாங்க! பிரதமரே இப்படிப் பண்ணலாமா என்று கைகொட்டிச் சிரிப்பாங்க.
ஜெ: பண்ணிட்டிங்களா, முடிவே பண்ணிட்டிங்களா?
வாஜ்: முடிவு, என்ன முடிவு?
ஜெ: கலைக்கிறதில்லே என்ற முடிவு.
வாஜ்: ஆமா! ஆமா! வேறு ஏதாவது பேசுங்க.
ஜெ: நீங்க பேச நினைப்பதை எல்லாம் நான் பேச முடியாது. நான் பேச நினைப்பதைத்தான் நீங்க பேச வேண்டும்.
வாஜ்: பேசலாம், நீங்க நல்லதைப் பேசுங்க, நானும் நீங்க பேசுறதைப் பேசலாம். நீங்க நடக்கக் கூடியதாக பேச நினையுங்க, நான் அதைப் பேசலாம்.
ஜெ: இதுதான், இதேதான் உங்கமுடிவா?
வாஜ்: ஆமா! இதுதான்!
ஜெ: அப்ப நான் புறப்படவா?
வாஜ்: புறப்படுங்க!
ஜெ: எனக்கு கோபம் வந்தா என்னாகும் தெரியுமா?
வாஜ்: தெரியும்! ரொம்பத் துள்ளுவீங்க, தெரியும்!
ஜெ: உங்க ஆட்சி என்னாகும் தெரியுமா?
வாஜ்: நீங்க போனா தெலுங்கு தேசம் ஆதரவு தருவாங்க. தி.மு.க.காரங்க ஆதரவு தருவாங்க. வாங்கிக்கலாம்.
ஜெ: எங்க இலட்சிய உறவு என்னாகிறது?
வாஜ்: அலட்சிய உறவா நீங்க நினைக்கிறப்போ என்ன பண்ணுறது? முறியும்! முறியட்டும்!
ஜெ: துடிக்க மீசை இல்லை என்பதால், கோபத்தை மட்டும் அடக்கிக் கொள்கிறேன்.
வாஜ்: நல்லது!
ஜெ: எது, எது நல்லது?
வாஜ்: கோபத்தை அடக்குறது!
ஜெ: இப்போ போறேன். ஆனா வருவேன்.
வாஜ்: போங்க, வாங்க.
ஜெ: கலைக்கணும்.
வாஜ்: முடியாது!
ஜெ: முடியும். முடியணும். வருவேன். யோசித்து வையுங்க.
(வாஜ்பேய் சோகமாக அமர்ந்திருந்து பாடுகிறார்)

*கொடுத்ததெல்லாம் கொடுத்தாள்– அவள்*
*யாருக்காக கொடுத்தாள்?*
*ஆதரவா கொடுத்தாள்– இல்லை*
*ஆக்கினையா கொடுத்தாள்?*

*சிறுபான்மை ஆட்சியென்றால்*
*சீண்டல்கள் தொடர்ந்திடுமா*
*பெரிய பலம் இல்லையென்றால்*
*பெரும் தொல்லை சூழ்ந்திடுமா?*

## கலைஞர் வாழ்த்து

**கலைஞர் கருணாநிதி பிரதமர் வாஜ்பேய் அவர்களை சந்தித்தால்.....**

கலை: வாழ்க, வளர்க
வாஜ்: வாழ்க, வளர்க.
கலை: கலைப்பீங்களா?
வாஜ்: மாட்டேன்!
கலை: ஏன்?
வாஜ்: அது தப்பு!
கலை: அரசியலில் தப்பு ரைட்டு என்றெல்லாம் இருக்குமா?
வாஜ்: இருக்கும்! என்கிட்டே இருக்கும்.
கலை: (நிம்மதியாக) உங்கள் தந்தையார் பெயர் என்ன?
வாஜ்: அடல் பிஹாரி
கலை: அடல் பிஹாரியின் மகனே வருக, திடமான ஆட்சி தருக!
வாஜ்: நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக என்று சொன்னது யாருங்க.
கலை: அடியேன் தான்!
வாஜ்: நல்லாயிருக்கு, ரொம்ப நல்லாயிருக்கு.
கலை: உங்களுக்கு கவிதை பிடிக்குமா?
வாஜ்: பிடிக்கும்!
கலை: கவிதை படிப்பது மட்டுமல்ல, வடிப்பீர்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மையா?
வாஜ்: உண்மைதான்!
கலை: கருவைக் கலைப்பதுபோல, இந்தக் கருணாநிதி ஆட்சியை கலைக்கச் சொல்லுகிறார் திருவளர் செல்வி. பெருமனம் கொண்ட தாங்கள் அதற்கு ஒருநாளும் சம்மதிக்கக்கூடாது!
வாஜ்: மாட்டேன்!
கலை: நேர்மையின் உறைவிடம் நீங்கள்.
வாஜ்: ரொம்பப் புகழாதீர்கள்.
கலை: புகழ்ச்சி விரும்பாத தலைவர் உண்டா? இகழ்ச்சி பொறுக்காத தலைவர் உண்டா? உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி!
(வாஜ்பேய் சிரித்துக்கொண்டு பாடுகிறார்)

*சிரிப்பு வருது, சிரிப்பு வருது*
*சிரிக்கச் சிரிக்க சிரிப்புவருது.*
*சின்ன மனுஷன் பெரிய மனுஷன்*
*செயலைப் பார்க்க சிரிப்பு வருது*



*வாரடி, லாரடி லாரடி பாரடி*
*மேடை ஏறிப் பேசும் போது*
*ஆறுபோல பேச்சு*
*கீழே இறங்கிப் போகும்போது*
*சொன்னதெல்லாம் போச்சு*

*காசை எடுத்து நீட்டு*
*கழுதை பாடும் பாட்டு*
*ஆசை வார்த்தை காட்டு*
*உனக்குக்கூட வோட்டு"*

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# விளையாட்டு உலகம்




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657





← பெற்றாருடன் கடைகளுக்குச் செல்லும் சிறார்கள், குறிப்பிட்ட ஒரு பொருளைக் காட்டி "இதனை இப்போதே எனக்கு வாங்கித் தா" என்று அடம்பிடிக்க ஆரம்பித்துவிடுவர். அத்தகைய குழந்தைகளைக் கவரும் பொருள் வேறொன்றுமில்லை- சாதாரண பொம்மைதான்.

"R"us'.என்பது தான் இந்தப் பொம்மை உற்பத்தி நிறுவனம் தயாரிக்கும் பொம்மைகளுக்குத்தான் உலகில் கிராக்கி. இது அமெரிக்க நிறுவனம்.

உலகப் பிள்ளைக் அனைவரையும் கவர வேண்டும் என்ற நோக்கத்தில் இன்று இந்நிறுவனம் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளமையினால், வியாபாரம் 'ஓஹோ' என்று வானுயர உயர்ந்துவிட்டது.

குழந்தைகளின் கண்களைக் கவரக்கூடிய வகையிலான சகல பொம்மைகளையும் இந்நிறுவனத்துக்கான பல தொழிற்சாலைகளில் உருவாக்கி வருகின்றனர். 1992ம் ஆண்டு மட்டும் 6 பில்லியன் டொலர் பெறுமதியான பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. உலகத்தின் பல நாடுகளில் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

குழந்தைகளை மட்டுமல்ல பெரியவர்களைக்கூட கவருகின்றன இந்த பொம்மைகள். குட்டி கார்கள், குட்டி சைக்கிள்கள், குட்டி விமானங்கள் என்று பல ரகமான பொம்மைகளை அசத்தலாக தயாரிக்கிறார்கள். உலகில் பல பொம்மை தயாரிப்பு நிறுவனங்களால் "R" us' நிறுவனத்துடன் போட்டி போட முடியவில்லை.

பொம்மைகள்தானே என்று லேசாக நினைக்கக்கூடாது. அவற்றை தயாரிப்பதிலும் கச்சிதம், தரம் என்பவை முக்கியம். எல்லாப் பொம்மைகளும் குழந்தைகளைக் கவருவதில்லை. இனிமேல் பொம்மை வாங்கும்போது தரம் பார்த்து வாங்கிக் கொடுங்கள்.

# ஆபத்து



← பல்கேரியா நாட்டில் ஒரு இலட்சம் பேரில் 800 பேர் என்ற வீதத்தில் பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஆனால் வட கனடா, ரசியா, கீரின்லான்ட் மக்கள் கொடுத்து வைத்தவர்கள். இங்கெல்லாம் விரல்விட்டு எண்ணத்தக்கோர் மட்டுமே மாரடைப்பு, பாரிசவாதம் என்பவற்றால் பாதிக்கப்படுகின்றனர். அவை கடும் குளிர் பிரதேசங்கள் என்பதால், உடலில் சேரும் கொழுப்பு செலவாகி விடுகிறது.

கொழுப்பான உணவுகளை உண்பதால் உடலில் மேலதிக கொழுப்பு சேருகிறது. இதனால் இரத்தக் குழாய்களில் ஒருவகை சதை வளர்ச்சி ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனால்தான் மாரடைப்பு, பாரிசவாதம் என்பவை ஏற்படுகின்றன.

சொன்னால் அதன் தாக்கம் புரியாது. இதோ படத்தில் பாருங்கள். குருதிக் குழாயின் குறுக்கு வெட்டு முகத் தோற்றம் இது. குருதிக் குழாயின் ஓரங்களில் கொழுப்பு படிந்திருக்கிறது. குருதிக் குழாயின் உள்ளே மாங்காய் வடிவில் தெரிகிறது பாருங்கள், அதுதான் உள் சதை வளர்ச்சி.

என்ன, பயமாக இருக்கிறதா? அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. கொழுப்பும் அப்படித்தான். நொறுக்குத் தீனிப் பிரியர்கள், எண்ணெய்யில் பொரித்த உணவுப் பண்டங்கள் மற்றும் கொழுப்புள்ள உணவுகளை ஒரு பிடி பிடிப்போரே, இந்தப் படத்தைப் பாருங்கள். உங்கள் குருதிக் குழாயிலும் இப்படி ஆகவேண்டுமா?

↑ மனிதர்களை இன்று அச்சுறுத்தும் பொல்லாத நோய் மாரடைப்பு. பொட்டென்று உயிரைப் போக்கி விடுகிறது. நம் நாட்டிலும் மாரடைப்பு மரண வீதம் உயர்ந்துவருகிறது. கைத்தொழில் நாடுகளில் 50 வீதமான மரணங்கள் இதயம் மற்றும் இரத்த கலங்களில் ஏற்படும் நோய்களால் ஏற்படுகின்றன.




# ஓட்டம்

↑ வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போன்று இருக்கும் இவர் ஓடும்போது அப்படி ஒரு அரசு வேகம்! இந்த தடகள வீராங்கனையின் பெயர்: ஸ்வெற்லானா மாஸ்டர் சோவா. ரசியாவைச் சேர்ந்தவர்.

1996 ஆகஸ்டில் இரண்டு சாதனைகளை நிலைநாட்டினார். ஆகஸ்ட் 14ல் சுவிற்ஸர்லாந்தில் உள்ள சூரிச் நகரில் ஒரு மைல் நீளத்தை 4 நிமிடம் 12.56 நொடிகளில் ஓடி முடித்தார்.

அன்றிலிருந்து ஒன்பது நாட்களின் பின்னர், பெல்ஜியம் நாட்டில் உள்ள பேர் செல்ஸ் நகரில் நடந்த போட்டியில் ஆயிரம் மீட்டர் தூரத்தை 28.98 நொடிகளில் ஓடி முடித்து உலக சாதனை படைத்தார். இன்றுவரை யாராலும் முறியடிக்கப்படவில்லை.

# வெள்ளிப் பனிமேலே

↘ வெளிநாடுகளில் நம்மவர்களை அடிக்கடி வாட்டுவது குளிர்தான். வீதிகளில் நடக்கவே முடியாதளவுக்கு பனிக் கட்டிகள் குவிந்து கிடக்கும். வெளிநாட்டவர்கள் வேலைக்கே போக மாட்டார்கள். நம்மவர்கள்தான் வேலைக்கு செல்வார்கள். எப்படியாவது உழைக்க வேண்டும் என்ற கட்டாயம். அப்படியானால்தானே இங்கு பணம் அனுப்பலாம்.

குளிர் நாடுகளில் பனிப் புயல் வீசுவது சர்வசாதாரணம். பனிக் கட்டிகள் மிகப் பயங்கரமாக பறந்துவரும்.

உலகில் இதுவரை வீசிய பனிப் புயல்களில் மிகப் பயங்கரமான பனிப்புயல் 1993 மார்ச் மாதம் 12ம் 13ம் திகதிகளில் அமெரிக்காவின் கிழக்குக் கரையில் வீசிய புயல்தான்.

இப் புயலினால் ஐநூறுபேர் வரை மாண்டனர். பனிக்கட்டிகள் புயலில் பறந்துவந்து தாக்கியதிலேயே பலர் இறந்தனர். அது மட்டுமல்ல கட்டடங்கள் பலகூட இடிந்து தகர்ந்தன.

வீதிகள் எங்கும் வெள்ளி மலைபோல குவிந்து கிடந்தன பனிக்கட்டிகள். அதனால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன. வெள்ளம் என்றால்கூட நீந்திக் கடக்கலாம். மலையாக குவிந்த பனிக்கட்டிகளை கடப்பது மகா கஷ்டம்.

இப் பனிப் புயலினால் ஏற்பட்ட நஷ்டம் மொத்தம் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று கணக்கிடப்பட்டது. பனிப் புயலால் இத்தனை பாரிய நஷ்டம் வேறெங்கும் இன்றுவரை ஏற்பட்டதில்லை.





## அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்

## சிவராசா தேவப்பிரியா(சுபா)

மலர்வு: 28.03.1974

உதிர்வு: 24.10.1997

தேனமுதே திருவுருவே தேவப்பிரியா
சுபாவெனும் சோதரியே சுந்தர முகத்தவளே
வாழ்ந்து மணம் பரப்பி வளம் பொங்கும் நாளையிலே
நொந்து மனம் நொடிந்து நொடிப்பொழுதினில் மறைந்தது ஏன்?

உன் பிரிவால் துயருறும்
உன் அம்மா, சகோதரர்கள்.

எங்கள் சுபாவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தந்தி, தொலைபேசி, கடிதமூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும் மற்றும் பலவழியிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 30.04.98 அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம். தகவல்:- T.ஈஸ்வரன்-திருகோணமலை.



படிப்பகம்